# உள்ளத்தைக் கிள்ளாதே

## 1

எத்தனை முறை போட்டாலும் சரிவராக அந்த கம்பெனியின் கணக்கைப் பொறுமையுடன் மீண்டும் சரிபார்க்கையில் பக்கத்துத் தொலைபேசி அவளை அழைத்தது.

உடனே அதற்கு உயிர் கொடுத்தாள் சுமித்ரா. எதிர்முனையில் குரலை உணர்ந்தவுடன்,

"அம்மா..." என்று ஆச்சரியப்பட்டாள்.

பொதுவாக மங்களம் மகளின் ஆபிஸுக்குப் போன் போட்டுப் பேசும் ரகமில்லை.

"சுமி, நீ இப்பவே கிளம்பி வீட்டுக்கு வாயேன். அந்தக் கட்டன்காரி இன்னிக்கு என்ன குண்டு போடப் போறாளோன்னு மனசு திக் திக்குன்னு அடிச்சுக்குது. பயம்மா இருக்கு. சீக்கிரம் வா!" என்று மங்களத்தின் குரல் அவள் செவியில் பாய,

''என்னம்மா, இதுதான் வழக்கமா நடக்குதே. புதுசா பயப்பட என்ன இருக்கு. டென்ஷன் ஆகாதீங்க!'' - மெல்லிய குரலில் சுமித்ரா தாயிடம் பதில் கொடுக்க,

''இப்பத்தான் அந்தக் கடன்காரி ரூமில் ஒரு லெட்டரைப் பார்த்தேன். அதைப் படித்ததிலிருந்து அடிவயிற்றைக் கலக்குது. இப்படி ஒரு பொண்ணு எனக்குப் பிறக்காமலேயே இருந்திருக்கலாம். அய்யோ...'' என்று மேலும் ஏதேதோ சொல்ல, அம்மா காரணமற்று அப்படிப் பதட்டமடையமாட்டாள் என்று புரிந்து மேலும் பேச்சை வளர்த்து நேரத்தை விரயம் செய்யாமல், உடனே கிளம்புவதாகச் சொல்லிக் கணக்கைப் பாதியில் நிறுத்திவிட்டுக் கிளம்பினாள் சுமித்ரா.

ஒரு மணி நேரம் முன்னதாகக் கிளம்புவதாக பர்மிஷன் லெட்டரை உரியவரிடம் சேர்த்து விட்டு ஆபீஸை விட்டு வெளியே வந்த சுமித்ரா, அழகிய பெண். ஐந்தடி ஐந்தங்குலத்தில் எலுமிச்சம் பழ நிறத்தில், கைதேர்ந்த சிற்பி செதுக்கிய சிற்பமாகப் பளிச்சிட்டாள்.

ஓட்டி வந்த 'கைனடிக் ஹோண்டா'வை வீட்டு வாசலில் நிறுத்தி எதிர்க்காற்றில் அலை அலையாய்ப் பறந்து கண்களை மறைத்த தன் கூந்தல் சுருளை மெல்லப் பின்னுக்குத் தள்ளினாள்.

வாசலிலே நின்று அவள் வரவிற்குக் காத்து நின்ற மங்களம், தன் மூத்த மகளைக் கண்டதும் பெருமூச்செறிந்தாள்.

அவள் பெற்ற இரு செல்வங்களும் எதிர் எதிர்த் துருவங்கள் தான்.

''சுமி!'' என்று தொடங்கும் முன் அவள் கண்களில் குளம் கட்ட, சுமித்ராவுக்கு என்ன விஷயமாக இருக்கும் என்று உள்ளுக்குள் மெதுவாகப் பயம் ஏறத் தொடங்கியது. சுமித்ரா தாயை வீட்டிற்குள் அழைத்து வாசல் கதவை மூடினாள்.





உள்ளங்கையில் சுருட்டி, வேர்வையில் நனைந்து போயிருந்த கசங்கிய காகிதத்தைக் கைநடுங்கலுடன் சுமித்ராவின் முன் நீட்டினாள் மங்களம்.

''ஸ்வாதி'' என்று தங்கையின் பெயரில் தொடங்கி அன்பன் சஞ்சய் என்று முடிக்கப்பட்டு ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த கடிதத்தின் சாரம் இதுதான்.

''நீயும் நானும் நாளை இந்நேரத்தில் கணவன் - மனைவி''

''சுமி! எனக்குக் கைகால் எல்லாம் உதறுது. அப்பாவுக்கு என்ன பதில் சொல்றது. ஏற்கெனவே அவளால் அப்பாவிற்கு இரத்தக் கொதிப்பு ஏறிப் போயிருக்கு. இப்ப இது வேற. என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. ரொம்ப பயம்மா இருக்கும்மா!'' என்று மங்களம் தொடர்ந்து புலம்பியபடி இருக்க,

சுமித்ராவிற்குச் சற்று நேரம் ஐம்புலன்களும் செயலற்றுப் போன நிலைதான்.

தங்கையின் விஷயமாக மிகவும் நல்லவிதமாக எதையும் எதிர்பார்க்க முடியாதுதான் என்றாலும், இது அதிகப்படி.

''இனி இப்போ மாலையும் கழுத்துமா வந்து என் முன்னாடி நிற்கப் போறா. நான் அவளைக் கொன்னுட்டு ஜெயிலுக்குப் போகப் போறேன். அதுதான் நடக்கப் போகுது!'' உச்சகட்டக் கோபத்தில் மங்களம் சொல்ல,

வாசல் மணி அடித்தது. சொன்னது போலவே மகள் வந்துவிட்டாளா என்று கண்கள் செவசெவக்க ஓடிப் போய் மங்களம் கதவைத் திறக்க, கூரியர் நபர் நின்று கொண்டிருந்தார். ''எனக்குப் பிடித்தமானவருடன் நான் போகிறேன். தேட வேண்டாம்!'' என்று மங்களத்திடம் இருந்து பெருங்குரல் எழும்பியது.

ஓடியே போய்விட்டாள்?! குசவனுக்கு ஒரு வருஷம், கம்பெடுத்தவனுக்கு ஒரு நிமிஷமாய், இத்தனை வருடம்

கட்டிக்காத்த மானத்தை நிமிடத்தில் விற்றுக்கொண்டு வந்த பெண்ணை நெஞ்சு ஏசியது.

பெற்றவர்கள், வளர்த்தவர்கள் என்ற மட்டுமரியாதையும் இன்றி, ஆடு, மாடு போல அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, தனக்கென்று ஒரு துணையைத் தேடிக் கொண்டு, யாரிடமும் சொல்லாமல், கொள்ளாமல், வாழ்க்கை அமைத்துக் கொள்வது என்பது சமுதாயத்தில் பெற்றவர்களுக்கு எவ்வளவு பெரிய அவமானம்.

இவள் ஏன் இப்படி மாறிப் போனாள் என்பது சுமித்ராவிற்கு ஒரு கேள்விக்குறிதான்.

தனியார் கம்பெனியில் ஆட்டோமொபைல் இன்ஜினியர் ஆக வேலை பார்த்த சுமித்ராவின் அப்பா சின்னத்துரைக்கும் செய்தி போனது.

அவர் வீட்டுக்கு வந்ததும் பேசிய வார்த்தைகள், "வானம் பார்த்த பூமியும், மானம் பார்க்காத உன் பொண்ணும் ஒரே ஜாதிதான். இனி அவளைப் பற்றிய பேச்சு வீட்டில் எடுக்கக் கூடாது!"

அதன் பின் அவர் யாரிடமும் ஒன்றும் பேசவில்லை. கால் அசடி சோபாவில் சரிந்துவிட்டார்.

பெண் ஓடிவிட்டாள் என்ற செய்தி ஏழேழு ஜென்மத்தில் செய்த பாவத்திற்கான தண்டனையாக எண்ணிப் புழுங்கினார்.

நேரம் போய்க் கொண்டே இருந்தது. மூவரும் இருந்த இடத்தை விட்டு அகலவேயில்லை.

மங்களத்தின் விசும்பல் மட்டும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டே இருந்தது.

வேலைக்காக இருபது வருடத்திற்கு முன்பே தன் பிறந்த மண்ணை விட்டு, குஜராத் மாநிலத்தின் தலைநகருக்கு வந்தார்



சின்னத்துரை. அது என்னவோ அவருக்கு அந்த ஊரும் மக்களும் பிடித்துவிட, அங்கேயே தங்கிவிட்டார். பெண்கள் இருவரும் பிறந்ததும் இங்குதான்.

நிறையத் தமிழ் குடும்பங்கள் அங்கொன்று, இங்கொன்றாக இருக்க, தமிழ்ச் சங்கம் அமைத்து அடிக்கடி ஒன்றுகூடுவதும் உண்டு. மூன்று தலைமுறைக்கு முன்னால் தமிழ்நாட்டிலிருந்து பிழைப்புக்காக வந்து நிறையத் தொழில்களில் தங்கள் முத்திரையைப் பதித்து மாநிலத்திற்கே பெருமை சேர்க்கும் பெரிய குடும்பங்களும் இருந்தன. ஆனால் அந்தக் குடும்பங்களுடன் பழக்கங்கள் மிகக் குறைவு. அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

சின்னத்துரை மிகவும் கம்பீரமான மனிதர். எதிலும் களங்கப்படாமல் நிமிர்ந்து நிற்பார். எனக்கென்ன, பஞ்ச வர்ணக் கிளிகள் போல இரண்டு தேவதைகள் பெற்று வைத்திருக்கிறேன் என்று கர்வப்படுபவர். சில வருடங்களாகவே அந்தக் கர்வம் ஸ்வாதியால் பெருமளவு தவிடு பொடியாயிற்று. அப்பவே முதுகொடிந்து போனார்.

ஸ்வாதியைப் பற்றி அறிந்த விஷயம் அதிர்ச்சிதான். ஆனால் சில வருடங்களாகவே அவளுடைய நடத்தையின் போக்கினால் இந்த மாதிரி முடிவிற்கு அவள் வரலாம் என்று அடிமனத்திற்குள் ஒரு சந்தேகம் இருந்ததால் நினைத்தது நடந்துவிட்டதே என்ற பெரும் கவலை அவரை ஆக்ரமித்தது.

மணி பன்னிரண்டைத் தாண்டவும் சுமித்ராதான் மௌனத்தைக் கலைத்தாள்.

"அப்பா, இந்த விஷயத்தை..." என்று தொடங்க, அதே சமயம் வாசல் கதவு படார் படார் என்று வேகமாக அடிக்கப்பட்டது. காலிங் பெல் ஓசையும் இடைவிடாது கேட்க, என்னவோ ஏதோ என்று அந்தக் குடும்பம் பதறிப்போனது.

சுமித்ரா தாவி வந்து 'பீப்' ஹோல் வழியாகப் பார்த்து அதிர்ந்தாள்.

நான்கைந்து ரவுடிகள் கையில் உருட்டுக் கட்டைகளை வைத்துக் கொண்டு, ஏதோ புரியாத வகையில் அசிங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுமித்ரா என்ன செய்வதென்று புரியாமல் அதிர்ந்து நிற்க, சின்னத்துரையும் நிலைமையை ஊகித்துத் தடுமாற, அதற்குள் கதவை உடைத்துக் கொண்டு நுழைந்துவிட்டனர் குண்டர்கள்.

உள்ளே நுழைந்த ரவுடிகள் சடசடவென்று கண்ணில் பட்டதெல்லாம் அடித்து நொறுக்கத் தொடங்க, சுமித்ராவும் சின்னத்துரையும் ஆளுக்கொரு ஆளாய்ப் பிடித்துத் தடுக்க, அவர்கள் அநாயசமாக அவர்களைப் பிடித்துத் தள்ள, இருவரும் தரையில் கிடந்தனர். மங்களம் பயத்தில் மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

புயல் போல் வந்த ரவுடிகள் புயலின் பாதிப்பை வீட்டில் விட்டு விட்டு வந்த வேகத்திலேயே திரும்பினர்.

என்ன? ஏது? - என்று ஒன்றும் புரியவில்லை. கண்மூடித் திறப்பதற்குள் நடந்து விட்ட காரியத்தை நினைத்தால் சுமித்ராவுக்கு அழுகை வந்தது. டி.வி., ப்ரிட்ஜ் என்று ஒன்றும் முழுசாக இல்லை. கிச்சனில் இன்னும் ஒரு வாரத்திற்குச் சமைக்கலாகாது. கண்களில் நீருடன், தண்ணீரில் தோய்த்த கைக்குட்டையைக் கொண்டு அம்மாவின் முகத்தைத் துடைத்துச் சுமித்ரா அவளின் மயக்கத்தைத் தெளித்தாள்.

''என்னப்பா இது?'' சுமித்ரா கண்கள் கசிய, உதடு பிதுங்கக் கேட்டாள்.

வயது வந்த மகள் செய்த காரியத்தை எண்ணிச் சின்னத்துரை தவிப்போடு இருக்க, ரவுடிக் கூட்டம் வீட்டையே துவம்சம் பண்ணி இரண்டாக்கிப் போட்டுவிட்டுச் சென்றதும் அந்தத் தவிப்பு பலமடங்காகியது.



ஆனால் எல்லாம் முடிந்து பத்து நிமிடத்தில் உயிர் பிழைத்த தொலைபேசி கிணுகிணுத்தது. தொலைபேசிக்குக் கைகொடுத்த சுமித்ராவின் காதுகளில் ''ரவிஷ் நஹியர், உங்கள் வீட்டுப் பெண்ணிடம் இருந்து எங்கள் டையன் உடனே வந்து சேர வேண்டும். இல்லை எனில் விளைவுகள் இன்னும் விபரீதமாக இருக்கும்!'' - உறுமலான குரல் ஒலித்து அடங்கியது.

அதுவரை கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டிருந்த சின்னத்துரை குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

அக்கம்பக்கம் வீட்டிலுள்ளவர்கள் விரிந்து திறந்திருந்த வீட்டை நோட்டம் விட்டுக் கொண்டு 'என்ன? ஏது?' என்று விஷயம் கிரகிக்க ஓடி வந்தனர்.

சுமித்ரா அதிர்ந்து நின்றாள். இது என்ன கொடுமை!

## 2

சின்னத்துரை பெற்ற செல்கங்கள் இரண்டும் அழகில் அந்தத் தேவலோகத்துக் கன்னிகைகளோ என்று மயங்கும் விதத்தில் நல்ல பொலிவுடனும், வசீகரத்துடனும் இருந்தனர். ஆனால் அழகில் ஒத்த அந்தச் சகோதரிகள் குணத்திலும் ஒத்திருந்தால் அந்தக் குடும்பத்தில் எந்த ஒரு சிக்கலும் வந்திருக்காது. ஒருவரிலிருந்து மற்றவர் எதிர்மறையான குணத்துடன் பிறந்ததுதான் வீட்டில் நிம்மதியைக் கெடுத்தது. இருவரும் ஒன்றரை வருடத்தில் அடுத்தடுத்துப் பிறந்த சகோதரிகள்.

சுமித்ரா படித்து முடித்தவுடன் வேலையில் ஏறி, கூடவே மேல்படிப்பான ஐ.சி.டபிள்யூ படித்துக் கொண்டிருப்பவள்.

இளையவள் ஸ்வாதி படிப்பில் மனம் லயிக்காமல் மற்றவற்றில் கைதேர்ந்தாள். படித்தது முழுக்க ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்விக் கூடங்களில். படிப்பில் நாட்டம் இல்லாமல், கூடப் படிக்கும் பையன்களுடன் கிளாஸ் கட் செய்து சினிமாவுக்குச் செல்லும் மிகவும் துணிச்சலான தைரியம் அவளுக்கு.

சின்னத்துரை எவ்வளவோ கண்டித்துவிட்டார். வளர வளர அந்த பெண்ணின் போக்கு அவரையே பயமுறுத்தியது.

ஒருநாள் இரவு ஒன்பது மணி வரை வீட்டுக்கு வரவில்லை. காலையில் கல்லூரிக்குச் சென்ற பெண்ணைக் காணவில்லையே என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பதைப் போன்ற வேதனையில் பெற்றோர் துடிக்க, அவள் ஒன்பதரைக்கு மிகவும் சாவகாசமாக ஒரு வாலிபனுடன் பைக்கில் வீட்டு வாசலில் இறங்கியது கண்டு சின்னத்துரைக்கு இரத்தம் கொதித்தது.

டிஸ்கோத்தே போயிருந்தாளாம். சின்னத்துரை வந்த கோபத்தில் அவளை நையப்புடைத்தார்.

அத்தனை அடியையும் வாங்கிக் கொண்டு கலங்காத கண்களுடன், "இந்த வீடு என்ன ஜெயிலா? எனக்குப் பதினெட்டு வயது முடிந்துவிட்டது. நான் சுதந்திரமானவள். சும்மா சும்மா என்னைக் கட்டுப்படுத்தினால், வீட்டை விட்டுப் போய்விடுவேன்" என்று மிரட்ட, பெற்றோர் அரை உயிராயினர்.

மற்றொரு நாள் ப்ரண்ட் பிறந்த நாளுக்குப் போய்விட்டு அவள் வரும்போது மணி பத்தைத் தாண்டிவிட்டது.

கோபத்தின் உச்சத்தில் மகளைக் கொன்றே விடும் அளவுக்கு அடித்த சின்னத்துரையைச் சரிகட்டுவது மங்களத்திற்கும் சுமித்ராவிற்கும் பிரம்மப்பிரயத்தனமாக இருந்தது.



"ப்ரண்ட் பர்த்டேக்குப் போய் செலிபரேட் பண்ணிட்டு வருவதற்குக் கூட எனக்குச் சுதந்திரம் கிடையாதா? இவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு இருக்க நான் என்ன அடிமையா?" என்று எதிர்த்து, கத்து கத்து என்று கத்தியவள், ராத்திரியோடு ராத்திரியாகத் தன்னுடைய உடைகளை எல்லாம் 'பேக்' செய்து வீட்டை விட்டுக் கிளம்பத் தயாரான ஸ்வாதியை, மங்களமும் சுமித்ராவும் தாஜா பண்ணி, கெஞ்சித் தடுத்துவிட்டார்கள்.

எதற்கெடுத்தாலும் சுதந்திரம் சுதந்திரம் என்று பேசி, சில பல நேரங்களில் கொஞ்சம் எல்லை மீறும்போது பல விஷயங்களை மங்களமும் சுமித்ராவும் பல நேரங்களில் சின்னத்துரையிடம் மறைத்துவிட்டார்கள்.

பதினெட்டு பத்தொன்பது வயதிலேயே அவளுடைய விஷயத்தில் யார் தலையிட்டாலும் அவளுக்குப் பிடிக்காமல் போயிற்று.

பெண் வளர்ப்பு முறை சரியில்லை என்றும் சொல்வதற்கில்லை. மூத்தவள் புடம் போட்ட பொன்னாக ஜொலிக்கையில் சிறியவளின் இந்தத் தடம் கெட்ட போக்கும், பேச்சும் எப்போது தலையெடுத்தது என்றே புரியமுடியவில்லை. சகவாச தோஷமா?! இல்லை விதியா?

சின்ன வயதில் பிடிவாதமும் அவளிடம் அதிகமாகத்தான் இருந்தது. பெரியவள் தங்கைக்கு, தங்கைக்கு, தங்கைதானே என்று எதிலும் விட்டுக் கொடுத்தது அவளுக்கு இறுமாந்த தன்மையை ஏற்படுத்தி விட்டது போலும். இத்தனை செய்பவள் அம்மா, அப்பாவிடம் பாசம் கொள்ளவில்லை என்றும் சொல்வதற்கில்லை.

காலையில் டிபன் சாப்பிட்ட பிறகு, சின்னத்துரைக்கு இரத்தக் கொதிப்பு மாத்திரையை மறக்காமல், ஞாபகத்துடன் தண்ணீருடன் நீட்டுவாள்.

முணுமுணுத்தபடி மாத்திரையை வாங்கித் தண்ணீரைக் குடிப்பதும் அவர் வழக்கம்.

மங்களத்திற்கும் காலை அவசர நேரத்தில் முகம் சுருக்காமல் கூடமாடவேலை செய்வாள். அந்த மாதிரி நேரத்தில் மங்களம் ஸ்வாதியிடம் ஏதாவது அறிவுரை சொல்ல ஆரம்பித்தால் மீண்டும் மரம் ஏறிவிடுவாள். அது அவளுடைய சொந்த விஷயமாம். இன்னும் பழைய காலமாக இருக்கக் கூடாது. இன்றையை தலைமுறையை நினைத்ததைச் செய்ய விடவேண்டும். கட்டுப்படுத்தி ஆள நினைக்கக்கூடாது என்று தாய்க்கு அட்வைஸ் பண்ணிவிட்டு, வேலையையும் பாதியில் போட்டுவிட்டு முகத்தைத் தூக்கிக் கொள்வாள்.

அது என்னவோ அந்த 'சுதந்திரம்' என்ற வார்த்தையில் குறியாக இருப்பாள். ஏன் எப்படி? கூடாது? முடியாது? என்ற வார்த்தைகள் அவளைக் கோபத்தின் உச்சிக்கே அழைத்துச் சென்றுவிடும்.

சுமித்ராவிடம் மட்டும் எதையாவது முணுமுணுத்துக் கொண்டேயிருப்பாள்.

சுமித்ராவும் ஸ்வாதியிடம் நிறையப் பேசியிருக்கிறாள். அனைத்தும் கடலிற் கரைத்த காயம் போல் பயனற்றுப் போனது.

ஆறு மாதத்திற்கு முன்னால் ஏதோ மேகஸினில் விளம்பரப் படங்களில், அவளின் நவீனமான பலவித போஸ்களைப் பார்த்துச் சின்னத்துரைக்கு நெஞ்சு வலியே வந்து விட்டது. பெண்ணைப் பற்றிய எல்லா நம்பிக்கையும் தொலைத்ததும் அந்த நாள்தான். அதுவரை வயதின் கோளாறு என்று பொறுத்துப் போய்க்கொண்டிருந்தவர், இந்தச் செய்தி அவரை வெறுப்பின் எல்லைக்கே கொண்டு சென்றது.

''எது செய்தாலும் இதைப் பண்ணாதே, அதைப் பண்ணாதேன்று சதா என்ன மிரட்டல், சுமி! நீ வேணா கேட்டுட்டு இரு.



நான் மாட்டேன். தெரியாமதான் கேட்கறேன், மாடலிங் பண்ணினால் என்ன தப்பு? எனக்கு அந்த புரஃபஷன்தான் பிடிச்சிருக்கு. யார் என்ன சொன்னாலும் நான் அதைத்தான் பண்ணுவேன்!'' சுமித்ராவிடம் அவள் பொரும,

''நம்ம குடும்பத்திற்கு அது சரிப்பட்டு வருமான்னு யோசிச்சு பார்த்தியா ஸ்வாதி. நாம் கொஞ்சம் பழமையான கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்டவர்கள். அப்பாவுக்கு...'' என்ற சுமித்ராவைப் பேசி முடிக்கவிடவில்லை ஸ்வாதி.

''நான் என்ன மத்த பொண்ணுங்களை மாதிரி உரிஞ்சு போட்டுகிட்டு அரைகுறை டிரஸ்லேயா மாடலிங் பண்ணுகிறேன். சேலை விளம்பரம். நைட்டி விளம்பரம், பொட்டு விளம்பரம் என்று கண்ணியமான தோற்றத்தில்தானே மாடலிங் செய்கிறேன்!'' என்று அவள் செய்கைக்கு நியாயம் கற்பிக்க,

கேட்டுக் கொண்டிருந்த மங்களத்திற்கும் கண்ணீர்தான் வந்தது. பெண் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வாதிடவும் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அடங்காத பிள்ளையை அடங்க வைக்கும் வழியும் தெரியவில்லை. நாளைக்குக் கல்யாணம் ஆகி, அடுத்த வீட்டில் என்ன லட்சணத்தில் குப்பை கொட்டப் போகிறாளோ என்று அவளுக்குத் திகிலாய் இருந்தது.

கடந்த சில நாட்களாகவே ஸ்வாதியின் நடவடிக்கைகள் சுமித்ராவுக்கும் மங்களத்திற்கும் கொஞ்சம் புதிராகவே இருந்தன. இருந்திருந்தாற் போல சந்தோஷக் கடலில் மூழ்கிவிடுவாள். இரண்டு நாள் முன்பு கூட,

''சுமி! ஐ ஆம் ஸோ ஹாப்பி!'' என்று சுமித்ராவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

ஏதோ புது பழக்கம் ஸ்வாதியைக் கிறங்க வைத்திருப்பது, ஒத்த வயதினள் ஆன சுமித்ராவிற்குப் புரியவில்லை. சுமித்ரா உடனே அதைக் குறித்து விமரிசித்துப் பேசுகையில்,



''சாமியாரினி, நீ பேசாதே. உனக்கு ஒன்றும் புரியப் போவதில்லை. மூட்டை மூட்டையாய் அட்வைஸ்லை என் மேல் கொட்டத் தொடங்கிவிடாதே. அப்புறம் அதுல நான் மூழ்கிருவேன்!'' என்று சுமித்ராவின் கன்னத்தில் 'பச்' என்று முத்தமிட்டுவிட்டுக் குதித்தோடினாள்.

கேடு வரும் பின்னே, மதி கெட்டுவிடும் முன்னே என்று அந்தச் சமயத்தில் சுமித்ரா நினைத்தது நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டதே.

3

மறுநாள் பொழுது விடிகையில் விடியலும் அவர்களுக்கு மோசமாகத்தான் இருந்தது.

முதல் நாள் இரவு அடக்க முடியாமல் அழுத தந்தையைத் தூக்க மாத்திரையின் உதவி கொண்டு தூங்க வைத்திருந்தாள் சுமித்ரா. மங்களமும் தன்னையறியாமல் கண்களை மூடிவிட, சுமித்ராவிற்குப் பொட்டுத் தூக்கம் வரவில்லை.

நேற்றைய மிரட்டல் செய்தி சுமித்ராவின் உள்ளத்தில் மாறி மாறி ஒலித்துக் கொண்டே இருந்தது.

யார் அவர்கள்? யார் அவர்கள்? - என்று மனசு வெருண்டு போயிருந்தது. ஏவியவர்களை எப்படி அந்தஸ்துடையவர்கள் என்று ஏற்றுக் கொள்வது. அவர்கள் சமுதாயத்தில் மோசமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்தாள், சுமித்ரா.

ஆழம் தெரியாமல் தங்கை காலை விட்டுவிட்டாளோ என்று விரைத்தவளுக்குப் பளிச்சென்று கண்களில் மின்னல் வெட்டியது.



அந்தக் கசங்கிய கடிதத்தில் அச்சிடப்பட்ட ஏதோ எழுத்துக்கள் இருந்தது சுமித்ராவிற்கு அப்போது நினைவு வந்தது. அதில் எழுதியிருந்த செய்தியிலேயே நெஞ்சடைத்து போக, அந்த விலாசத்திற்கு அப்போது அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கத் தோன்றவில்லை.

ஓடிப்போய் சோபாவின் அடியில் கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்து வேகமாகக் கண்களை ஓட்டினாள்.

''ரவிஷ், எம்பாஸி டெக்ஸ்டைல்ஸ்'' என்று பார்த்தவுடனேயே கண்கள் விரிந்தன.

குஜராத்தின் எல்லா மூலைகளிலும், நகரங்களிலும் விரிந்து பரந்து கிடக்கும் பெயர் போன டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம். தமிழனின் நிறுவனம். மூன்று தலைமுறையாகக் கொடிகட்டிப் பறக்கும் தமிழனின் நிறுவனம்.

தங்கையை இழுத்துக் கொண்டு ஓடிய சஞ்சய்க்கும் ரவிஷ்க்கும் என்ன தொடர்பு? சஞ்சய் அந்த நிறுவனத்தில் வேலை பார்க்கும் பையனாக இருக்குமோ என்று எழுந்த சந்தேகம் உடனே கரைந்தது.

குண்டர் படை வந்து போனபோதே ஏதோ பெரிய இடத்து சமாச்சாரம் என்று உள்ளுணர்வு சொல்லத்தான் செய்தது.

அதற்குள் சின்னத்துரையும் தூங்கி எழுந்து, சுமித்ராவின் அருகில் அமர, சுமித்ரா அவரிடம் மெல்ல விஷயமும் சொன்னாள்.

உடனே சின்னத்துரை கண்களில் கூர்மையுடன் சொல்லிவிட்டார்.

''விஷயம் இதோட நிற்கப் போவதில்லை சுமி. ஸ்வாதியைப் பெற்றதற்கு இன்னும் எத்தனை கஷ்டம் வந்தாலும் தாங்கிக் கொள்வதற்குச் சக்தியைத் தா என்று கடவுளிடம் வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை!'' என்று வெறுத்துப் போய்ப் பேச,

''அப்பா...'' என்று சுமித்ரா பதட்டத்தில் இழுக்க,

''எட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் வரை பாயும்மா. அவன் எங்கே போனான் என்ற விவரம் தெரிந்தாலாவது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லலாம்!'' என்று அவர் பேச, பெண் ஓடிப் போன சோகம் வறண்டு அவள் எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும் என்று பெற்ற மனம் வேண்டுவது சுமித்ராவிற்குப் புரிந்து போயிற்று.

நேரம் மெல்ல மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தது. சின்னத்துரை கம்பெனிக்குப் போக மனமற்றவராய் சோபாவே கதி என்று உட்கார்ந்திருந்தார்.

மங்களமும் சுமித்ராவும் கனத்த இதயத்துடன் வீட்டை ஒதுக்கி வைக்கத் தொடங்கினார்கள்.

திடீரென்று காலிங் பெல் ஓசையுடன் முழங்க, மூவருக்கும் நெஞ்சு 'திக்' என்றது. சமாளித்துக் கொண்டு கதவைத் திறந்த சுமித்ராவிற்கு அடுத்த குண்டு ஒன்று தயாராக இருந்தது.

வந்திருந்தது கூரியர் பாய். செய்திகளை மிக வேகமாகக் கொண்டு வந்து சேர்க்கும் நபர்.

அப்பாவின் பெயருக்கு வந்திருந்தது. கடிதத்தைப் பெற்றுக் கொண்டு கையெழுத்திட்டு அவனை அனுப்பினாள்.

திறந்து படித்த சின்னத்துரை பதறிப்போய் எழுந்து நின்றார். வருங்காலத்தைப் பற்றிய பயம் முதன் முதலாக வர, தள்ளாடிப் போனார்.

அவரின் வாழ்க்கைப் பயணத்திற்கு மிகப் பலமான ஊன்றுகோலாய் இருந்த அவருடைய வேலை பறிக்கப்பட்டுவிட்டது.

அதுவரை ஒன்றுமே பேசாதிருந்த மங்களம், ''நான் அப்பவே சொன்னேன், சிவபெருமானுக்கு வேண்டுதல் பாக்கி ரொம்ப நாளாய் இருக்கிறது. போய்விட்டு வந்துவிடலாம்



என்று. சும்மாவேனும் நாட்களைக் கடத்திவிட்டதற்குக் கடவுள் நல்ல தண்டனை கொடுத்து விட்டார்!'' என்று கண்களைக் கசக்கி விம்மத் தொடங்கினாள்.

## 4

சுமித்ராவிற்கு யோசிக்க யோசிக்கக் கோபம் தலைக்கு ஏறியது.

பணம் இருந்தால் மிரட்டுவதற்குக் குண்டர்களை அனுப்பிக் குடும்பத்தையே மிரள வைப்பதா?

அப்பாவியான அப்பாவின் ஒரே ஆதாரமான வேலையைத் தட்டி பறிப்பதா?

பாதிக்கப்பட்டிருப்பது என்னுடைய தங்கை. என்ன ஆசை வார்த்தை காட்டி மயக்கி கூட்டிச் சென்றானோ? ஸ்வாதியைக் கூட்டிக் கொண்டு ஓடியதற்கு நியாயப்படி நாங்களல்லவா களத்தில் இறங்கி நியாயம் கேட்டிருக்க வேண்டும்.

ஏற்கெனவே பெண் செய்த காரியத்தில் காயமுற்றிருந்தவர்களை மேலும் மேலும் தாக்கிக் காயப்படுத்துவது எந்த விதத்தில் நியாயம்?

அந்தக் கணத்தில் சுமித்ரா தீர்மானித்துவிட்டாள். இதற்கெல்லாம் ஒருநாள் அவன் பதில் சொல்லியே ஆகவேண்டும். பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும் என்று உறுதி பெற்றாள்.

மங்களம் கோயிலுக்குப் போக வேண்டும் என்று மிக உறுதியாக இருந்ததால், சின்னத்துரையும் சம்மதித்தார். அவருக்குமே தொடர்ந்து நடந்த காரியங்கள் பீதியைக்



கிளப்பிவிட்டன. இனி எல்லாம் கடவுள் விட்ட வழி என்று தீர்க்கமாக நம்பினார்.

கஷ்டங்கள் அடுக்கடுக்காய் வரும்போது கடவுளே சிறந்த மருந்து.

ஸ்வாதியிடம் இருந்து தகவல் ஏதேனும் வரலாம் என்று சுமித்ரா கோயிலுக்குச் செல்லாமல் பின்தங்கினாள்.

சின்னத்துரை ஒரு டூரிஸ்ட் டாக்ஸியைப் பிடித்து அன்று இரவே கடவுளிடம் கிளம்பிவிட்டார். குஜராத்தை அடுத்த, மத்திய பிரதேசத்தின் அலிராஜ்பூர் என்னும் இடத்தில் உள்ள சிவன் கோவில் மிகப் பிரபலம். சின்னத்துரை குஜராத்தில் வந்து செட்டில் ஆனதிலிருந்து மனைவி மக்களுடன் அங்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சீக்கிரம் கோயிலுக்குக் கிளம்பி வேண்டுதல் கணக்கை முடித்துவிட்டால், சீக்கிரமே நல்லது நடக்குமே என்ற நம்பிக்கை அவருக்கு. காலத்தைக் கடத்தக் கூடாது என்று மங்களம் திருப்பித் திருப்பிச் சொல்ல, இதோ கிளம்பி விட்டார்கள்.

இந்த மாதிரி நேரத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கவனம் கவனம் என்று சின்னத்துரை மாறி மாறிச் சுமித்ராவிடம் சொல்ல, சுமித்ராவிற்கு மனசுக்குள்ளே பெரிய திட்டம் உருவாகியது.

ஏதோ கம்பெனியில் போஸ்டிங்காகக் குஜராத் வந்திருந்த தன் தம்பியின் மகனை விஷயம் சொல்லி வரச்சொல்லியிருந்தார், சின்னத்துரை. அவர்கள் வீட்டிற்கும், அவன் கம்பெனி இருந்த 'சிதார்'க்கும் தூரம் அதிகமாக இருந்ததால், கம்பெனி 'கெஸ்ட் ஹவுஸி'ல் தங்கியிருந்தான் அவன்.

''ஆபிஸ் முடிந்ததும் சந்துரு வரேன்னு சொல்லியிருக்கான். துணைக்கு இருக்கட்டும்!'' என்று மூத்த மகளுக்குக் காவலுக்கு ஒரு ஆளை இருத்திவிட்டுத்தான் கிளம்பினார்கள்.



தச்சனைக் கொண்டு சரிபார்க்கப்பட்டுப் பாதுகாப்பிற்காகக் கூடுதலாகப் போடப்பட்டிருந்த அந்த கிரில் கதவை மூடிக் கொண்டு வீட்டிற்குள் சென்ற சுமித்ராவிற்கு நிம்மதியே போயிற்று.

பணத்தைக் கொண்டு, வீரம் காட்டின அந்த ரவிஷ்ஷை எந்த விதத்தில் பதிலடி கொடுக்க வேண்டும் என்று சிந்தித்தாள் சுமித்ரா.

'ரவிஷ்' என்ற மனிதன் ஸ்வாதியை இழுத்துக் கொண்டு ஓடிய சஞ்சயின் அப்பாவா? மாமாவா? அண்ணனா? என்ன உறவு முறையாக இருக்கும் என்று யோசித்தவள், ஏதோ நினைவு வர டெலிபோன் டைரக்டரியில் 'எம்பாஸி டெக்ஸ்டைல்' என்றெழுதப்பட்டதில் கண்களை ஓட்டினாள். அதில் ரவிஷ்ஷின் டெலிபோன் எண்ணுக்கு முன் மானேஜிங் டைரக்டர் என்று அழுத்தமான கொட்டை எழுத்து எழுதியிருப்பதைக் கண்டாள். தொடர்ந்து சஞ்சய் என்ற பெயருக்குண்டான பதவி பற்றி எழுதியிருக்கிறதா என்று பார்த்தவளுக்கு சஞ்சய் என்ற பெயரே அந்த 'எம்பாஸி டெக்ஸ்டைல்'லில் இல்லாதது நெஞ்சை உறுத்தியது.

ஆனால் ரவிஷ் ஏற்கெனவே பெரிய வில்லனாகச் சுமித்ராவின் மனதில் உருவெடுத்துவிட்டதில் அவளுடைய தாக்குதலின் முதல் கட்டம் அவனாகத்தான் இருந்தான்.

## 5

வாழ்வில் சோதனை வருவதை யாரும் தடுக்க முடியாது. அவற்றை அடக்கி ஆளத் தெரிந்தால் சாதனை. அவற்றிலே ஆழ்ந்து விட்டால் வேதனை.

சுமித்ராவும் சாதிக்கும் ரகம். மறுநாள் காலையில் சித்தப்பா மகன் சந்துரு கிளம்பியதும், சுமித்ராவும் குளித்து உடை மாற்றிக் கிளம்பிவிட்டாள். எம்பானி டெக்ஸ்டைல்'சின் தலைமைக் கட்டடத்தை நோக்கி.

இருக்கும் மனநிலையில் கைனடிக் ஹோண்டாவை எடுப்பது அவ்வளவு சரியாகப் படவில்லை அவளுக்கு. ஆட்டோ பிடித்து அந்த மூன்று மாடிக் கட்டடத்தின் முன் வந்து இறங்கினாள்.

அம்பு எய்தவன் இந்த வில்லன்தானா என்ற சந்தேகம் சுமித்ராவின் உள்ளத்தில் எழாமல் இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு உணர்வு இவன்தான் இவனேதான் என்று சுட்டிக் காட்ட அந்த தைரியத்தில்தான் சுமித்ரா அந்தக் கட்டடத்தில் நுழைந்தாள்.

மணி பத்தாகிவிட்டிருந்தபடியால் முழுமூச்சில் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. ரிசப்ஷனில், மானேஜிங் டைரக்டர் ரவீஷ்ஷைப் பார்க்கவேண்டும் என்றதும் அந்தப் பெண் கேட்ட முதல் கேள்வி, "அப்பாயின்ட்மென்ட் எத்தனை மணிக்கு மேடம்?"

"அப்பாயின்ட்மென்ட் இல்லை. ஆனால் அவசியமாகப் பார்க்கவேண்டும். "ப்ளீஸ்..." என்று சுமித்ரா ஆங்கிலத்தில் பணிந்து கேட்க,

"அப்பாயின்ட்மென்ட் இல்லை என்றால், யாரையும் பார்க்க மாட்டாரே மிஸ். அதுவும் தவிர இன்னும் ஒரு வாரத்துக்கு அவரோடு அப்பாயின்ட்மென்ட் ஃபுல்!" என்றாள் இனிய குரலில்.

"எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. ஒரு ஐந்து நிமிடம்தான். ப்ளீஸ் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி நேரம் ஒதுக்கித் தாருங்கள்," என்று சுமித்ரா கெஞ்சுகையில் அவளுக்கு முகம் சிவந்துபோயிற்று. இப்படிக் கெஞ்சித்தான் அவனைப் பார்த்தாக வேண்டுமா?



ஒரு நிமிடம் அவளையே பார்த்த அந்த பெண், "பாஸ் முதல் மாடியில் இருக்கிறார். அவருக்கு பர்ஸனல் அட்டண்டர் மிஸ்டர் சோலங்கி. ரொம்ப அர்ஜண்ட் என்றால் அவரிடம் பேசிப்பாருங்கள்," என்று சொல்ல, சுமித்ரா அவளிடமே முதல் மாடிக்குச் செல்லும் வழியைக் கேட்டறிந்து, முதல் மாடிக்கு வந்தாள்.

புதியதாகக் கட்டப்பட்டிருந்த கட்டடம், பிரம்மாண்டமாக இருந்தது.

'மிஸ்டர் சோலங்கி" என்று எதிர்ப்பட்டவரைச் சுமித்ரா கேட்க, வெள்ளை பேண்ட் வெள்ளைச் சட்டை அணிந்து அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்த சுறுசுறுப்பான ஒருவனை நோக்கி அவர் சுட்டிக்காட்ட, சுமித்ரா அவனிடம் போய் நின்றாள்.

"ஹலோ... எனக்கு மிஸ்டர் ரவீஷைப் பார்க்கவேண்டும்," என்று சொல்ல, ஹிந்தியில் அவனும் நூறு கேள்விகளை அவளிடம் கேட்டான். சுமித்ராவைப் பார்த்த பிறகும் முடியாது என்று சொல்லும் முழு மனது அவனிடமும் இல்லை.

"உங்கள் பெயரை இதில் எழுதித்தாருங்கள். எதற்கும் பாஸிடம் கொடுத்துப் பார்க்கிறேன். ஆனால் அவர் எப்போது ஃப்ரீயாவார் என்று என்னால் சொல்ல முடியாது!" என்றபடி அவளின் பெயர் எழுதப்பட்ட காகிதத்தை எடுத்துக் கொண்டு அவனுடைய அறைக்குள் சென்றான். சந்திக்க வேண்டிய காரணத்தை வேண்டுமென்றே எழுதாமல் கொடுத்தாள். அவளின் தாக்குதல் அவன் எதிர்பாராததாக இருக்கவேண்டும்.

சுமித்ராவிற்கு உள்ளே படபடப்பாக இருந்தது. ஏதோ தைரியத்தில் ரோஷத்தில் கிளம்பி வந்தவளுக்கு வியர்த்தது உண்மை.

அதன் பிறகு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்த சுமித்ராவிற்குச் சாப்பாட்டு நேரம் ஆன பிறகும், உள்ளே இருந்து அழைப்பே வரவில்லை.

122

சுமித்ராவும் சாதிக்கும் ரகம். மறுநாள் காலையில் சித்தப்பா மகன் சந்துரு கிளம்பியதும், சுமித்ராவும் குளித்து உடை மாற்றிக் கிளம்பிவிட்டாள். எம்பானி டெக்ஸ்டைல்'சின் தலைமைக் கட்டடத்தை நோக்கி.

இருக்கும் மனநிலையில் கைனடிக் ஹோண்டாவை எடுப்பது அவ்வளவு சரியாகப் படவில்லை அவளுக்கு. ஆட்டோ பிடித்து அந்த மூன்று மாடிக் கட்டடத்தின் முன் வந்து இறங்கினாள்.

அம்பு எய்தவன் இந்த வில்லன்தானா என்ற சந்தேகம் சுமித்ராவின் உள்ளத்தில் எழாமல் இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு உணர்வு இவன்தான் இவனேதான் என்று சுட்டிக் காட்ட அந்த தைரியத்தில்தான் சுமித்ரா அந்தக் கட்டடத்தில் நுழைந்தாள்.

மணி பத்தாகிவிட்டிருந்தபடியால் முழுமூச்சில் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. ரிசப்ஷனில், மானேஜிங் டைரக்டர் ரவீஷ்ஷைப் பார்க்கவேண்டும் என்றதும் அந்தப் பெண் கேட்ட முதல் கேள்வி, "அப்பாயின்ட்மென்ட் எத்தனை மணிக்கு மேடம்?"

"அப்பாயின்ட்மென்ட் இல்லை. ஆனால் அவசியமாகப் பார்க்கவேண்டும். "ப்ளீஸ்..." என்று சுமித்ரா ஆங்கிலத்தில் பணிந்து கேட்க,

"அப்பாயின்ட்மென்ட் இல்லை என்றால், யாரையும் பார்க்க மாட்டாரே மிஸ். அதுவும் தவிர இன்னும் ஒரு வாரத்துக்கு அவரோடு அப்பாயின்ட்மென்ட் ஃபுல்!" என்றாள் இனிய குரலில்.

"எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. ஒரு ஐந்து நிமிடம்தான். ப்ளீஸ் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி நேரம் ஒதுக்கித் தாருங்கள்," என்று சுமித்ரா கெஞ்சுகையில் அவளுக்கு முகம் சிவந்துபோயிற்று. இப்படிக் கெஞ்சித்தான் அவனைப் பார்த்தாக வேண்டுமா?

சித்ராபாலா 123

ஒரு நிமிடம் அவளையே பார்த்த அந்த பெண், "பாஸ் முதல் மாடியில் இருக்கிறார். அவருக்கு பர்ஸனல் அட்டண்டர் மிஸ்டர் சோலங்கி. ரொம்ப அர்ஜண்ட் என்றால் அவரிடம் பேசிப்பாருங்கள்," என்று சொல்ல, சுமித்ரா அவளிடமே முதல் மாடிக்குச் செல்லும் வழியைக் கேட்டறிந்து, முதல் மாடிக்கு வந்தாள்.

புதியதாகக் கட்டப்பட்டிருந்த கட்டடம், பிரம்மாண்டமாக இருந்தது.

'மிஸ்டர் சோலங்கி" என்று எதிர்ப்பட்டவரைச் சுமித்ரா கேட்க, வெள்ளை பேண்ட் வெள்ளைச் சட்டை அணிந்து அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்த சுறுசுறுப்பான ஒருவனை நோக்கி அவர் சுட்டிக்காட்ட, சுமித்ரா அவனிடம் போய் நின்றாள்.

"ஹலோ... எனக்கு மிஸ்டர் ரவீஷைப் பார்க்கவேண்டும்," என்று சொல்ல, ஹிந்தியில் அவனும் நூறு கேள்விகளை அவளிடம் கேட்டான். சுமித்ராவைப் பார்த்த பிறகும் முடியாது என்று சொல்லும் முழு மனது அவனிடமும் இல்லை.

"உங்கள் பெயரை இதில் எழுதித்தாருங்கள். எதற்கும் பாஸிடம் கொடுத்துப் பார்க்கிறேன். ஆனால் அவர் எப்போது ஃப்ரீயாவார் என்று என்னால் சொல்ல முடியாது!" என்றபடி அவளின் பெயர் எழுதப்பட்ட காகிதத்தை எடுத்துக் கொண்டு அவனுடைய அறைக்குள் சென்றான். சந்திக்க வேண்டிய காரணத்தை வேண்டுமென்றே எழுதாமல் கொடுத்தாள். அவளின் தாக்குதல் அவன் எதிர்பாராததாக இருக்கவேண்டும்.

சுமித்ராவிற்கு உள்ளே படபடப்பாக இருந்தது. ஏதோ தைரியத்தில் ரோஷத்தில் கிளம்பி வந்தவளுக்கு வியர்த்தது உண்மை.

அதன் பிறகு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்த சுமித்ராவிற்குச் சாப்பாட்டு நேரம் ஆன பிறகும், உள்ளே இருந்து அழைப்பே வரவில்லை.

"மேடம்... 'பாஸ்' ரொம்ப பிஸியாக இருக்கிறார். கண்டிப்பாகப் பார்க்க வேண்டுமென்றால் சாப்பிட்டுவிட்டு வாருங்களேன்," என்று அந்த சோலங்கி டிமர் என்று அவள் முன் பிரசன்னமாகிச் சொல்ல -

"தாங்க்ஸ்... பரவாயில்லை. அவரைப் பார்த்துவிட்டுத்தான் மற்றது," என்று இன்முகத்துடன் கூறினாள்.

தலையாட்டிவிட்டு அந்த மனிதனும் போய்விட,

சுமித்ரா போவோர் வருவோரை எல்லாம் வேடிக்கை பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தாள். பல்வேறு தரப்பட்ட மனிதர்கள் வந்து போயினர். வெளிநாட்டவரும் வந்து போகக் கண்டாள். எக்ஸ்போர்ட் ஆர்டராக இருக்கும் என்று மனதினுள் நினைக்கையிலேயே அவர்களின் பிஸினஸின் செழுமை அவளுக்குப் புரிந்தது.

நேரம் சென்று கொண்டே இருந்தது. இருமுறை இருந்த நாற்காலியை விட்டு எழுந்தவள் அங்கிருந்த தண்ணீர் பில்டரிலிருந்து தண்ணீர் பிடித்துக் குடித்தாள். அதன் பிறகு அந்த இடத்தில் இருந்து நகரவே இல்லை. அவளருகே வந்து அமர்ந்தவர்கள் எல்லாம் உடனே அழைக்கப்பட, உள்ளே போவதும் பின் செல்வதுமாக இருந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாய் ஆட்கள் நடமாட்டம் குறைய, சுமித்ரா கைக் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தரையைத் தாண்டி விட்டது.

இவ்வளவு நேரம் காத்திருந்தது வீணோ என்று சுமித்ரா சந்தேகப்பட ஆரம்பித்தாள். பெரிய அரக்கனாக இருப்பான் போல. ஈவு இரக்கமில்லாத அரக்கன். அவன் அவள் குடும்பத்திற்குச் செய்திருந்த கொடுமைகளும் அதைத்தானே பறைசாற்றின.

மணி ஆறரையைத் தொட்டது. ஆனால் அவன் அறைக் கதவு மட்டும் திறக்கக் காணும். சுற்றிலும் பார்த்தாள். ஆட்கள்



நடமாட்டமே சுத்தமாக இல்லை. அதுவரை பணிபுரிந்த ஆட்களும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடையைக் கட்ட, சுமித்ரா விழிகளை அகல விரித்தாள். காலை பத்து மணிக்கு வந்தவளை அவனின் அழைப்பிற்காக மாலை ஆறரை வரை காக்க வைத்துப் பழிவாங்குகிறானே.

அப்பாயிண்ட்மெண்ட் வாங்காமல் வந்ததினால் இந்த நிலையா? இல்லை, வந்தவளை இனம் கண்டு கொண்டதால் ஏற்பட்ட அலட்சியமா என்று புரியவில்லை சுமித்ராவிற்கு.

கடைசியில் சொர்க்க வாசல்... இல்லை, நரக வாசல் என்றுதான் சொல்லவேண்டும், திறந்துவிட்டது.

அந்த சோலங்கி, "இப்போது நீங்கள் உள்ளே போகலாம், மேடம்!" என்றவன், சிறிது தயக்கத்திற்குப் பிறகு, "சாரி..." என்றான்.

சுமித்ரா அவனைப் பார்த்துச் சின்னதாகத் தலை அசைத்ததுடன் சரி.

உள்ளே கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்த சுமித்ராவிற்கு நாற்காலியில் அமர்ந்திருப்பவனைக் கண்டதும் ஒருகணம் நெஞ்சு திடுக்கிட்டது.

வில்லனாக அவனை உருவகப்படுத்தி இருந்த தோற்றத்திற்கும் இவனுக்கும் சற்றும் சம்பந்தமில்லை.

உள்ளே வந்தவளை அவன் உட்காரக் கூடச் சொல்லவில்லை. உட்கார்ந்திருந்த சுழல் நாற்காலியில் இருந்து எழுந்தவன், முப்பது வயதை ஒட்டிய இளைஞன்.

சமஸ்தான மகாராஜாவைப் போல அவன் பார்த்த பார்வையும், நடந்த தோரணையும் சுமித்ராவிற்குப் பயங்கர எரிச்சலைக் கிளப்பியது. பணப் பேய்கள் என்று உள்ளூர நினைத்துக் கொண்டாள்.



"மிக மிக முக்கியமாக என்னிடம் பேசியே தீர வேண்டிய விஷயத்தைக் கொஞ்சம் சீக்கிரமாகச் சொல்," என்று கொஞ்சமும் நாகரீகமற்ற தொனியில் ஆங்கிலத்தில் அவன் பேச, சுமித்ராவிற்குக் கோபத்தில் முகம் சிவந்தது.

"நான் ஸ்வாதியின் அக்கா!" என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு.

அவனுக்குப் புரியவில்லை போலும். முகத்தைச் சுருக்கி எரிச்சலைக் காட்டி, "உனக்கு என்ன வேண்டும்? புரியும்படி சொல்," என்றான்.

"உங்கள் வீட்டுப் பிள்ளை என் தங்கையைக் கடத்திச் சென்றுவிட்டதால் உங்கள் இடத்தைச் சேதப்படுத்தலாம் என்று வந்திருக்கிறேன்," என்றாள் சுமித்ரா, கோபத்தை அடக்கி.

அவன் முகத்தில் ஏளனம் பரவ, சுமித்ரா தொடர்ந்தாள்.

"நீங்கள் செய்தது எந்த விதத்தில் நியாயம்? எங்களிடம் திருப்பி அடிக்கப் பணம் இல்லை என்கிற தைரியமா? ஒரு குடும்பத்தின் நிம்மதியையே குலைத்துவிட்டீர்களே! இப்படி ஒரு கேவலமான வேலையைச் செய்ய உங்களுக்கு வெட்கமாயில்லை. நான் நினைத்தால் உங்களை... உங்களை..."

"உன்னால் என்ன செய்துவிட முடியும் பெண்ணே?" என்று அவன் விழியை விரித்தான். பின் உதட்டை வளைத்தபடி, "ஒன்றை ஞாபகம் வை. அந்தப் பெண் வீட்டை விட்டு ஓட என் தம்பியைத் தேர்ந்தெடுத்ததுதான் உங்கள் நிம்மதி தொலைந்ததற்குக் காரணம். உன்னுடைய கோபம் நியாயப்படி பார்த்தால் அந்த பெண் மீதல்லவா திரும்பியிருக்க வேண்டும்? அவளின் ஓடுகாலித்தனத்தில்தானே உங்கள் நிம்மதி போயிற்று. யோசித்துப் பார்..." என்று சொல்ல, சுமித்ராவிற்கு இரத்தம் சூடாகி முகம் சிவந்தது.

'உபதேசமா? குண்டர்களை வைத்து வீட்டை இரண்டு பண்ணி, டெலிபோனில் மிரட்டி, பின் தந்தையின் உயிரான



வேலையையும் பறித்து... இத்தனை கேவலமான செய்கையையும் நியாயம் என்கிறானா?'

"உன் அப்பா, அம்மா இப்படி ஆட்களை வளைக்க உன்னையும் உன் தங்கையையும் தவிர இன்னும் எத்தனை பெண்களைப் பெற்றுப் போட்டிருக்கிறார்கள்?" என்று கேலி இழையோடு அவன் கேட்க, உதட்டைக் கடித்துக் கண்களை மூடி, பொங்கி வந்த கோபத்தை அடக்க முயன்றாள் சுமித்ரா.

"தமிழ்க் குடும்பம்தான் இல்லையா? உன் அப்பாவின் பெயரைக் கேட்டதும் நினைத்தேன். நீயும் உன் தங்கையைப் போல பணக்காரத் தமிழ் வாலிபர்களிடம்தான் காதல் வலை விரிப்பாயோ? இல்லை, குஜராத்தி என்றாலும் பரவாயில்லையா? எந்த இளிச்சவாயனையாவது உன் காலடியில் இன்னேரம் விழத் தட்டியிருப்பாயே!"

சுமித்ராவிற்கு அவன் பேசப் பேச நெஞ்சு குமுறியது. எவ்வளவு கீழ்த்தரமாகப் பேசுகிறான். முகம் செக்கச் செவேல் என்று சிவந்து போயிற்று. இப்படி எல்லாம் கூடப் பேசுவார்களா?

## 6

அதற்கும் எதிரில் இருப்பவன் தவறான அர்த்தம் கற்பித்தான்.

"என்னிடம் இந்த சல்ஜாப்பெல்லாம் பலிக்காது பெண்ணே. மறந்துவிடு!..." என்றான்.

ஒன்றும் புரியாமல் சுமித்ரா அவனை முறைக்க, நீண்டதொரு பெருமூச்சை வெளிவிட்டான் அவன். "உன்னிடம்

விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை என்றாலும்..." மீண்டும் புருவத்தை நெரித்தபடி, "என் தம்பி சஞ்சய் ஒரு இதய நோயாளி, நல்லபடியாகப் பிலானியில் மாஸ்டர் டிகிரி முடித்துவிட்டு இரண்டு மாதம் முன்புதான் வந்தான். திடீரென்று இருமல் வந்தது. மூச்சடைத்தது. பின் இதயம் வலிக்கிறது என்றான். கூட்டிப் போய்ச் சிகிச்சை செய்தபோது வந்த ரிசல்ட், 'மிட்ரல் வால்வ் புரோலப்ஸ் சின்ட்ரோம்.' உயிருக்கு ஆபத்தில்லை என்றாலும், டயட், மருந்து என்று மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய கட்டாயம். குறிப்பாக ஜலதோஷம். ஏனெனில் அதில் தொடங்கி இருமல், மூச்சடைப்பு, பின் இதய வலியில் கொண்டு போய் விடும். அதன் பிறகு உயிருக்கும் கேரண்டி சொல்ல முடியாதாம்.

"சஞ்சயிடம் வியாதியின் முழு விவரமும் உடனே சொல்ல எனக்குத் திராணியில்லை. அலர்ஜி என்று சொல்லி மெல்ல உண்மையைச் சொல்லிக் கொள்ளலாம் என்று கண்ணும் கருத்துமாய் நான் அவனைக் கவனித்துக் கொண்டிருக்க, எதிர்பாராமல் சஞ்சயின் வாழ்க்கையில் நுழைந்தவள் மாடலிங் செய்து பிழைப்பு நடத்தும் உன் தங்கை! என் தம்பியைப் பற்றி முழுவதும் தெரிந்து மிகச் சுயநலமாக உன் தங்கை செய்திருக்கும் காரியம் அவன் உயிருக்கு உலை வைத்திருப்பதுதான்!"

"என் தங்கைக்கு இந்த விஷயம் தெரிந்திருக்காது..."

"ஸ்டாப் இட். உன் தங்கையிடம் நானே பேசியிருக்கிறேன். என் தம்பியின் வாழ்க்கையில் குறுக்கிடக்கூடாது என்று மிரட்டியிருக்கிறேன். என்ன திமிர் இருந்தால் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருப்பாள்? முதல் காரியமாகக் கல்யாணத்தை ரிஜிஸ்டர் செய்திருப்பாள். பின் அவனுக்கு உடம்புக்கு ஒத்துக் கொள்ளாததை எல்லாம் கொடுத்து... என்ற என் சஞ்சய்



இதையெல்லாம் தாங்கிப் பத்து நாளாவது உயிருடன் இருப்பானா? எல்லாம் பணத்திற்காகத்தானே. அவனுக்குப் பின் அவன் சொத்தை ஆளலாம் என்ற எண்ணத்தற்காகத்தானே. ஆனால் இந்த மாதிரி கோணப்புத்தியுள்ள பெண்ணிடம் நான் ஏமாறுவது என்பது கனவிலும் நடக்காது!"

தன் தங்கையைப் பற்றி இவ்வளவு மோசமாக யாராவது பேசுவார்கள் என்று கனவிலும் அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் முகம் அவமானத்தில் சிவந்து போனது.

எவ்வளவோ சிந்தித்தவளுக்கு, அவள் பக்கம் ஏதேனும் நியாயம் இருக்கும் என்ற சிறிய சந்தேகம் கூட ஏற்படாததினால் அவன் தன் பங்கு நியாயத்தைக் கூறியபோது அவள் நிராயுதபாணியாகத்தான் நின்றாள்.

"உன் தங்கை செய்த காரியத்திற்கு உங்களை இந்த அளவோடு நான் நிறுத்தி இருக்கவே கூடாது என்கிறது என் உள் நெஞ்சு. அவள் யாரிடம் மோதுகிறாள் என்று புரிந்துதான் செய்கிறாளா? உங்கள் குடும்பமே இப்படித்தானோ... ச்சே... மானங்கெட்ட பிழைப்புகள்!" கோபத்தின் விளிம்பில் இருந்தான் அவன். முகம் இறுகிப்போயிற்று.

"என் தம்பி ஒரு பொழுது உணவை வெளியில் சாப்பிட்டால் போதும். அதுவே அவனுக்கு விஷம். இப்போது எங்கே, எப்படி இருக்கிறானோ..." என்று பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் குரல் லேசாக உடைய, சட்டென்று நிமிர்ந்து பார்த்த சுமித்ராவிற்கு அவன் முகத்தின் வேதனையும் கண்களில் மினுக்கென்று தோன்றி வைரமாய் மினுமினுத்த கண்ணீர்த் துளியும் என்னவோ செய்தது.

"உன் தங்கை மட்டும் நிஜமான அன்போடும் காதலோடும் அவனை நேசித்திருந்தால், இப்படி உயிருக்குக் கத்தி வைத்திருக்கமாட்டாளே. உண்மையான அன்பை, காதலை நிரூபித்திருப்பாளே. அவள் தந்த காதல் போதையில் என் சஞ்சய் மீள





வழியில்லாமல் என்னையே எதிர்த்து விட்டானே. சொல்... சொல் பெண்ணே, என் சஞ்சய் இருக்கும் இடம் சொல். நிறையப் பணம் சுருட்ட குடும்பத்தோடு போட்ட திட்டம்தானே. உனக்குக் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும். சொல்... சொல்.." என்று அவள் தோளைப் பிடித்து வேகம் வந்தவனைப் போல் உலுப்பி உலுப்பிக் கேட்க, இப்படி ஒரு தாக்குதலுக்குத் தயாராக இல்லாததால் பரிதாபமாக விழித்தாள். ஆனால் சமாளித்துக் கொண்டு, "எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லுவேன். என் தங்கை நீங்கள் சொல்வது போல் மோசமானவள் இல்லை. நாங்கள் பணம் பறிக்கும் கும்பலும் இல்லை. அபாண்டமாக முழுப் பழியையும் எங்கள் மேல் சுமத்துவது நியாயமே இல்லை!" என்றாள்.

"ஆஹா, தங்கைக்கு வக்காலத்தா?" என்று கோபத்தில் நகைத்தவன் "கூட்டுக் கொள்ளையில் உன்னுடைய பங்கென்ன பெண்ணே?" என்று பற்களைக் கடித்தான்.

அவனுடைய அலட்சியப் பேச்சில் சுமித்ராவிற்கு அடங்கியிருந்த கோபம் மீண்டும் பெருகியது.

"முதலில் உங்களுடைய தம்பியின் பங்கென்ன என்று அறிந்துவிட்டு, பின் என்னிடம் கேளுங்கள், சொல்கிறேன்," என்றாள் கோபத்துடன்.

"வேசிகள். வேசிப்பரம்பரை... எங்கே வயசுப்பையன்கள் கிடைப்பார்கள் என்று அலையும் புத்தி!" வார்த்தைகள் கத்தியாய் வந்து சுமித்ராவின் நெஞ்சைக் கிழித்தன.

அவள் கண்களில் அடிபட்ட சீற்றம் தெரிந்தது. செவ்வரி ஓடிச் சிவந்தது. அதில் இருந்த சீற்றத்தையும் தீர்க்கத்தையும் உண்மையையும் கண்டு, ரவீஷ் சில நொடிகள் அவளையே இமைக்காமல் பார்த்தான். பிறகு, "பெரிய கண்ணகி என்று நினைப்பு!" என்று நையாண்டி செய்யாமலும் விடவில்லை.



"அந்தக் கண்ணகியின் சக்தி மட்டும் எனக்கிருந்தால் இந்த ஒரு வார்த்தைக்கு உங்களைச் சுட்டுப் பொசுக்கியிருப்பேன்!" என்று பெண் நாகமாய்ச் சீறினாள் சுமித்ரா.

அதே சமயம் நின்றிருந்த தரை மேலும் கீழும் சரிய, தலைசுற்றி மயங்கி விழப் போகிறோமோ என்று நாற்காலியை உதவிக்கு அவள் பிடிக்க, அதுவும் கைப்பிடிக்குள் பிடிபடாமல் நழுவ, இது தனக்கு மட்டும் வந்த தலைசுற்றல் இல்லை என்று புரிந்து நிமிர்ந்து பார்த்தாள். மேஜை மேலிருந்த பொருட்கள் எல்லாம் உருளத் தொடங்கின.

சுமித்ரா ஒன்றும் புரியாமல் குழம்பி நின்றாள்.

## 7

சட்டென்று அவன் இவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு அறையிலிருந்து வெளியே ஓட, திமிறியபடி கூட ஓடிய சுமித்ராவிற்கும் புரிந்துவிட்டது. நில நடுக்கம்.

அதற்குள் ஆட்டமும் அதிகரிக்க, பொருட்கள் ஆடும் சத்தமும் பேரிரைச்சலாக ஒலிக்க, விநாடியில் சடசடவென்று சுற்களும், பெரிய பெரிய செங்கல்களும் சரிய, வாசலுக்கு ஓடுவது இனி பயன்தராது என்று தரதரவென்று ரவீஷ் அருகில் இருந்தவளை இழுத்துக் கொண்டு அங்கிருந்த ஒரு பாதுகாப்புப் பொருளான, தாத்தா காலத்துக் கனமான, உறுதியான வேலைப்பாடுகள் பல நிரம்பிய பெரிய தாமிர மேஜையின் அடியில் முதலில் அவளைத் தள்ளி, தானும் கால் மடித்து அவள் அருகில் அமர்ந்தான். இருவருக்கும் மூச்சு வாங்கியது.

அப்படி வேகமாக ஓடியும் இடிந்து விழுந்த ஒரு பெரிய சுவரின் நுனி சுமித்ராவின் தோள்பட்டையில் பட்டு அவளுக்கு உயிரே போகும் வேதனையைக் கொடுத்தது.

காதே செவிடாகும்படி மடமடவென்று சுவர்கள் சரிந்தன. நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டது அந்தக் கட்டடம் முழுவதுமா? இல்லை, அவர்கள் இருந்த பகுதி மட்டுமா என்று புரியவில்லை. கட்டடம் பூமிக்குள் கொஞ்சம் புதைந்தது மாதிரியான உணர்வைத்தான் அவர்களுக்குக் கொடுத்தது.

அவர்கள் தலையை, உடம்பைக் கூழாக்க என்று வந்த கற்களையும், செங்கல்களையும், சுவர்களையும் அவள் தாத்தா பாட்டி காலத்து அதிர்ஷ்ட மேஜை காப்பாற்றியது.

அதன் பிறகு எங்கும் கும்மிருட்டு.

நீண்டு இருந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் அடியில் சிக்குண்டு கிடந்த எத்தனையோ பேர்களில் ரவிஷும், சுமித்ராவும் உயிர்பிழைத்து மலங்க மலங்க விழித்தனர்.

ஒருவருக்கு மற்றொருவர் ஆதரவாகப் பிடித்திருந்த கையை விடுவதற்கு இருவருக்கும் தைரியம் வரவில்லை. அதிர்ச்சி நீங்கி முதலில் உணர்வுக்கு வந்தது ரவிஷ்.

திரும்பிப் பக்கத்தில் இருந்தவளைப் பார்த்தான். கொஞ்சம் கொஞ்சமாகக் கண்களுக்கு இருட்டு பழக்கப்பட்டுப் போக, சுமித்ராவின் முகமும் அவன் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவள் முகத்தில் தெரிந்த மரண பயத்தையும், கண்களில் பெருகிய கண்ணீரையும் கண்டு, நிகழ்வுக்குப் பொருந்தாமல் மெல்ல நகைத்தபடி, "சுற்புக்கரசி கண்ணகியேதான்!" என்றான்.

இப்படிப்பட்ட நேரத்தில் சிரிக்கும் அவனைக் கண்டு, கண்களைத் துடைத்த சுமித்ரா, பூகம்பம் நிகழ்வதற்கு முன்னால் நடந்த பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாய் அவன் அவளைக்



கண்ணகி என்றதை உணர்ந்ததும், தன்னையறியாமல் அவள் முகத்தில் சின்னதாய்ப் புன்னகை மலர்ந்தது.

அந்தப் புன்னகை, அந்தகார இருட்டில் திடீரென்று மின்னிய மின்னலைப் போல் ஒளிர்ந்ததைக் கண்டு ரவிஷ் நெஞ்சு திடுக்கிட்டுப் போனான்.

சுமித்ராவினால் உயிர் பிழைத்ததை இன்னும் நம்ப முடியவில்லை.

அம்மாவும் அப்பாவும் சுகமாக இருக்கவேண்டும். தங்கை இப்பொழுது எங்கு இருக்கிறாளோ. அங்கும் நில நடுக்கம் ஏற்பட்டிருந்தால், கடவுளே! தப்பித்திருக்க வேண்டுமே, இந்தப் பெரிய கட்டடமே பாதித்திருந்தால் சின்ன அவள் வீடு இன்னும் அதிகமாகச் சேதமடைந்திருக்குமோ என்று நொடியில் மனசு எல்லாரையும் சிந்தித்தது.

ரவிஷுக்கும் அவனுடைய தம்பி சஞ்சயை நினைத்தால் திகிலாக இருந்தது. கடவுளே! அவனுக்கு எதுவும் சேதம் நேர்ந்துவிடக் கூடாது என்று மனசு வேண்டியது.

"நாம தப்பிச்சிட்டோமில்லையா? திரும்பவும் நிலநடுக்கம் வர முன்னாடி வெளியே ஓடிப்போய் நின்று விடலாமா?" என்று கேட்டாள் சுமித்ரா.

"முதலில் இந்த மேஜையின் அடியிலிருந்து நம்மால் வெளியே வரமுடியுமா என்று பார்க்க வேண்டும்," என்று கண்களைச் சுழலவிட்டான் ரவிஷ்.

அப்போதுதான் சுமித்ராவும் கவனித்தாள். மேஜையின் நான்கு வழிகளும் சுத்தமாக, உடைந்து சிதறிய சுவர்களால் அடைபட்டிருந்தன. மெல்ல மெல்ல சுவாசிப்பதற்கும் சிரமப்பட வேண்டியிருப்பதைக் கண்டதும், "ஐயோ! நாம் இனிமேல் இந்த மேஜையின் அடியிலேயே உயிரோடு சமாதியாகிவிடுவோமா?" என்று அழுகையுடன் பயத்தில் கைவிரல்களால் வாயை இறுகப் பொத்த,



அதுவரை பெண்ணே பெண்ணே என்று விளித்தவன் 'சுமித்ரா' என்று முதல் முறையாகப் பெயரிட்டு அழைத்தான்.

"சுமித்ரா, என் தாத்தா பாட்டி கடவுளாக இருந்து நம்மை இந்த மேஜையின் உதவியால் காப்பாற்றிவிட்டார்கள். இனி நாம் நம் அதிர்ஷ்டத்தாலும், புத்திசாலித்தனத்தாலும் உயிர் பிழைக்க வேண்டும். இனி இங்கிருந்து நாம் வெளியே போகும்வரை உன் கண்களில் கண்ணீர் வரக்கூடாது. அது நம்முடைய முயற்சியைக் குலைத்துவிடும். உயிர் பிழைக்க வேண்டும் என்ற உறுதியையும் தளர்த்துவிடும்."

வேகமான கொஞ்சம் சந்தோஷம் நிரம்பிய கேள்வி ஒன்று சுமித்ராவிடம் இருந்து பிறந்தது.

"நம்மை மீட்க என்று மீட்புப் பணிகள் ஆரம்பித்து நம்மை உடனே காப்பாற்றிவிட மாட்டார்களா?"

"கவனி சுமித்ரா. நிலநடுக்கத்தால் எவ்வளவு இடங்களில் எப்படிப்பட்ட பாதிப்புகள், எந்த அளவில் நிகழ்ந்திருக்கும் என்று நமக்குத் தெரியாது. இரவு நேரம் என்பதால் மீட்புப் பணிகள் தொடங்குவதற்கும் தாமதம் ஆகலாம். ரோடுகள் பிளந்து பாதிக்கப்பட்டிருந்தாலும், இதைவிட பொது மக்கள் நிரம்பியிருக்கும் ஷாப்பிங் ஆர்கேட், அலுவலகங்கள், ஹோட்டல்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும், இங்கே வருவதற்குத் தாமதிக்கலாம். அதுவும் தவிர இத்தனை பெரிய சேதத்தில் நாம் உயிருடன் இருப்போம் என்று துரிதமாக மீட்புப் பணியில் ஈடுபடுவார்கள் என்பது என்ன நிச்சயம். ஆகவே நம்மால் முடிந்த வரை நாம் பிறரை நம்பாமல் வெளியே செல்வதற்கு முயலவேண்டும். முடியவில்லை என்றால் கடவுள் விட்ட வழி!" என்று அவன் பிரசங்கம் போலப் பேசி முடிக்கவும், சுமித்ராவின் நெஞ்சு மூச்சுவிடச் சிரமப்பட்டு மேலும் கீழும் வேகமாக ஏறி இறங்க,



ரவிஷ் கிடைத்த பெரிய கல் கொண்டு தங்களை மூடியிருந்த சுவரின் ஒரு பக்கத்தை வேகமாகக் குத்த, அது சிறிது கூட ஆடாமல், அசையாமல் பெருமிதமாக நின்றது. மற்றொரு புறத்திலும் அதே நிலைதான். ரவிஷ் கூட ஒரு நொடி கலங்கி, கண் மூடினான். சட்டென்று அவனுடைய கார் கீ செயினில் உள்ள சின்ன லைட் ஞாபகத்திற்கு வந்தது. அந்த சின்ன 'ஸ்பாட்' லைட்டின் உதவியுடன் மேஜையைச் சுற்றி உள்ள சுவரை ஆராய்கையில் ஒரு முனையில் சின்ன ஓட்டை வழியாக மிக லேசாக ஸ்பாட் ஒளி வெளியே ஊடுருவுவது தெரிய, விரல் கொண்டு லேசாக ஓட்டையின் அளவைப் பார்த்தான். திடீரென்று அந்த ஓட்டையில் மண் சரிந்து அந்த ஓட்டை கொஞ்சம் கொஞ்சமாக விரிய, சட்டென்று கல் கொண்டு இடித்தான்.

அந்த இடம் தூள்களான மண்மேடாக இருக்க, வேகமாக வழிவிட்டது. மூச்சுவிடக் காற்றும் சுலபமாக வர, அப்பாடா என்றிருந்தது அவனுக்கு. ஆனால் ஒரு ஆள் புகுந்து வெளியே செல்லுமளவுக்கு விரிந்து கொடுத்தது. அதன் பிறகு அசையவேயில்லை. வழி கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் "சுமித்ரா" என்றழைத்தபடி அவள் தோள்பட்டையைப் பற்றி, இழுக்க,

அவள், "அம்...ம்...மா!" என்று வலியில் உரக்கக் கத்தி விட்டாள்.

"என்ன ஆச்சு?" பதட்டமான குரலில் புரியாமல் உடனே அவள் தோள்பட்டையிலிருந்து கையை எடுக்க,

"ஓடி வரும்பொழுது சுவரின் ஓரம் இடித்துவிட்டது!" என்று வலியில் முகத்தைச் சுருக்கியபடி சுமித்ரா சொல்ல,

"இரத்தம் வரவில்லை என்றால்... மைகாட்... ப்ராக்சர் ஏதாவது ஆகியிருக்கா? எங்கே, கையை அசைத்துப் பார்!"

என்று அவன் சொல்லியபடி அவள் கையைப் பிடித்து மெதுவாக உயர்த்த, வலியோடு மெல்ல மெல்ல உயர்த்தினாள் சுமித்ரா.

"தேங்க் காட். உன்னால் உயர்த்த முடிகிறது. ப்ராக்சர் இல்லை. உள்காயம்தான். இரத்தக் கட்டு.. சுமித்ரா கடவுள் நம் பக்கம் இருக்கிறார். நீ முதலில் மெதுவாக அந்த ஓட்டையில் தலையை வைத்து, ஊர்ந்து மெல்ல வெளியே போய்விடு. உன் பின்னாலேயே நானும் வருவேன். புரிந்ததா?" என்றபடி அவன் அவளை ஓட்டை வழியாக நகர உதவி செய்தான்.

கை நரக வேதனையைத் தந்ததால் அவளால் கை ஊன்றி நகரமுடியாமல் போனது. அவளின் வேதனையை உணர்ந்து, முதலில் தான் வெளியில் சென்று, அவளை அவனுடைய பலத்தினால் இழுத்தால்தான் வெளியே வரமுடியும் என்று புரிந்து கொண்டு, அவளை ஒதுங்கி இருக்கச் சொல்லி, ஓட்டையில் அவனுடைய தலையை வைத்து, எக்கி கைகளை நீட்டி முன்னால் கொண்டு வந்து, தன் விரிந்த வலிய தோள்பட்டையை குறுக்கி, மறுபுறத்தில் கரடு முரடாகக் குத்திய தரையில் கைகளை ஊன்றி மெதுவாகக் கையால் நடக்க, அவன் முழுவதுமாக வெளியே வந்தான். நிற்பதற்கும் ஒழுங்கான இடம் இல்லை. அவனுடைய அலுவலகம் தான் இது என்று சொல்லும்படி ஒன்றுமேயில்லை.

"சுமித்ரா! தலையை வெளியே நீட்டு. முடிந்த அளவு உடம்பையும் கொஞ்சம் அந்த ஓட்டையில் நகர்த்து!" என்றவன், அவள் அவன் கைப்பிடிக்கு அடங்கும் வரை வந்தவுடன் அவளை மெதுவாக இழுத்துத் தூக்கிவிட்டான். அவன் தூக்கும் போது வலியில் முனங்கியவளிடம், "பொறுத்துக் கொள் சுமித்ரா... இதோ வந்தாயிற்று. இதோ... அவ்வளவுதான்..." என்று மென்மையாகத் தேற்றியபடி சின்னக் குழந்தைக்கு உதவுவது போல நடந்து கொண்ட விதம் சுமித்ராவிற்கு உள்ளூரப் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது.



# 8

"அப்பாடா...!" என்று வெளியே வந்து நின்ற சுமித்ராவிற்குச் சுற்றிலும் பார்த்த பிறகு பயம் பற்றத் தொடங்கியது.

எங்கும் போக முடியாத அளவிற்குச் சுவர்கள் இடிந்து கிடந்தன. மணல் மழை போல் அவ்வப்பொழுது மண் துகள்களும் விழுந்தவண்ணம் இருந்தன.

சிறிய ஸ்பாட் லைட் வெளிச்சத்தில் பிரமாதமாக ஒன்றுமே கண்களில் படவில்லை. தட்டித் தடவிக் கொண்டு, பாதி உடைந்த நிலையில், இருந்த சுவரில் சரிந்தபடி அமர்ந்தனர் இருவரும். ஏதோ கற் குவியலில் இருந்த உணர்வுதான் இருவருக்கும் உண்டாயிற்று. மேற்கூரை என்று சொல்லும் படியாக ஒன்றும் இல்லை. கன்னாபின்னாவென்று உடைந்து செங்கல் சுவர்கள், இரும்புக் கம்பிகளைத் துருத்திக் கொண்டு தாறுமாறாக விழுந்து கிடந்தன. இரண்டு மாடியும் இடிந்து அவர்களின் மேல் கிடக்கிறது என்பது அவர்களுக்குப் புரிந்தது.

திடீரென்று சுமித்ரா நினைவு வந்தவளாய், "உங்கள் செல்போன் உங்களிடம் இப்பொழுது இருந்தால் யாரிடமாவது விஷயத்தைக் கூறலாமே!" என்று கண்களில் ஒளியுடன் அவள் கேட்க,

"தாவி ஓடி வரும்போதே மேஜையின் காலில் பலமாக இடிபட்டது. அது வேலை செய்யும் என்ற எண்ணம் எனக்கில்லை!" என்று கூறியபடி இருட்டில் தன்னுடைய பாக்கெட்டைத் துழாவினான். அவன் கணித்தது உண்மைதான். அது உடைந்து போயிருந்தது.



"நல்லவேளை நிலநடுக்கம் ஆபீஸ் நேரம் முடிந்தவுடன் வந்தது. இல்லை என்றால் நிறைய உயிர்ப்பலி நிகழ்ந்திருக்கும். சோலங்கியும் இன்னும் வேலை செய்து கொண்டிருந்த மற்ற சிலரும் தப்பியிருக்க வேண்டுமே!" என்று பேசிய அவன் குரலில் பரிதவிப்பு இருந்தது.

எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறோம் என்று ஒரு கணம் நினைத்த சுமித்ராவிற்கு உடம்பில் சிறு நடுக்கம் உண்டாயிற்று. அதற்குள் அவன் அவளின் நடுக்கத்தின் காரணத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, "மிகவும் வலிக்கிறதா?" என்றபடி ஆராய்தலாகத் தோள்பட்டையைத் தடவிப் பார்த்தான். வீக்கம் நன்கு பொங்கித் தெரிந்தது. உடனடியாக அவளுடைய வலிக்கு நிவாரணமாக ஒன்றும் செய்யமுடியவில்லையே என்று அவனுக்குக் காரணமின்றித் தன் மீதே கோபம் வர, திகைத்தான் ரவீஷ்.

அதுவரை இருந்த பதட்டத்திலும், குழப்பத்திலும் சுமித்ராவுக்கு அவனுடைய அண்மை, தண்ணீர், மூச்சுக்காற்றுப் போன்று இன்றியமையாத தேவையாயிருந்தது. ஓரளவு நிதானமும், பெருமளவு உயிர்ப் பயமும், பதட்டமும் குறைந்த இந்த நேரத்தில் அவனுடைய அண்மையும் தொடுதலும் சுமித்ராவிற்கு ஒருவித நடுக்கத்தைத் தர, அவனறியாமல் மெல்ல விலகி அமர்ந்தாள்.

அவளுடைய விலகலை அவன் உணராமல் இல்லை. உதடு ஒருவிதமாக வளைந்தது.

சுமித்ராவிற்குப் பசி வேறு காதை அடைத்தது. காலையில் வேண்டாவெறுப்பாக இரண்டு இட்லியைக் கொறித்ததுதான். அதன் பிறகு அவனைப் பார்த்தே தீர வேண்டும் என்ற வைராக்கியத்துடன்,மதியம் சாப்பிடுவதற்குக் கூட எழும்பவில்லையே.

காலையிலிருந்தே சுமித்ரா, அவனைச் சந்திப்பதற்காகக் காத்துக் கிடந்தது ரவீஷுக்குத் தெரியும். அப்பாயின்ட்மென்ட்



இல்லை என்றால் பார்க்கமுடியாது என்று சொல் என்று சொல்லி அனுப்பியதும் அவன்தான். ஆனால் அவள் சொன்னாலும் கேட்காமல் பிடிவாதத்துடன் உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தது அவனுக்குத் தெரியும். லஞ்ச் டைம்லே கூட சாப்பிடாமல் அங்கேயே உட்கார்ந்துட்டு இருக்காங்க சார். மகா பிடிவாதம் என்று சோலங்கி மெதுவாகத் தயங்கிச் சொல்லிவிட்டுப் போனதும் நினைவில் இருந்தது.

இனிமேல் வெளியே செல்வது எப்பொழுது? அவளுக்குச் சாப்பிட ஏதேனும் கிடைப்பதுதான் எப்பொழுது? சட்டென்று மீண்டும் திடுக்கிட்டுப் போனான். சுற்றிச் சுற்றி அவளின் நலனையே அவன் மனம் விழைகிறதே. ஏன்? அவளும்தான் பட்டினி கிடக்கப் போகின்றாள். பின் ஏன்? யோசிக்காதே மனமே என்றபடி சுமித்ராவின் புறமாகத் திரும்பினான் அவன்.

மணி எட்டு இருக்குமா? இல்லை ஒன்பதா? சந்துரு வீட்டில் தான் இல்லாமல் என்ன செய்வான் என்று சிந்தித்துக் கொண்டிருந்த சுமித்ரா, ரவீஷிடம் அசைவை உணர்ந்தாள்.

"என்ன?" என்று அவனிடம் சுமித்ரா கேட்க,

"பசிக்கும் இல்லையா? ப்ரிட்ஜ் சேதமின்றி தப்பித்து இருக்கிறதா என்று பார்த்து வருகிறேன். அதில் பழங்கள் இருந்தன!" என்றபடி அவன் எழுந்து நிற்க முயற்சிக்க சுமித்ரா அவன் கைகளைச் சட்டென்று பிடித்துத் தடுத்தாள்.

"இல்லை... வேண்டாம். நிறையக் கம்பிகள் நீட்டிக் கொண்டிருந்தது. வெளிச்சமும் சுத்தமாக இல்லை. குறுக்கும் நெடுக்குமாய் இருக்கும் சுவர் தடுக்கி விழுந்து ஏதாவது ஆகிவிடும். ப்ளீஸ் போகாதீர்கள்!" என்று அச்சத்துடன் அவள் சொல்ல, ஒரு நிமிடம் ரவீஷிடம் அசைவில்லை.

பின் மெல்ல அவள் கைகளை விலக்கி, அவள் சொன்னதைக் கேட்காமல், தடவித் தடவிச் சென்றவனுக்கு மேடும்

பள்ளமுமாக இருந்த தரை கீழே விழத்தட்ட, கால்களிலும், கைகளிலும் கம்பிகள் குத்த, சிராய்ப்பு தந்த வலியுடன் 'ஸ்..ஸ்...' என்றபடி மீண்டும் அவளைத் தேடி அவளருகே வந்து அமர்ந்தான் ரவீஷ்.

நேரம் சென்று கொண்டேயிருந்தது. கும்மிருட்டிலும் புழுக்கத்திலும் இருவருக்கும் தூக்கமும் வரவில்லை.

காலையில் சூரியனின் வெளிச்சத்திலாவது அவர்களால் கட்டடத்தின் சிக்கலில் இருந்து வெளியே வர முடியுமா என்பது கேள்விக் குறியாக இருந்தது.

பக்கத்தில் இருந்த ரவீஷைப் பற்றிய சிந்தனைகள்தான் சுமித்ராவை அப்பொழுது ஆக்ரமித்தன.

கட்டடம் சரியும்போது முதலில் தன் உயிர் காக்க மேஜையின் அடியில் நுழையாமல், அவன் வெறுத்து வெகுண்டு போய் இருந்த குடும்பத்தின் பிரதிநிதியான தன்னை முதலில் பாதுகாப்பாக அனுப்பியபோதே சுமித்ராவிற்கு வித்தியாசமாகபட்டது. பாரம்பரியமான அந்த ஆண்களின் வீரமும் ஆண்மையும், பெண்ணவளின் மனதில் சலனத்தை உண்டு பண்ணியது மறக்க முடியாத உண்மை.

பிறர் நலம் காக்க விழையும் இவன், தன் குடும்பத்தை மிரட்டுவதற்கு எப்படிக் குண்டர்களை அனுப்பி வைத்தான்?

எந்த அளவிற்கு அவன் தன் தம்பியை நேசித்திருந்தால், இப்படி ஒரு அடிதடியில் இறங்கியிருக்க வேண்டும் என்று யோசித்தாள்.

மேஜையினுள் இருந்த அந்தத் துளையின் வழியே அவளை இழுப்பது ஒன்றும் சுலபமான காரியம் இல்லை. எப்படியோ தொலைந்து போ என்று விட்டுவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் அவளுடைய ஐம்பத்தைந்து கிலோ எடையை அவன் எவ்வளவு ஜாக்கிரதையாக, தோள்பட்டையில் பெருமளவு



சேதம் ஏற்படாதவாறு இழுத்ததை நினைத்தால், சுமித்ராவிற்குக் கண்களில் கண்ணீர் கோர்த்தது.

இரண்டு மூன்று நாட்களாக அவனை ஒரு பெரும் வில்லாதி வில்லனாகக் காறி உமிழ்ந்து வெறுத்து அருவருத்துப் போய் இருந்த சுமித்ரா, இந்தச் சில மணி நேரத்தில் அந்த வில்லனின் சாயலைக் கூடக் காண முடியாமல் குழப்பமடைந்தாள்.

இவனில் எது உண்மை?

இப்படியாக அவள் நினைவுகள் சறுக்க, அவளறியாமல் தூக்கத்தில் சுமித்ராவின் கண்கள் மூடின.

## 9

தோள்பட்டை விண்விணென்று வலியில் தெறிக்க, படுத்திருந்த நிலையில் இருந்து திரும்ப முயன்ற சுமித்ரா, சட்டென்று நிலநடுக்கமும், தங்களின் உயிர்ப் போராட்டமும் நினைவு வர, 'அட... இவ்வளவு கஷ்டத்திலும் எப்படி உறங்கினேன்!' என்று எண்ணியபடி கண் திறந்தாள்.

நேற்றுவரை முற்றிலும் அன்னியமானவனின் தோள் வளைவில் தான் சரிந்து படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

ரவீஷ் கால்களைக் கற்குவியல்களின் மேல் வசதியாக நீட்டி ஒரு கையைத் தலை மேல் மடித்து வைத்தபடி, மற்றொரு கையால் அவளைத் தன் தோள் வளைவில் அணைத்தபடி இருப்பதைக் கண்டு, சுமித்ராவின் மூச்சே நின்றுவிடும்படி நெஞ்சு படபடவென்று வேகவேகமாகத் துடித்தது.



'அய்யோ... இது என்ன கோலம்? யாரோ ஒருவனின் அணைப்பிலா இவ்வளவு நேரம் தூங்கியிருக்கிறோம்?' அவமானமும் அசிங்கமும் அவளை வெட்கித் தலை குனிய வைத்தது. மெல்ல மூச்சுக் காற்றை உள்ளிழுத்தபடி, அவன் தூக்கம் கலையாதவாறு, மெல்ல அவன் கையை விலக்கி நகர்ந்து எழும்பி நின்றாள். சுவர் தலையை முட்ட, குனிந்து நின்றாள்.

விடியத் தொடங்கியிருந்ததால் சற்றே சூரிய வெளிச்சம் ஒரு ஓரமாகக் கட்டடத்துள் அடித்தது. அந்தச் சிறிய அளவு வெளிச்சம், உள்ளே கட்டடம் எந்த அளவு பாதிக்கப் பட்டிருக்கிறது என்று கணிக்கப் போதுமானதாக இருந்தது.

அறையை விட்டு வெளியே செல்வதற்கான வழி ஒன்றும் தெரியவில்லை. இரண்டாவது மாடியின் நீண்ட நெடிய குறுக்குச்சுவர் அப்படியே சரிந்து விழுந்ததினால் அவர்களுக்கு வெளிப்புறம் செல்லும் வழியும், மார்க்கமும் அடைபட்டுப் போயிற்று.

மேஜையின் அடியில் புத்திசாலித்தனமாகப் பதுங்காமல், கட்டடத்தை விட்டு வெளியே ஓட எண்ணியிருந்தால் அந்தக் குறுக்குச் சுவரில் உயிரோடு புதைந்திருக்க வேண்டியதுதான் என்ற எண்ணம் அவள் உள்ளே ஓட, சுமித்ராவின் மேனி நடுங்கியது.

காப்பாற்றியவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். பசி வேறு வயிற்றைக் கிள்ள, அவன் சொன்னதைப் போல் ப்ரிட்ஜ் கண்களுக்குத் தெரிகிறதா என்று சற்றும் முற்றும் பார்த்தபடி வெகு ஜாக்கிரதையாக நடந்தாள்.

அடிபட்ட தோள்பட்டையைச் சிறிது நகர்த்தினாலும் தாளமுடியாத அளவிற்கு வலித்தது. உச்சுக் கொட்டிக் கொண்டு குறுகி, குனிந்து, தட்டுப்படாமல் பார்த்துப் பார்த்து நடந்த சுமித்ரா ஒரு பக்கமாகக் குறுக்குச் சுவரின் அடியில் இடுப்பளவு குனிந்து போகுமளவுக்கு இடமும் கிடப்பதைக் கண்டு,



மெல்லக் குனிந்து அதனுள் நுழைந்தாள். அது மற்றொரு அறை. அவர்கள் இருந்த இடத்தை விட இந்த இடம் கொஞ்சம் சரிவாக இருந்தாலும் மேலே மேற்கூரை நிலையாக நின்றது. அப்படியே மேலே பார்த்துக் கொண்டு மெல்ல நகர்ந்த சுமித்ரா, ஏதோ காலை இடற, சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தாள். எதில் இடறினோம் என்று குனிந்து பார்த்த அவளிடமிருந்து "ஓ..." என்று அலறல்தான் எழுந்தது.

தூக்கத்திலிருந்து எழுந்த ரவீஷ் பக்கத்திலிருந்தவளைக் காணாமல் திகைப்படைந்த நேரத்தில்தான் சுமித்ராவின் அலறல் பலமாக எழுந்தது. குரல் வந்த திசையில் தடுமாறி ஓடிச் சென்றவன், அவளை எங்கும் காண முடியாமல், குறுக்குச்சுவரின் அந்தப் புறத்தில் இருந்துதான் அலறல் சத்தம் வருகிறது என்று புரிந்து, கிடந்த இடைவெளியில் அவனும் நுழைந்தான்.

"சுமித்ரா! என்னவாயிற்று?" என்று வேகமான குரலில் கேட்டபடி வந்தவன் சோலங்கி உயிரற்ற நிலையில் தரையில் கிடந்த கோலத்தைக் கண்டதும் கண்மூடி விரைத்துப் போனான்.

"ஐ... யோ... பாருங்களேன், நேற்றுப் பார்த்தவன் இன்று உயிரோடு இல்லை. இந்த இயற்கையின் சீற்றத்திற்கு என்ன காரணம். நானும் இவரோடு இந்த மண்ணோடு அழிந்திருக்க வேண்டியவள்தான். நீங்கள் மட்டும்..." என்று பயத்தில் பிதற்றியவளின் உதட்டை விரல் கொண்டு மூடி மெல்ல அவளை ஆறுதலாக அணைத்தான்.

சுமித்ராவிற்கும் அச்சமயம், அந்த அணைப்பு பெரும் நிம்மதியாகத்தான் இருந்தது. மெல்ல அவன் உறுதியான நெஞ்சில் முகத்தைப் பதித்து அழுதவளுக்கு, உலகமே அப்போதுதான் விடிந்தது. தன் செயலை நினைத்து புழுங்கி உடனே விலகினாள். ஏற்கெனவே வயசுப் பையன்களை

வளைத்துப் போடும் பரம்பரை என்று ஏசி, ஏதோ வாயிலேயே சொல்லக் கூசும் பட்டத்தையும் அவனுக்கு அவள் கொடுத் திருக்கிறாளே!

இப்போது என்ன சொல்லப் போகிறாளோ? தன்னிரக்கத்தில் கண்களோடு சேர்ந்து நெஞ்சமும் அழ,

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவீஷ், உதட்டைப் சுருட்டி பற்களினால் கடித்தான்.

"இடியட்!" என்ற வார்த்தையை மெல்ல முனகலாய் அவ னுடைய அதரங்கள் முணுமுணுத்தன. நீண்ட மூச்சை விட்டு தன்னை நிதானித்தவன் அந்த அறையை நோட்டம் விட்டான். அந்த அறையில் ஒளியின் ஊடுருவல் அதிகமாக இருக்க, கட்டடத்தின் திறந்த பால்கனி இன்னும் பெரிதாக உடைந்து திறந்திருந்தது தெரிந்தது.

உடனே ஓடிச் சென்று பால்கனியை எட்டிப் பார்த்தவன், முதல் மாடி பால்கனி கீழே பொத்தென்று குதிக்கும் அளவிற்கு கீழே இறங்கியிருந்தது கண்டு திகைத்தான். நிலநடுக்கத்தின் பாதிப்பு மிகவும் உக்கிரமாகத்தான் இருந்திருக்கிறது.

பிறகு இருவருமாக பால்கனி வழியாகத் தரையில் குதிக்க, முன் வாசலில் ஆட்கள் மீட்புப் பணியில் தீவிரமாக இறங்கியிருப்பது தெரிந்தது.

அவனுடைய அண்மையிலிருந்து விடுபடப் போகிறோம் என்பது, என்ன? ஏது என்கிற புரியாத ஒரு மனநிலையை உண்டு பண்ண, தடுமாறிப் போனாள் சுமித்ரா.

நிறைய நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் உயிருக்குயிராகப் பழகிய ஒருவரைப் பிரிந்து செல்லும் உணர்வு கடுமையாகத் தாக்க, அந்தத் தாக்கத்தில் அழுகை பேரலையாக நெஞ்சில் எழ, ரவீஷை நிமிர்ந்து பார்க்கும் தைரியமும் இல்லாமல், சுமித்ரா அவன் நின்ற திசையில் இருந்து மறுதிசையில் ஓட்டமும் நடையுமாக ஓடி மறைந்தாள்.



அவள் போவதையே கண் இமைக்காமல் பார்த்த ரவீஷ், அள்ளி துள்ளி விழுந்த கதையாய் அவளிடம் தன்னைத் தொலைத்து விட்டதை அதிர்ச்சியுடனும் சிலிர்ப்புடனும் உணர்ந்தான்.

## 10

ரோட்டில் நடக்கையிலேயே சுற்றும் முற்றும் பார்த்த சுமித்ரா 'எம்பாஸி டெக்ஸ்டைல்ஸ்' கட்டடம் பாதிக்கப்பட்ட அளவிற்கு வேறு ஒரு கட்டடமும் பாதிக்கப்படாததைக் கண்டு சிறிது நிம்மதியடைந்தாள். ரோடுகளில் மக்கள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். முகங்களில் கலவரமும் பீதியும் பீடித்திருந்தன.

இவர்கள் இருக்கும் வீட்டுப் பகுதியை வந்தடைந்த சுமித்ராவிற்கு அவர்கள் வீடுகளில் சேதம் ஒன்றும் ஏற்படாமல் இருக்கவே கொஞ்சம் நிதானமடைந்தாள்.

அவர்கள் பக்கத்து வீட்டுக் குஜராத்திப் பெண்மணி சுமித்ராவை கண்டதும் ஓடி வந்து குஜராத்தியில் பேசினார். எங்கே போயிருந்தாள், வீட்டில் மற்றவர்கள் எங்கே? என்று அவளுக்கு விவரம் அறிய வேண்டியிருந்தது. அம்மா,அப்பா கோவிலுக்குச் சென்றிருப்பதால் தான் தோழியின் வீட்டில் தங்கியிருந்துவிட்டு வருவதாகப் பொய்யைச் சின்னக் குறுகுறுப் புடன் சொன்னாள் சுமித்ரா. வேறு வழியும் தெரியவில்லை. இங்கே எல்லோரும் நிலநடுக்கத்தில் பயந்து வீட்டிற்குள்ளே செல்லாமல், பாதி இரவு வெளியிலேயே கழித்தார்களாம். அந்தப் பெண்மணிக்குச் சொல்லித்தானவில்லை. பாத்திரங்கள்



எல்லாம் உருண்டதாம். மேஜை, நாற்காலி கிடுகிடு என்று ஆடியதாம். திரும்பவும் நிலநடுக்கம் வந்தாலும் வரும் என்று சொல்கிறார்களாம். ஜாக்கிரதையாக இரு என்று சொல்லி அனுப்பினார் அவர்.

வீடு வந்து சேர்ந்த சுமித்ராவிற்கு மனசு நிலைகொள்ளாமல் தவித்தது. வாசலில் செருகி வைக்கப்பட்டிருந்த செய்தித் தாளைக் கையில் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த சுமித்ரா சோபாவில் சிறிது நேரம் அப்படியே சரிந்தாள். பின் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு நிலநடுக் கத்தைப் பற்றி வந்த செய்திகளில் கண்களைச் செலுத்தினாள்.

ஒரு இரவில் என்னவெல்லாம் நடந்துவிட்டது!

அதற்குள் தொலைபேசி அழைக்க, சுமித்ரா பதில் கொடுத் தாள்.

"அப்பா!" என்று இவள் சொன்னவுடன், "அம்மாடி!" என்று அவர் நிம்மதிப் பெருமூச்சு விடுவது அவளுக்கு நன்றாகக் கேட்டது.

"அங்கே ஒன்றும் பயமில்லையே. இரவிலிருந்து போன் செய்கிறேன். எடுக்கவே இல்லை என்றதும் பயந்து போய்ட் டேம்மா. போன் அவுட் ஆஃப் ஆர்டரா?" என்றார்.

"நம்ம வீட்டுப் பக்கத்தில் பாதிப்புகள் அதிகமில்லைப்பா. நகரத்திலிருந்து நூற்று ஐம்பது கிலோ மீட்டர் தள்ளிதான் பாதிப்பு அதிகமாக இருந்திருக்கிறது. இங்கேயும் இரண்டு மூன்று புதிய பெரிய கட்டடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மற்றப்படி வேறு விஷயம் இல்லை. நீங்கள் எப்ப கிளம்பறீங் கப்பா?" என்று முடித்தாள்.

நகரத்தில் சேதம் அடைந்த மூன்று கட்டடத்தில் எம்பாஸி டெக்ஸ்டைல்ஸும் ஒன்று என்று சொல்ல நா எழவில்லை.

"இன்று சாயங்காலம் கிளம்புகிறோம். நாளை மதியம் வந்து சேர்ந்து விடுவோம். ஜாக்கிரதையாக இரு!" என்று போனை வைத்தார் அவர்.



சந்துரு என்ன ஆனான் என்ற கேள்வி அவளைக் குடையத் தொடங்க, மீண்டும் டெலிபோன் ஒலித்தது.

"சுமி.. ஒன்றும் ப்ராப்ளம் இல்லையே? ஸாரி... என்னால் இரவு வீடு திரும்ப முடியவில்லை. என்னோட கம்பெனியின் பக்கத்தில் உள்ள புதிய கட்டடம் கொஞ்சம் விழுந்துவிட்டது. இடிபாடுகளில் சிக்கியவர்களை வெளியே கொண்டு வர என்னால் ஆன உதவியைச் செய்து கொண்டிருக்கிறேன். நைட் வந்துடுவேன். நீ ஜாக்கிரதையாக வீட்டிலேயே இரு!" என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தான் சந்துரு.

தோள்பட்டையில் ஏற்பட்ட வலியால் இடது கையை உபயோகப்படுத்த முடியவேயில்லை. வீட்டில் இருந்த வலி மாத்திரை இரண்டைப் பாலுடன் சேர்த்து முழுங்கினாள். சிறிது நேரம் குறைந்த வலி மீண்டும் அதிகரிக்க, பக்கத்தில் உள்ள டாக்டரிடம் சென்று காட்டிவிட்டு வந்தாள்.

பயப்படும்படியாக ஒன்றும் இல்லை என்று அவர் சொல்லி, ஆயின்மெண்ட்டுடன் இரண்டு மாத்திரையையும் எழுதிக் கொடுத்தார். மதியம் தயிர் சாதமும் மாத்திரையும் விழுங்கியவளுக்குத் தோள் வலி கொஞ்சம் மட்டுப்பட்டது. வீக்கமும் சிறிது குறைந்தது.

வீட்டில் வேறு வேலையே ஓடவில்லை. ஸ்வாதியை நினைத்தால் மனது கஷ்டமானது. நிலநடுக்கம் பெருமளவு பாதிக்கப்பட்ட இடம், குஜராத்தின் மறுமுனை. அந்த மாதிரி இடங்களுக்குத் தங்கை செல்லும் சாத்தியக்கூறு மிக மிகக் குறைவு என்பதால் கொஞ்சம் நிம்மதியும் உண்டாயிற்று. கூடவே ரவீஷின் நினைவும் மனசை விட்டு அகலவேயில்லை.

ஒவ்வொரு விஷயத்திலும் அவளின் நலத்தை, அவளின் பாதுகாப்பை என்று அவன் கவனித்தது, பெண் அவளுக்கு எப்படிப்பட்ட உணர்வைக் கொடுத்திருக்கும் என்று புரியவே கூடாது என்று வேண்டிக் கொண்டாள்.

அவளுள் பல கற்பனைகள் முளைவிடத் தொடங்கியதும் அப்போதுதான்.

ஆனால் அந்தக் கற்பனைகளை அவள் வளரவிடாமல் அடக்கியது அவள் புத்திசாலித்தனம்.

கை வலியைக் காரணம் காட்டி ஆபீஸில் மேலும் இரண்டு நாள் லீவு எழுதிக் கொடுத்தாள் சுமித்ரா.

அவள் தூங்குவதற்காகக் கண்களை மூடும்பொழுதெல்லாம் ரவீஷ் தம்பியைப் பற்றிப் பேசினபோது வைரம் போல் ஜொலித்த அந்தக் கலங்கிய கண்கள், சதா அவள் நினைவில் வந்து பெரும் சங்கடத்தை உருவாக்கின.

அவன் கண்களில் கண்ணீர் வரத் தன் தங்கையும் ஒரு காரணமாகி விட்டாளே என்ற கவலை நேரம் ஆக ஆக அதிகமாக, தன் எண்ணம் போகும் போக்கில் சுமித்ரா அதிர்ந்து போனாள்.

ஒரே நாளில் சந்திப்பின் விளைவாக அவனின் நலத்திற்காகத் தான் யோசிப்பதை உணர்ந்து பல்லைக் கடித்தாள். ஆனால் நினைவுகளின் போக்கில் ஒரு மாற்றமும் இல்லை.

முதலில் அவனுடைய தம்பியை அவனிடம் சேர்க்க வேண்டிய முயற்சியில் இறங்க வேண்டும். என் தங்கையும் தப்பானவள் அல்ல என்று நிரூபிக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

மீண்டும் டெலிபோன் மணியடிக்க, எடுத்த சுமித்ராவிற்குக் காதில் வந்து பாய்ந்த வார்த்தைகளைக் காட்டிலும், அந்தக் குரல் அவளைப் பரவசமூட்டியது.

''ஹலோ...'' என்று இவள் சொல்ல,

''சஞ்சயைப் பற்றிய எந்த விஷயம் தெரிந்தாலும் உடனே தெரியப்படுத்து!'' என்று ஆணையிட்டு விட்டு இவள் பதிலேதும் சொல்லுமுன் வைத்துவிட்டான்.



அவளுடைய உள்ளம் போன போக்கை அறிந்திருப்பானோ? அதனால் என்னிடம் இருந்து எதையும் எதிர் பார்த்துவிடாதே, தன் தம்பியைப் பற்றின விஷயம் என்றால் மட்டும் தொடர்பு கொள். மற்றப்படி என்னைத் தொந்தரவு செய்யாதே என்கிறானா? மூளை குடைந்தது.

இப்படிப் பல வகையான சிந்தனையுடன் முதல் நாள் சென்றது.

மறுநாள் மத்தியானம் சுவாமி தரிசனத்தை முடித்துவிட்டு சின்னத்துரையும், மங்களமும் வீட்டிற்குள் நுழைய, கூடவே நுழைந்தான் கூரியர் பாய். அவனிடமிருந்து கவரை வாங்கிப் பிரித்துப் படித்த சின்னத்துரைக்கு சந்தோஷம் தாளவில்லை.

''மங்களம், ஏதோ தவறுதலாக... டிஸ்மிஸ் கடிதம் மாற்றி எனக்கு அனுப்பப்பட்டு விட்டது. மிகவும் வருந்தி எழுதியிருக்கிறார், மன்னித்துக் கொள்ள வேண்டுமாம். உடனே வேலையில் சேரச் சொல்லியிருக்கிறார்கள். என்ன மாயம்! என்ன மாயம்!'' என்று சந்தோஷத்தில் கூச்சலிட,

''மாயமும் இல்லை மண்ணாங்கட்டியும் இல்லை. கடவுளின் மேல் நம்பிக்கையுடன் இருந்தால் திரும்பவும் நல்லது நடக்கும்னு நான் சொன்னேனில்லையா? நடந்தே விட்டது பார்த்தீங்களா? அதேபோல ஸ்வாதியும் நம்மிடம் வந்து சேர்ந்திடுவாள்!'' என்று முடிந்தாள் மங்களம்.

பெண் ஓடிப் போனதால் சமுதாயத்தில் கிடைத்த தண்டனையாக வேலையிலிருந்து தான் நீக்கப்பட்டிருப்பதாக எண்ணி உள்ளுக்குள் தொய்ந்து தேற்ற முடியாமல் உடைந்து கிடந்த அந்தக் கம்பீரமான தகப்பனார் மீண்டும் வேலையில் வந்து சேருமாறு அழைப்பு வந்தவுடனே நிமிர்ந்தார். அடுத்து வந்த நாட்களில் வீட்டிலும் கொஞ்சம் நிம்மதி பரவலாயிற்று.

இந்த வேகமான அவசர உலகத்தில், பெண்ணின் அவசரத்தையும் வீட்டை விட்டு ஓடியதையும் கூட ஓரளவு மறக்க, மன்னிக்க முடிந்தது.



சுமித்ராவிற்கு அப்பா மீண்டும் வேலையில் சேரவேண்டி அழைப்பு வந்தவுடன், ரவீஷ்க்கு நன்றி சொல்லவேண்டும் என்று உள்ளுக்குள் வேகம் வந்தது. மீண்டும் அவனுடைய இடையூறினால்தான் தன் தகப்பனாருக்கு வேலை கிடைத்தது என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் உள்ளே மற்றொரு மனது, 'அவன்தானே அப்பாவை வேலையிலிருந்து தூக்க வைத்தான். அது தவறு என்று அவன் தன் தவறைத் திருத்திக் கொண்டதற்கு நாம் ஏன் நன்றி சொல்லவேண்டும்?' என்று இடித்துக் கூறியது.

## 11

சுமித்ராவின் தோழிகள் பூகம்பம் பாதிக்கப்பட்ட இடத்திற்குத் தங்களால் ஆன உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டு ஐந்து பேர் கொண்ட குழுவாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்ல முடிவெடுத்தனர்.

சுமித்ராவும் வீட்டில் மங்களத்தின் உதவியோடு விடியற்காலை மூன்று மணிக்கே எழும்பி, மூன்று பெரிய டப்பா முழுவதும் சப்பாத்தி, சப்ஜி செய்து எடுத்துக் கொண்டு, தோழிகளோடு டாட்டா சுமோவில் சென்றாள். துணிமணிகள், மருந்துப் பொருட்கள், தண்ணீர், சாப்பாடு என்று வண்டி முழுவதும் சாமான்களால் நிரம்பி வழிந்தது.

போகும் சாலையும் அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. ரோடுகள் விரிசலும் குண்டும் குழியுமாக இருந்ததால் வண்டி குதித்துக் குதித்துச் சென்றது.



பாதிக்கப்பட்ட இடத்தை நெருங்க நெருங்க, சுற்றுப் புறத்தைப் பார்க்கப் பார்க்கப் பெண்களுக்கு நெஞ்சு பிசைந்தது.

இயற்கையின் சீற்றம் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அளவு பாதிப்பை அப்பகுதியில் ஏற்படுத்தியிருப்பதைப் பார்க்க நெஞ்சு பதறியது. வந்திருந்த ஐந்து பெண்களும் தைரியசாலியான, மனோதைரியம் உள்ள பெண்களாதலால், தங்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்ளாமல் முழுமூச்சாக உதவிக் களத்தில் இறங்கினர்.

வேண்டியவர்களுக்குச் சாப்பாடு, துணிமணிகள் கொடுத்தார்கள். வந்திருந்த ஐந்து பெண்களில் ஒரு பெண் டாக்டர் என்பதால் மருத்துவ உதவியும் தொடர்ந்தது.

சிலருக்குத் தங்கள் கம்பெனியின் விலாசத்தை எழுதிக் கொடுத்தார்கள். உதவிக் கரத்தை நீட்டியிருப்பதைச் சுமித்ரா கண்கள் விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மனித நேயம் இறந்து போகவில்லை. சட்டென்று அவள் கண்கள் ஒரு இடத்தில் நிலைத்தன.

ரவீஷ்.

அவனேதானா என்று ஒரு முறைக்கு இரு முறை கண் இமைத்துப் பார்த்தாள்.

அன்று பார்த்த தோற்றத்திற்கும் இப்போது பார்க்கும் ரவீஷ்க்கும் நிறைய வித்தியாசம் தெரிந்தது.

ஜீன்ஸூம், டீ-சர்ட்டுமாக நின்று பொட்டலம், பொட்டலமாக எதையோ விநியோகம் செய்து கொண்டிருந்தான்.

அவனுடைய கம்பெனி பேட்ஜ் குத்திக் கொண்டு 'வாலண்டியர்ஸ்' நிறையப் பேர் சுற்றி நின்று இடிபாடுகளில் சிக்கியவர்களை விடுவிக்கும் பணியில் இறங்கியிருந்தார்கள்.

உறவு என்று சொல்லிக் கொள்ள ஒரு உயிரும் இல்லாமல், இன்னும் நடந்தது என்ன என்று புரியாமல் அதிர்ச்சியிலிருந்து

மீளாமல் மலங்க மலங்க விழித்தபடி நின்ற சிறுமியைக் கண்டதும், அவள் கண்கள் கலங்குவதைச் சுமித்ரா கண்டாள்.

தன்னை ஒருமுறை சுமித்ரா சிலுப்பிக் கொண்டாள். கண்கள் சதா அவள் புறமே திரும்புவதைக் கண்டு சிறு அவமானத்துடன் முகம் சிவந்து போனாள்.

வந்த நோக்கமென்ன? இவள் செய்யும் காரியமும்தான் என்ன? சரிதானா?

தனியாக அமர்ந்து இடிந்த ஒரு வீட்டின் சுவரில் சாய்ந்து விம்மிக் கொண்டிருந்த பெண்ணிடம் சுமித்ராவின் கவனம் திரும்பியது. தூசு படிந்து தலை கூட வாராமல், அழுக்கேறிப் போயிருந்த அந்த உருவத்திலும், அவள் அழகான பெண் என்பதை உணர முடிந்தது.

சுமித்ரா மெல்ல நடந்து அந்தப் பெண் அருகில் வந்தாள்.

கையோடு கொண்டு வந்திருந்த சப்பாத்திகளையும் சப்ஜியையும் பேப்பர் தட்டில் வைத்து ஒரு தண்ணீர் பாட்டிலையும் சேர்த்து, அவள் முன் நீட்டினாள்.

"சட்" என்று சுமித்ரா நீட்டிய உணவைத் தட்டி விட்டுவிட்டு அந்தப் பெண் மேலும் சத்தம் கூட்டி அழத் தொடங்கினாள்.

இழப்புகள்.

"ஆறுதல் சொல்லித் தேற்றக்கூட ஆளில்லாமல் தனிமையில் துக்கத்தைப் புதைத்துக் கொண்ட அந்தப் பொண்ணுக்கு, பக்கத்தில் வந்தமர்ந்த சுமித்ராவைக் கண்டதும் துக்கத்தை அடக்க முடியவில்லை.

"இனி நான் எதற்காக வாழணும்? யாருக்காக வாழணும்? இந்த உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் நான் சாப்பிடணும்னா, அந்தச் சாப்பாடு எனக்கு வேண்டாம். அம்மா.. அப்பா, அண்ணன், தம்பி... எல்லோருடன் சேர்ந்து, ஒரு வாரம் முன்பு தாலி கட்டிய கணவனையும் சேர்த்துப் பறிகொடுத்துவிட்டு நான் மட்டும் தனிமரமாக நிற்க என்ன



பாவம் செய்தேன். நான் என்ன பாவம் செய்தேன்!" என்று அந்தப் பெண் மூச்சுவிடாமல் விம்மல்களுக்கிடையே வார்த்தைகளை வெடிக்க, அந்தப் பெண்ணின் சோகத்தில் சுமித்ரா மூச்சுகூடச் சீராக எடுக்க முடியாமல் தவித்துப் போனாள். அவளை மார்போடு அணைத்து ஆறுதல் படுத்த முனைந்தாள்.

ஆற்றுவாரும், தேற்றுவாரும் இல்லாமல் அழுத பெண்ணுக்கு, ஏன் என்று கேட்க ஆள் கிடைத்ததில், அழுகையும், நினைவுகளும் அதிகரித்தன.

"அதோ அந்தக் கட்டிடம்தான்!" என்று ஒரு பெரும் கற்குவியலைச் சுட்டிக் காட்டியது அந்தப் பெண்.

"நான் கோயிலுக்குப் போய்த் திரும்பும் முன்பு என் கண் முன்னே அந்தக் கட்டடம் அப்படியே மண்ணுக்குள் புதைந்து போச்சு. கடவுளை நம்பியதற்கு என்னை அனாதையாக்கி விட்டாரே!" என்று அந்தப் பெண் தலையில் அடித்துக் கொண்டு அழ,

"கடவுளை நம்பினால் கைவிடமாட்டார். நிச்சயமாக ஏதாவது நல்லது செய்வார். நம்பிக்கையோடு இருங்கள்!" என்று சுமித்ரா சொல்லி முடிக்கவும்,

அந்தக் கட்டடத்தின் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களிடம் ஏதோ சலசலப்புக் கேட்டது. பின் ஒரே கூட்டம் கூடியது.

"மூச்சு இருக்கு!"

"உயிர் இருக்கு!" என்று ஒரே சந்தோஷ ஆர்ப்பரிப்பு.

"நான்கு நாட்களுக்குப் பிறகும் கூட உயிரோடு ஒருவரை வெளியே எடுத்தாச்சு!" என்ற சத்தம் விண்ணை முட்டியது.

கண்கள் விரிய நிமிர்ந்து பார்த்த சுமித்ராவிற்கு சந்தோஷம் பொங்கியது. நான்கு நாட்கள் ஆகிவிட்டதே, இனி உயிரோடு யார் கிடைக்கப் போகிறார்கள் என்று கொஞ்சம் மெதுவாக மீட்புப் பணிகள் நடந்து கொண்டிருந்த வேளையில், ரவீஷ்



அவனுடைய ஆட்களையும் கூட்டிக் கொண்டு, அந்தப் பகுதியில் மீட்புப் பணியைத் துரிதப்படுத்திய வேளையில், அந்த ஐந்து மணி நேரத்திற்குள் ஒருவரை உயிரோடு கொண்டு வர முடிந்ததில் அந்த இடத்தில் எதையோ சாதித்துவிட்டது போன்ற ஒரு சந்தோஷம் மூண்டது.

ரவீஷ் ஆட்களுடன் வந்திருந்த முதலுதவிகள் உடனடியாகக் கொடுக்கப்பட்டு, ஆக்ஸிஜன் ஏற்றப்பட்டு, சட்டென்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்காக அந்த மனிதன் ஜீப்பில் ஏற்றப்பட,

"ஏன் வினயா, வினயா, ஓடி வா... ஓடி வா... உன் புருஷன்டி... என் புருஷன்டி.. உயிரோடு இருக்கான்... ஓடி வா.. ஓடி வா!" என்று ஒரு குரல் சுமித்ரா இருந்த பக்கமாகப் பலத்த சப்தமிட்டபடி ஓடிவர -

சுமித்ராவின் அருகே அமர்ந்திருந்த அந்தப் பெண்ணால் நம்பவே முடியவில்லை. சுவாசம் துரிதமாகியது. கை, கால்கள் உதறத் தொடங்க, பின் எப்படியோ சமாளித்தக் கொண்டு, சுமித்ராவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தது.

"நீதான்.. உன் வாக்குதான்..." என்று திக்கியபடி பேசிய அந்தப் பெண் வினயா, காற்றைக் கிழித்தக் கொண்டு தலை தெறிக்க கூட்டத்தை நோக்கி ஓடினாள்.

ரவீஷ் உடன் வந்திருந்தவர்கள் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் தங்கி மீட்புப் பணியில் ஈடுபட ஆயத்தமான நிலையில் வந்திருந்தபடியால் ரவீஷ் அன்றே நகரத்திற்குக் கிளம்பத் தயாரானான்.

சுமித்ரா குரூப்பும் கிளம்பத் தயாராக டாடா சுமோ தகராறு செய்ய ஆரம்பித்தது. வண்டி டிரைவர் வண்டியைக் குடைந்து பார்த்துவிட்டு, பெரிய ரிப்பேர், நாளைதான் சரியாகும் என்று சொல்ல, ஐவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.



"ஏய்.. அங்க பாரு. அந்த வண்டி சிட்டிக்குதான் கிளம்புகிறது என்று நினைக்கிறேன். நான் போய் 'லிப்ட்' கேட்கிறேன்" என்று காமினி வேகமாக நகர, சுமித்ராவின் வேகம் தடைப்பட்டது.

ரவீஷ்.

அவனல்லவா கிளம்புகிறான். இருந்திருந்து அவனிடமா லிப்ட் கேட்கச் செல்கிறார்கள். சுமித்ராவின் நெஞ்சு வேகவேகமாகத் தடதடத்தது.

சலனமற்ற அவன் விழிகளைச் சந்திக்கையில் ஏதோ தப்பு செய்த உணர்வு சுமித்ராவிற்கு ஏற்பட்டது.

அவன் வண்டியிலேயே நகரத்திற்குப் பயணமானார்கள்.

அவ்வளவு கோரமாகப் பாதிக்கப்பட்ட இடத்தையும் மக்களின் ஈடுகட்ட முடியாத பேரிழப்பையும் பார்த்துவிட்டு வந்த ஒருவருக்கும் அதிகம் பேசப் பிடிக்கவில்லை. பயணம் மவுனமாகவே முடிந்தது.

ஐவரும் ஒரு சேர ஒரே இடத்தில் இறங்கிக் கொண்டனர்.

சுமித்ரா இறங்குகையில், அவன், "நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இந்த மாதிரி இடங்களுக்கு உன் தங்கை என் தம்பியை அழைத்து வந்திருக்கமாட்டாள் என்று நம்பலாம் இல்லையா?" என்று சுமித்ராவிற்குப் புரியும்படியாகத் தமிழில் முணுமுணுத்தபடி கண்கள் இடுங்கக் கேட்க, அந்தக் கண்களில் தெரிந்த கலவரத்தைக் கண்டு சுமித்ரா மலங்க மலங்க விழித்தாள்.

## 12

நாட்கள் செல்லச் செல்ல ரவீஷ் தன் வீட்டைக் குண்டர்கள் வைத்துப் பயமுறுத்தியது எல்லாம் புகை கொண்டு மறைத்தது போலச் சுமித்ராவிற்கு மறைந்து போயிற்று.

'அன்பான நண்பனை ஆபத்திலறி' என்பது போல், ரவீஷ் ஒரு ஆபத்தில் காட்டிய இரக்கத்தையும் அன்பையும் சுமித்ராவால் உயிர் உள்ளவரை மறக்க மடியும் என்று தோன்றவில்லை. தான், தன் நலம் என்றே நினைக்காத நல்ல மனிதனுக்கு ஏதேனும் நல்லது செய்ய வேண்டும் என்று மனசு கிடந்து தவித்தது.

அந்த நல்லது எது என்றும் அவளுக்குப் புரிந்தது.

அவனுடைய தம்பி.

சுகவீனமான தம்பி சஞ்சயைப் பத்திரமாக அவனிடம், தன் தங்கையுடன் பாதுகாப்பாக ஒப்படைப்பதுதான் அவள் உயிர் காத்தவனுக்குச் செய்யும் பிரதியுபகாரம் என்று எண்ணத் தொடங்கினாள்.

இதய நோய்க்காரனை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போய்க் கல்யாணம் செய்து கொள்ளும் அளவுக்கு ஸ்வாதிக்கு என்ன வந்தது? அல்லது அவள் சொல்லுவது போல் பணத்திற்காகப் பெரிய இடத்துப் பிள்ளையை வலைவீசிப் பிடித்துவிட்டாளா?

ஆனாலும் பணத்திற்காக வாழ்க்கையையே 'ரிஸ்க்' செய்யும் பெண்ணல்லவே அவள்.

ஒன்றும் புரியாமல் குழம்பியது சுமித்ராவிற்கு. ஆனாலும் தன் தங்கையால் ரவீஷின் தம்பிக்கு ஒன்றும் ஆகிவிடக்கூடாது என்று மனசு உருப்போட்டது.

சின்னத்துரை, 'எனக்கு இனி ஒரே மகன்தான். ஸ்வாதி இனி வீட்டுப் படியைக் கூட மிதிக்கக்கூடாது!' என்று இடையிடையே கோபத்தில் சத்தமிடுவதோடு சரி.

மங்களத்திற்கோ விதிப்படி ஏதோ நடந்துவிட்டது. ஆனால் பெண் எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும் என்று நெஞ்சு வாழ்த்தியது.

சுமித்ராதான் ஸ்வாதியைக் கண்டுபிடிக்கும் களத்தில் இறங்கினாள்.

முதலில் தங்கை எங்கு சென்றிருக்கிறாள் என்று அறிய வேண்டும். ஓட்டை வாயான தங்கை காதல் விஷயத்தைப் பரம்



இரகசியமாக வைத்திருந்தது பெரும் ஆச்சர்யம்தான். முதல் படியாக ஏற்கெனவே அது விஷயமாக விசாரித்து இருந்த ஸ்வாதியின் தோழிகளிடம் மீண்டும் விசாரணையைத் தொடங்கினாள். இரண்டு வார காலமாகவே அவளைப் பார்க்கவே இல்லை. சொன்னதையே திரும்பச் சொன்னார்கள்.

அடுத்து அவளுடைய டைரியில் அலோக் சிங் என்ற பெயரைப் பார்த்ததும் சுமித்ராவிற்குப் பெரும் உற்சாகம் வந்தது.

அட, இவனை எப்படி மறந்தோம்.

சிறு வயதிலிருந்தே ஸ்வாதியின் நல்ல நண்பன். கண்டிப்பாக இவனறியாத செய்தி இருக்க முடியாது. இனி இருவரையும் கண்டு பிடித்துவிடலாம் என்ற எண்ணம் மேலோங்க, வேக வேகமாக எண்களைச் சுழற்றினாள். ஆனால் பதில் கிடைத்தபாடில்லை. போன் அவுட் ஆப் ஆர்டர் போலும்.

இனி போனை நம்பிப் பிரயோஜனமில்லை என்று உடை மாற்றி அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கைனடிக் ஹோண்டாவில் பறந்தாள் சுமித்ரா.

"தோள்வலி இப்போதுதான் குறைந்திருக்கது. அதற்குள் வண்டியை எடுக்காதே!" என்ற மங்களத்தின் குரல் அவளுக்குக் கேட்கவேயில்லை.

பாதி தூரம் போவதற்குள்ளாகவே வண்டி மக்கர் பண்ண ஆரம்பித்தது. பின் இன்ஜினும் இரும, வண்டி நின்றே விட்டது. கொஞ்சம் வனாந்திரமான இடம், அக்கம் பக்கம் வீடுகளும் இல்லை. வந்த ஒரு சில வாகனங்களும் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தன.

கொஞ்சம் தொலைவில் ஒரு 'பஞ்சாபி டாபா' இருப்பதைக் கண்டு வண்டியை அங்கே மெல்ல உருட்டிக் கொண்டு போனாள். அப்படி உருட்டிக் கொண்டு போகும் போதே ஒரு கார் அவளுடைய அருகில் வந்து நின்றது. ஜன்னலின் கறுப்புக் கண்ணாடியை இறக்கி உள்ளிருந்து எட்டிப் பார்த்தவன் முர்ஷி. அவளுடைய ஆபீஸில் வேலை பார்க்கும் அவளுடைய சீனியர். சரியான ஜொள்ளு கேஸ் என்ற பெரும் பட்டத்தைச் சுமந்திருப்பான்.



"சுமி, என்னாச்சு? நான் எதும் ஹெல்ப் பண்ணட்டுமா?" என்று இந்தியில் கேட்டபடி காரின் கதவைத் திறந்து கொண்டு அவன் இறங்க,

சுமித்ராவிற்குக் கடுப்பாயிருந்தது. இவனிடம் பேசி அவனின் ஜொள்ளைச் சமாளிக்கும் மனநிலையில் அவள் இல்லை.

ஆனால் அவனோ அவள் வண்டியை ஏதோ குடைந்து பார்த்துவிட்டு, பின் அது ஓடவில்லை என்றதும், அவள் சொல்லைச் சொல்லைக் கேட்காமல் அவளிடம் இருந்து வண்டியைப் பிடுங்கி உருட்டிக் கொண்டு போனான்.

"தேவலோகத்தில் இருந்து ரம்பைதான் வழி தெரியாமல் இங்கு இறங்கிவிட்டாளோ என்று நினைத்தேன் சுமி. ஆனால் ரம்பையிடம் ஏது கைனடிக் ஹோண்டா? இது நம்ம ஊர் கன்னிகை சுமித்ராதான் என்று உடனே புரிந்து கொண்டேன்!" என்று சொல்லி ஏதோ பெரிய 'விட்' அடித்துவிட்டது போல் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

"ஜொள்ளு ஜொள்ளு!" என்று எரிச்சலில் முணுமுணுத்தவள் வேறு பேச்சுப் பேசவில்லை.

டாபாகாரர்களிடம் பேசி ஒரு ஓரமாக வண்டியை நிப்பாட்டியவனும் அவனே. பின் அவள் எவ்வளவோ சொல்லியும் அவள் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சாத குறையாக இழுத்துக் கொண்டு காரின் மறுபுறத்திற்கு அழைத்துச் சென்று உள்ளே தள்ளிக் காரை எடுத்தான்.

அதே சமயம், அந்தக் காரை ஒட்டினாற்போல கறும்பச்சை 'அக்சண்ட்' கார் ஒன்று கொஞ்சம் தயங்கி நின்று பின் 'சர்' என்று வேகம் எடுத்துச் சென்றது. அதை ஓட்டிச் சென்றவனின் கண்கள் சுமித்ராவை வெறுப்புடன் பார்த்தன.

முர்ஷி அவளை வீட்டிற்கு கொண்டு விடும்வரை அவன் புளைழயே உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான். அழகான பெண் அருகில் அமர்ந்து போகும் ஆனந்தமான அனுபவம் அவனுக்கு.

போன காரியமும் நடக்காமல், அவனுடன் செல்வதைத் தவிர வேறு வழியும் இல்லாமல் போனதில் வந்த எரிச்சலில்



சுமித்ரா வாயே திறக்கவில்லை. முர்ஷிக்கும் அது பெரிய விஷயமாகவே படவில்லை. வண்டி ரிப்பேரைச் சரிசெய்து நாளை சாயங்காலம் அவள் வீட்டின் முன் வண்டியை நிப்பாட்டுவது அவன் பொறுப்பு என்று சொல்லி சாவியைக் கூட அவளிடம் கொடுக்கவில்லை.

வீடு வந்து சேர்ந்தவுடன் ஃபார்மாலிட்டிக்கு ஒரு தேங்க்ஸை முணுமுணுத்துவிட்டு இறங்கிவிட்டாள் சுமித்ரா.

## 13

மறுநாள் சுமித்ராவிற்கு கூரியரில் செய்தி வந்திருந்தது. கவரைக் கிழித்துப் படித்தவளின் கண்கள் விரிந்தன.

"கண்ணகி, மாதவியாக மாறியதன் காரணமென்னவோ? அல்லது எப்போதுமே மாதவிதானோ?" என்று மொட்டையாக முடித்திருந்தது.

படித்தவுடன் சுமித்ராவிற்கு யார் அனுப்பியிருப்பார்கள் என்பதற்குப் பிரமாதமான ஊகம் தேவைப்படவில்லை.

ஆனால் அதைப் படித்ததிலிருந்து அவள் மனசு அவளிடத்தில் இல்லை.

அவளைப் பார்த்தானா? அந்த அளவுக்கு அவளின் ஞாபகத்தில் இருக்கிறேனா என்று ஒரு நொடி பூரித்துப் போனாள். பின் சட்டென்று உடைந்தாள். முர்ஷியுடன் தன்னைப் பார்த்திருக்கிறான். மீண்டும் தவறான கணிப்பு.

குத்திக் காட்டுவதற்காகவே, ஞாபகத்தில் வைத்து எழுதிய வார்த்தைகள். மொத்தத்தில் அவனுக்கு அவள் மேல் நல்ல அபிப்ராயம் ஏற்படப் போவதே இல்லை என்ற எண்ணம் அவளைக் காயப்படுத்தியது.

கண்ணகியை விட, கணிகையர் குடும்பத்தில் பிறந்து, கோவலன் ஒருவனே கணவன் என்று இருந்த மாதவியே கற்பில் சிறந்தவள் என்று பதில் எழுதிவிடலாமா என்று அவளுக்குக் கை துருதுருத்தது.

எதையோ அதிகமாக அவனிடமிருந்து எதிர்பார்க்கிறாய், மறந்துவிடு என்று மனசு பூடகமாய்ச் சொல்லிக் கொடுத்ததைச் சுமித்ரா புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

இடையில் ஒரு நாள் அலோக் சிங்கின் வீட்டுக்குப் போய்விட்டும் வந்தாள். அவன் அவனுடைய கிராமத்திற்குப் போயிருப்பதாகவும், நாளை வந்துவிடுவான் என்றும் அவன் அம்மா சொல்லியிருந்தார். அதற்குள் டெலிபோனும் வேலை செய்யவே, இன்று அலோக் சிங் வந்திருப்பானே என்று மீண்டும் அவனை டெலிபோனில் தொடர்பு கொண்டாள் சுமித்ரா. எடுத்ததும் அவன்தான்.

"உங்கிட்டே சொல்லாமா வேண்டாமான்னுதான் யோசிச்சுகிட்டு இருந்தேன் சுமி!" என்றான் தயக்கத்தோடு.

"இப்போ எங்கிருக்கான்னு உனக்கு தெரியும்தானே?" ஆவலாகக் கண்களில் பளபளப்புடன் இவள் கேட்க,

"ம்ம்... தெரியும். போனில் வேண்டாம். நாளைக்குக் காலையில் நீங்கள் ஆபீஸ் போவீர்கள் இல்லையா? அப்போ சாயங்காலம் ஐந்து மணிக்குத் 'துலேரா ப்ளாசா' பக்கத்திலிருக்கும் அந்த ஐஸ்கிரீம் பார்லருக்கு வாருங்கள். எல்லாம் சொல்றேன். ஓ.கே." என்று வைத்துவிட்டான் அவன்.

அன்று இரவு சுமித்ராவிற்குத் தூக்கமே வரவில்லை. ஆபீஸிலும் வேலை ஓடவில்லை. எப்பொழுது மணி ஐந்தாகும் என்று காத்திருக்கத் தொடங்கினாள்.

ஆனால் ஐஸ்கிரீம் பார்லரில் வைத்து அந்த அலோக் சிங் சொன்ன ஸ்வாதி - சஞ்சயின் காதல் கதை சுமித்ராவை மிகவும் ஆச்சர்யப்பட வைத்தது. அதிசயிக்கச் செய்தது.



## 14

அந்தப் பெரிய ஷாப்பிங் ஆர்கேடில் உள்ள ஒரு கடையில் நவீனமான ஹைஹீல்ஸ் ஷூவை வாங்கி பில் பே பண்ணியவுடன் பர்ஸை ஹாண்ட்பேக்குக்குள் செருகியபடி, இடுப்பு லேசாகத் தெரியும்படி ஜீன்ஸுடன் போட்டிருந்த குட்டை மேல் சட்டையைச் சரி செய்தபடி ஸ்வாதி ஒய்யாரமாக நடக்க, பின்னேயிருந்து,

"ஹலோ..." என்று குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள் ஸ்வாதி. குனிந்து கீழே கிடந்த அவளின் பர்ஸை எடுத்துக் கன்னத்தில் அழகிய குழி விழச் சிரித்துக் கொண்டு அவளின் முன்னே நீட்டி, "உங்களோடது தானே!" என்று ஆங்கிலத்தில் பேசியவனைக் கண்டதும் ஸ்வாதிக்கு நெஞ்சு படபடப்பாகியது.

தன்னிச்சையாக ஒரு கை கைப்பையினுள் சோதனையிட மற்றொரு கை அவனிடம் இருந்து பர்ஸை வாங்க, வாய் 'தாங்க்ஸ்' என்று மிழற்றியது.

"உடம்பு தெரியக்கூடாதுன்னு சட்டையை ஜாக்கிரதையாக நீளமாகப் போட்டவள், பர்ஸையும் ஜாக்கிரதையாக வைத்திருக்கலாமில்லையா?" என்று குறும்புடன் சொல்ல,

உடம்பையும் நீ ஜாக்கிரதையாக வைத்திருக்கவில்லை. பர்ஸையும் நீ ஜாக்கிரதையாக வைக்கவில்லை என்று சொல்லாமல் சொல்லிய அவன் பார்வையில் ஸ்வாதிக்குத் தன் நவநாகரீக உடையினால் இதுநாள் வரை தோன்றாத ஒரு விதக் கூச்சமும், வெட்கமும் தோன்ற, மேல் சட்டையை நன்றாகக் கீழே பிடித்து இழுத்தபடி, "ஸாரி" என்றாள்.





இந்த மாதிரி உடம்பு தெரிகிற மாதிரி உடை அணிந்ததற்காகவா அல்லது பர்ஸைத் தவறுதலாக வைத்ததற்காகவா இந்த 'ஸாரி' சொல்கிறாள் என்று புரியாத குழப்பமான நிலையில் இருந்தாள் ஸ்வாதி.

"உங்களை நான் ஒரு சில அட்வர்டைஸ்மெண்டில் பார்த்திருக்கிறேன். மாடலிங் பண்ணுகிறீர்களா?" மீண்டும் குரலில் மென்மையுடன் அவன் பேச்சைத் தொடங்க,

"ஆமாம். நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள்?" என்று இவள் கேட்க, நடந்து கொண்டே பேசிய பேச்சுக்கள் வளர்ந்து கடைசியில் ஐஸ்கிரீம் பார்லரில் வந்து முட்டியது.

"ஐஸ்கிரீம் நான் வாங்கித் தந்தால் சாப்பிடுவீர்களா?" என்று லேசாக முகம் சிவக்க, தலையைக் கோதியபடி அவன் கேட்க,

"ஓ..." என்றபடி இவளும் சொல்ல, எதிரும் புதிருமாக நாற்காலியில் அமர்ந்து அவளுக்குப் பிடித்தமான ருசியையும் கேட்டு ஒரு ஐஸ்கிரீமுக்கு ஆர்டர் கொடுத்தான்.

"ஏன் உங்களுக்கு ஐஸ்கிரீம் ஆர்டர் பண்ணவில்லை?" என்று ஸ்வாதி கேட்க, அவனோ அவளையே வைத்த விழி மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஹலோ..." என்று ஸ்வாதி சொடக்கு விட,

"உன் கண் பேசுகிறது!" என்று அதுவரை ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்த சஞ்சய், தமிழில் மெல்ல முனக,

"ஆ... நீங்க தமிழா?" என்று ஸ்வாதியும் வாயைப் பிளக்க,

"ஓ... நீயும் தமிழா?" என்று அவனும் ஆச்சர்யப்பட, அதுவே அவர்களிடம் நெருக்கம் வளர முதல் காரணமாயிற்று.

அதற்குள் ஐஸ்கிரீமும் வர, மீண்டும் ஸ்வாதி அவனிடம், "உங்களுக்கு ஐஸ்கிரீம் பிடிக்காதா?" என்று கேட்டபடி ஐஸ்கிரீமை ஸ்பூனில் அளைந்தாள்.



"நான் டயட்லே இருக்கேன். ஐஸ்கிரீம், எண்ணெய், உப்பு ஒன்றும் சாப்பிடக் கூடாது!" என்றான்.

ஸ்வாதிக்கு உள்ளே இனம் புரியாத கவலை ஒன்று முளைக்க, அதன் சாயலுடனே "உங்களுக்கு என்ன உடம்புக்கு, பார்த்தால் அப்படி டயட் எடுக்க வேண்டிய தேவையிருப்பது போல் இல்லையே!" என்றாள்.

மெல்லக் கண்களைச் சுழல விட்டவன், பின் நீண்டதொரு மூச்சு இழுத்து விட்டு, "உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவாக இருக்கிறதாம். எதைச் சாப்பிட்டாலும் ஒத்துக் கொள்ளாமல், இருமல் அது இது என்று ஒரே அலர்ஜி மாத்திரைகள். டயட், ரெஸ்ட் என்று இருந்தால் நான் மீண்டும் குணமடைந்து விடுவேனாம்!" என்றான். பிறகு தொடர்ந்து, "அதற்கென்று அண்ணன் சொல்வது போல் பெட்லேயே படுத்தும் ரெஸ்ட் எடுக்க முடியவில்லை. அதைச் செய்யாதே, இதைச் சாப்பிடாதே, இப்படி குனியாதே, அப்படி ஓடாதே என்று ஏகக் கெடுபிடி. எனக்குச் சின்னதாய் ஒரு எறும்பு கடித்தாலும் அண்ணனுக்குத் தாங்காது!" என்று சஞ்சய் சொல்கையில் பெருமையுடன் கொஞ்சம் சலிப்பும் இருந்தது. அப்பாவும் அம்மாவும் விமானத்தில் ஐந்து வருடத்திற்கு முன் இறந்ததிலிருந்து எல்லாமே அண்ணன்தான் அவனுக்கு.

"உங்கள் நல்லதுக்கு என்றுதானே சொல்கிறார்கள்..." என்றவள், "ஆமாம், ரெஸ்ட் எடுக்க வேண்டியவருக்கு இந்த ஷாப்பிங் ஆர்கேடில் என்ன வேலை?" என்றாள் யோசனையுடன்.

"அண்ணன் ஊரில் இல்லை. அதனால் விடு ஜூட்தான். படுத்துத் தூங்குவது மாதிரி தலையணையை செட்டப் செய்து விட்டு வந்துட்டேன்!" என்று அவன் கண்ணடித்துச் சொல்ல, ஸ்வாதிக்கும் சிரிப்பு வந்தது.

இப்படி அன்று ஆரம்பித்த பேச்சு, டெலிபோனில் தொடர்ந்தது. அதன் பின் காதலாக அரும்பியது எப்படி எப்போது என்ற

கேள்விக்கு இருவரிடமும் விடை கிடையாது. இரண்டு மூன்று முறை திருட்டுத் தனமாகச் சந்தித்து, அவர்கள் கடவுளால் நிச்சயிக்கப்பட்ட ஜோடி என்று புரிந்து தாங்கள் இணைந்து வாழ்வதற்கு நிறையத் தடைகள் இருப்பதையும் புரிந்து, ஒரு நாள் நண்பர்களின் உதவியுடன் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொண்டார்கள்.

## 15

"இது நியாயம் கிடையாதே அலோக் சிங். உண்மையான காதல் தோற்கவே தோற்காதே. இருவரும் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடித்து, பெரியவர்களின் சம்மதத்தைப் பெற்றிருக்கலாமே. தப்பு ரொம்ப தப்புதான்!" என்று சுமித்ரா சொல்ல,

"இல்லை சுமித்ரா. அந்த வில்லன்... அதான் சஞ்சயின் அண்ணன் தம்பியைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொண்டிருப்பவன். வெகு சீக்கிரமாய் இவர்களின் காதல் நாடகத்தைக் கண்டு பிடித்து விட்டான். ஸ்வாதி வேறு மாடலிங் செய்வதால் ஒரு குடும்பப் பெண்ணாகவே அவளை அவன் மதிக்கவில்லை. ஒருநாள் கூப்பிட்டுக் கண்டபடி திட்டி, மிரட்டி அனுப்பியிருக்கிறான். பிறகு சஞ்சயும் பிடிவாதமாக ஸ்வாதி வேண்டும் என்று அடம் பிடிக்க, மீண்டும் ஸ்வாதியைக் கூப்பிட்டனுப்பி, காக வேணும் என்றால் எவ்வளவு வேண்டுமானாலும் தந்து விடுகிறேன். என் தம்பியை விட்டுவிடு என்று மிரட்டினானாம்.

இவளும் கறுசுறுவென்று வந்த கோபத்தில் உரிமையுள்ளவளாய், சொத்து முழுவதும் வாங்கிக் கொண்டு போகிறேன்



என்று மிடுக்காகச் சொல்லியிருக்கிறாள். பிறகும் தம்பிக்கு இருதய நோய், உருப்படியாக வாழ்ந்தால் நூறு வருடம் வாழ்வான். உன்னைப் போல் தடம் கெட்டவளுடன் வாழ்ந்தால் பத்தே நாள்தான் என்றெல்லாம் அவளிடம் சொல்லி அழ வைத்திருக்கிறான்.

பிறகும் காலம் தாழ்த்தினால் எந்த வகையிலாவது இருவரையும் பிரித்து விடுவான் என்றுதான் இந்த அவசரக் கல்யாணம்."

"இவ்வளவு விஷயம் தெரிந்திருக்கிறதே அலோக் உனக்கு. அப்ப கண்டிப்பாக, ஸ்வாதியும் சஞ்சயும் இருக்கும் இடம் தெரியும்தானே. சீக்கிரம் சொல்," என்று சுமித்ரா அவசரப்பட, அவன் சொன்ன இடத்தின் பெயரைக் கேட்டதும் சுமித்ராவிற்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

"ஐய்...யோ... மலைப் பகுதியில் கொண்டு செல்வது அந்த வியாதிக்கு எமன் என்று சொன்னானே. என் தங்கை அறியாத்தனத்தில் கொலையும் செய்து வாழ்க்கையையும் இழந்து நிற்கப் போகிறாளா?" - இந்த நினைவுகளின் தாக்கத்தில் அழகிய சுமித்ரா பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். நா உலர்ந்து போயிற்று. கடைசியில் அவன் சொன்னது போலல்லவா நடக்கப் போகிறது.

சுமித்ராவின் நிலை கண்டு அலோக் சிங்கும் பரபரத்தான்.

"சுமித்ரா, மலைப்பகுதி நிஜமாகவே சஞ்சய் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாது என்றாலும் நம்மால் தடுத்து நிறுத்த முடியும். இன்று எட்டு மணி பஸ்ஸில்தான் அந்த மலை வாசஸ்தலமான 'மவுண்ட் அபு'வுக்குக் கிளம்புகிறார்கள். வா.. வா.. உடனே போய் போன் போட்டுப் பேசலாம். நம்பர் என்னிடம் உள்ளது. என்ன அப்படிப் பார்க்கிறாய், ராஜஸ்தானில் உள்ள மிட்டல்லோட கெஸ்ட் ஹவுஸில்தான் கடந்த பத்து நாட்களாக இருக்கிறார்கள். இன்று வரை சஞ்சய்க்கு எந்த வித ஆபத்தும் இல்லை. ஸ்வாதியேதான் சமையல், உணவுக்



கட்டுப்பாட்டுடன், மாத்திரை மருந்தெல்லாம் சரியாக அவனே சாப்பிட்டு விடுவானாம். மற்றப்படி இந்தக் குளிர், ஜலதோஷம், மலைப்பகுதி பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்காது. வா... வா... எதிர்ப்புறத்தில் எஸ்.டி.டி. பூத் பார்த்தேன். நேரத்தை விரயம் செய்யாமல் ஓடிப் போகலாம்," என்று ஓடினான்.

எதிர்ப்புறத்தை கிராஸ் செய்ய ரோட்டைக் கடக்கையில் கூடவே சுமித்ராவும் வருகிறாள் என்ற நினைப்பில் அவன் ஓட, அவள் கூடவே வராமல் "சுமித்ரா சுமித்ரா" என்று ஓங்கி எதிர்ப் புறத்தில் இருந்து குரல் கொடுக்க, தன் சிந்தனை கலைந்து அக்கம் பக்கம் கூடப் பார்க்காமல் அவள் அளைந்த வேகத்தில் இரண்டெட்டு வைக்க, அந்தப் புறத்தில் இருந்து ஸ்டாப் ஸ்டாப் என்று கத்தியபடி சைகையாலும் வராதே என்று அலோக் சிங் தடுக்க, அதற்குள் வேகமாக வந்த கார், அவளை மோதித் தூக்கி எறிந்திருக்க வேண்டிய கார்... பெரும் சத்தத்துடன் டயர் கிறீச்சிட அவள் அருகே தொட்டுக் கொண்டு நின்று விட்டது.

"மைகாட்!" என்று விழி தெறித்து விடும் அளவுக்குக் கண்களை விரித்த அலோக் சிங்கும் நிம்மதிப் பெருமூச் சொன்றை வேகமாக வெளிவிட்டான்.

பக்கத்திலிருந்து இரண்டு பேர், "கண்ணு கின்னு தெரியாதா, பார்த்தா படித்த பொண்ணு மாதிரியிருக்கே!" என்று ஏச, பல்லைக் கடித்துக் கொண்டு அதிர்ந்த நிலையில் நின்றாள் சுமித்ரா.

காரின் சொந்தக்காரனிடம் இருந்தும் இனி பேச்சுக் கேட்க வேண்டியதுதான் என்று மெல்லத் தலை உயர்த்திய சுமித்ரா, காரின் டிரைவிங் சீட்டிலிருந்து கோபாவேசமாக இறங்கிய நெடிய மனிதனைக் கண்டதும் 'ஆ' என்று வாய் பிளந்தாள்.

உயிர் பிழைத்ததினால் வந்த அதிர்ச்சியைக் காட்டிலும் ரவீஷைக் கண்டதினால் ஏற்பட்ட அதிர்ச்சி பல மடங்காக இருந்தது.



"பைத்தியமா பிடித்திருக்கிறது உனக்கு. கொஞ்சம் தப்பியிருந்தாலும்... நானே... என் காரினாலேயே உன்னை அடித்திருப்பேனே. மை காட்! அறிவு இல்லை? கண்கள் இல்லை? புத்தி இல்லை? புல்ஷிட்!" என்று அவளைத் தரதரவென்று இழுத்து ரோட்டோரமாய் நிற்க வைத்துத் திட்டிய திட்டில் சுமித்ராவிற்கு உதட்டோரம் அழுகையில் துடித்தது.

அவள் மீது எந்த அளவுக்கு வெறுப்பிருந்தால் இப்படி நாலு பேர் பார்க்கத் திட்டுவான்? இவனுடைய தம்பிக்கு ஒன்றும் ஆகி விடக் கூடாதே என்ற கவலையில் இவனுக்காக... இவனுக்காக.. என்று மனம் தன் போக்கில் சிந்திக்க, அழகிய சிவந்த கண்கள் அழுகையில் கரைவதற்குத் தயாராக, அதே சமயம் உதவிக்காக மறுபுறத்திலிருந்து அலோக் சிங் வருவதற்கும் சரியாக இருந்தது.

"சுமித்ரா... ஒன்றும் ஆகவில்லையே. தாங்க் காட்!" என்று சொன்னவன், உடனே திரும்பி, "ரொம்ப தாங்க்ஸ் சார். நீங்கள் மட்டும் சமயோஜிதமாக வினாடி நேரம் கூடத் தாமதிக்காமல் பிரேக் போடாவிட்டால், என்ன ஆகியிருந்திருக்கும் என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை!" என்று ரவீஷின் முகம் பார்த்துச் சொல்ல,

அலோக் சிங்கையும் சுமித்ராவையும் மாறி மாறிப் பார்த்த ரவீஷ், "மாதவியேதான் இல்லையா?" என்று கண்கள் இடுங்க வெறுப்புடன் அவளையே பார்த்தபடி மெல்லியதாக அவன் முணுமுணுத்ததில் சுமித்ரா திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள்.

அவன் கண்களில் தோன்றிய வெறுப்பு, அவளுக்குச் சொல்ல முடியாத உணர்வைக் கொடுத்தது.

பற்றியிருந்த அவள் கைகளைச் சட்டென்று உதறித் தள்ளி விட்டு, வெகு வேகமாகக் காரில் ஏறிச் சென்றான் அவன்.

அதன் பின் அலோக் சிங் மீண்டும் மீண்டும் ஸ்வாதியைத் தொடர்பு கொள்ள முயற்சிக்க, லைன் கிடைக்கவேயில்லை.

''எப்படியாவது தொடர்பு கொண்டு சொல்லிவிடுகிறேன் சுமித்ரா, கவலைப்படாதே. சஞ்சய்க்கு ஒரு கஷ்டமும் வர ஸ்வாதி விட மாட்டாள். நீ தைரியமாகப் போ!'' என்று அவன் தைரியம் சொன்னான்.

## 16

வீடு வந்து சேர்ந்தபின் சுமித்ராவிற்கு நிம்மதியே தொலைந்து போயிற்று.

சில நாட்களாக அவளை வதைத்தது வைரம் மின்னிய அந்தக் கண்கள் என்றால், இப்பொழுது வெறுப்புடன் அவளைப் பார்த்த கண்கள் அவளைத் தூங்கவே விடவில்லை.

ஏன் இப்படி அவனின் பார்வைகள் ஒவ்வொன்றும் அவளைக் கஷ்டப்படுத்துகின்றன என்று தனிமையில் அமர்ந்து யோசித்த சுமித்ரா அந்தக் கண்கள் அன்போடும், பாசத்தோடும், காதலோடும் தன்னைப் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தன்னையறியாமல் நினைக்க, அந்த நினைவு தந்த மயக்கத்தில் அழகிய உதடு புன்சிரிப்பில் சின்னதாய் விரிய, சுமித்ரா 'சட்'டென்று எழுந்து உட்கார்ந்தாள். முகத்தில் சின்னச் சின்னதாய் வேர்வைத் துளிகள் வினாடியில் உருப் பெற்றன. முகம் சூடாயிற்று. நெஞ்சு படபடவென்று துடிக்கத் தொடங்கியது. ஏதோ பெரிய தப்பு செய்த உணர்வு அவளைத் தாக்கியது.

காதல்...! இதுவரை அவள் தாக்கியிராத ஓர் உணர்வு.

அதுவும் வரவேற்கப்படாத ஒருவனிடத்தில், பிரதிபலிக்க முடியாத ஒருவனிடத்தில், அவளை இகழும் ஒருவனிடத்தில்!



அடி வயிற்றில் சுரீர் என்று யாரோ அடித்தது போலத் துவண்டு போனாள் சுமித்ரா.

ஏற்கெனவே பணப்பசை உள்ளவனுக்கு வலை போடுகிறாயா என்று அவளை இகழ்ந்தவன் அவன். இப்பொழுது போட்ட வலையில் சிக்கியது நீதான் என்றால் என்ன செய்வான்? வாய் விட்டுச் சிரிக்க மாட்டானா?

இருந்திருந்து என் மனமும் இப்படி அவன்பால் ஈர்க்கப் பட்டது பெரிய தவறுதான்.

முதல் நாள் நில நடுக்கத்தின் போதே அவன் காட்டிய அன்பில் அவள் தடுமாறியது நிஜம். மனிதாபிமானத்தில் ஆபத்து என்று வந்தால் யாரும் செய்யக் கூடிய உதவிதான் என்றாலும்...

''நில நடுக்கத்தில் என் உயிர் காப்பாற்றினாயே. அதனால் என் உயிர் பொருள் ஆவி எல்லாம் உனக்கே சொந்தம். நீ என்னை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்!'' என்று அவனிடம் போய் வீரவசனம் பேசினால் அவனுடைய பதில் என்னவாக இருக்கும் என்று கனவில் மிதந்தாள் சுமித்ரா.

இப்படி எல்லாம் பேசுவாய் என்று தெரிந்திருந்தால் அந்த இடிபாடுகளில் உன்னைத் தள்ளி விட்டு ஓடிப் போயிருப்பான் என்று மற்றொரு மனக் கனவுக்கு வேலி போட்டது.

அவளுடைய காதல் அவனுக்குத் தெரிந்து விட்டால், இன்னும் இளக்காரமாக அல்லவா போய் விடும்.

அவனுக்குத் தெரிந்து விட்டால்? அவள் காதல் அவனுக்குத் தெரிந்து விட்டால்? என்ற பதைபதைப்புதான் சுமித்ராவிற்கு அதிகமாக இருந்தது.

அவனை இனி பார்க்கவே கூடாது. பார்த்தால்தானே தன் மனமும் அதன் இரகசியங்களும் அம்பலமாகும். பார்க்கக்



கூடாது. கூடவே கூடாது என்று மனதினுள் திடமான முடிவும் எடுத்தாள் சுமித்ரா.

ஆனால் எல்லாமே நாம் நினைப்பது போலவா நடக்கிறது.

ஞாயிற்றுக் கிழமையாதலால் அம்மாவும் அப்பாவும் காலையிலேயே நண்பரின் வீட்டில் ஏதோ சடங்கு என்று போய் விட்டார்கள்.

சுமித்ராவிற்கு ஒன்றிலுமே மனம் லயிக்காமல் போனது. ரிப்பேர் செய்து வந்த டி.வி.யில் ஐந்து நிமிடத்தில் எழுபது சேனலையும் மாறி மாறிப் போட்டாள்.

தனது கண்டுபிடிப்பான காதலில் மூழ்கியிருந்தவளுக்கு, தங்கையின் நினைவும் நொடிப் பொழுதும் அகலவில்லை.

அப்பொழுது டெலிபோன் மணி அடிக்க, ஏனோதானோ என்று சலிப்புடன் போனை எடுத்து, ''ஹலோ'' சொன்ன சுமித்ராவிற்கு உடம்பில் புது இரத்தம் 'சர்'ரென்று பாய்ந்தது போல் உயிர் உண்டாயிற்று.

''ரவீஷ்!'' என்று சத்தம் வராமல் வாய் முணுமுணுத்தது.

''சுமித்ரா... உன்னிடம் பேச வேண்டும். என்னுடைய ஃபேக்டரி ஆபீஸ் தெரியுமில்லையா? 'பக்கோடிரா' அருகே. உடனே வா!'' என்றான் அதிகாரமாக.

அவன் குரல் கேட்டதிலிருந்து நெஞ்சப் படபடப்பு அதிக மாயிற்று. அவனைப் பார்க்கப் போவதா...? அவன் அருகாமையில் உளறிக் கொட்டி, கிளறி மூடி, கேலிக்குரிய வளாக அவன் நிற்கத்தான் போகிறாள். நோ... உடனே வார்த்தைகள் அடைத்த தொண்டையைச் சரி செய்தபடி, ''இல்லை, இன்று வருவதற்கு வசதிப் படாது சார். எதுவாயினும் போனில் சொல்லுங்கள்,'' என்று வெகு இனிமையாகப் பதட்டத்தை அடக்கிக் கொண்டு சுமித்ரா பேச, மறுமுனையில் சில நொடிகள் சப்தத்தையே காணும்.



பின், ''ரொம்ப பிஸிதான் இல்லையா? நேற்றுப் பார்த்த அந்த வாலிபனுக்கு ஏற்கெனவே அப்பாயின்மெண்ட் கொடுத்தாகி விட்டதா? அந்த வரிசையில் காத்திருக்கும் நான் எத்தனை யாவது ஆள் சொல்!'' என்று சீறிய குரலில் அவன் பேச, சுமித்ரா ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க முழிக்க, அதற்குள் டெலிபோன் வைக்கப்பட்டு விட்டது.

திக்பிரமை பிடித்தவள் போல் நேரம் போவது தெரியாமல் அமர்ந்திருந்தாள் சுமித்ரா.

அவன் பேச்சின் பொருள் என்ன?

## 17

மத்தியானம் சடங்கு வீட்டிலிருந்து சின்னத்துரையும் மங்களமும் வரும்வரை சுமித்ரா உட்கார்ந்த இடத்திலிருந்து நகரவேயில்லை.

அவர்கள் வீட்டிற்குள் நுழையவும், மீண்டும் டெலிபோன் மணி அடித்தது. போனைக் கையிலெடுத்த சின்னத்துரை அதிர்ந்தார்.

''ஸ்வாதி... எங்கே இருக்கே? இப்படிப் பண்ணிட்டயே?'' என்றவரின் குரலில் கோபம் வெகுவாக இறங்கியிருந்தது.

ஸ்வாதி என்றதும் மங்களமும் சுமித்ராவும் சின்னத் துரையின் அருகே வேகமாகப் போய் நின்றனர்.

''இங்கேதான் பக்கத்தில் 'கரம்சந்த்' ஆஸ்பத்திரியில் இருக்கேன்!'' பேசும் முன் ஸ்வாதிக்குத் தொண்டை விக்கியது.

''ஆஸ்பத்திரியிலா?'' என்று சின்னத்துரை மேலும் அதிர, ''எனக்கு ஒன்றுமில்லைப்பா. ப்ளீஸ்பா என்னை மன்னிச்சிடுங்க. எனக்கு ஒரே பயமா இருக்குப்பா. நான் பண்ணினதெல்லாம் ரொம்பத் தப்புப்பா. எனக்கு நீங்க எல்லோரும் இப்ப வேணும்ப்பா. இங்க சீக்கிரம் வாங்கப்பா. ப்ளீஸ்பா ப்ளீஸ்பா..'' என்று மகள் அழுகையில் விக்கி விக்கிப் பேச, அது நாள் வரையில் எனக்கு ஸ்வாதி என்று ஒரு பெண்ணே இல்லை என்று முணுமுணுத்தது எல்லாம் பெண்ணின் கெஞ்சலில், அழுகையில் அழிந்து போயிற்று.

சின்னத் துரையின் கண்களில் கண்ணீர் மாலையானது.

''நீ எதற்கும் கவலைப்படாதே. உனக்கு நாங்க இருக்கோம். நீ என் பொண்ணும்மா. அழாமல், ஆஸ்பத்திரியில் நீ இருக்கும்படி என்ன நேர்ந்தது சொல்.''

''நீங்க வாங்கப்பா. நேரில் எல்லாம் சொல்றேன்,'' என்று ஸ்வாதி மீண்டும் விக்கி விக்கிச் சொல்ல, வீட்டில் உள்ளது உள்ளபடி போட்டு விட்டு ஆட்டோவில் ஏறி எல்லோரும் கரம்சந்த் ஆஸ்பத்திரியில் நுழைந்தார்கள்.

ஆதரவற்ற பிள்ளை போல் ஆஸ்பத்திரியின் ரிசப்ஷனில் கையைப் பிசைந்தபடி அமர்ந்திருந்த ஸ்வாதி, தாய் - தந்தையரைக் கண்டதும் இடம், பொருள், ஏவல் விடுத்து அழுதபடி ஓடி வந்து சாஷ்டாங்கமாய் அவர்கள் காலில் விழுந்தாள். தந்தை தோள் பற்றி எழுப்பும் வரையில் எழும்பவில்லை அவள்.

தன்னந்தனியே கஷ்டத்தை அனுபவித்தவுடன்தான் உறவுகளின் ஞாபகமும், தேவையும் அதிகமாகின்றன.

மெல்ல மெல்லச் சஞ்சய் பற்றிய விஷயமும் சொல்ல, சின்னத் துரையும் மங்களமும் செயலிழந்து போனார்கள்.

இருவரும் மகளின் கையை வருடுவதும், தலையை வருடுவதும், கண் கலங்குவதுமாக இருக்க, ''வீட்டை விட்டுச்



சுயநலமாக ஓட உனக்கு எப்படி மனம் வந்தது ஸ்வாதி?'' என்று சுமித்ராதான் அவளை வாங்கு வாங்கு என்று வாங்கிக் கொண்டிருந்தாள்.

குனிந்த தலையை ஸ்வாதி நிமிர்த்தவே இல்லை. சுமித்ரா திட்டத் திட்ட எதிர்த்துப் பேசாமல் அத்தனையையும் கேட்டவள், தொடர்ந்து சுமித்ரா கேட்ட கேள்வியால் விசுக்கென்று குளம்போல் நிறைந்த கண்களை உயர்த்தினாள்.

''இதயத்தில் சஞ்சய்க்குப் பாதிப்பு இருக்கிறது என்று சஞ்சயின் அண்ணன் சொன்ன பிறகும், நீ உடல்நலமில்லாதவனை இழுத்துக் கொண்டு போய் இப்பொழுது அரை உயிராகக் கூட்டிக் கொண்டு வந்திருப்பது என்ன நியாயம் ஸ்வாதி?''

நேற்று மத்தியானம்வரை சஞ்சயும் ஸ்வாதியும் சொர்க்க லோகத்தில்தான் இருந்தார்கள் என்று சொல்லலாம். அவ்வளவு நெருக்கம், அவ்வளவு சந்தோஷம். ஆனால் முதல் நாளிலிருந்து லேசாக இருமியவனின் இருமல் கொஞ்சம் அதிகமாக, அது மூச்சுத் திணறலில் கொண்டு போய் விடும் என்று சத்தியமாக நினைக்கவில்லை.

அவன் மூச்சுத் திணற, இவள் அவன் படும் வேதனையைக் கண்டு, செய்வதறியாமல் கதற, வைத்திருந்த மருந்துகளில் ஒன்றைக் கொடுத்துக் கட்டுப்படுத்த முயற்சிக்க, திடீரென்று மாறிய அந்த குளிர்ந்த பகுதியின் சீதோஷ்ண நிலை எதிர்பாராத வகையில் மூச்சுத் திணறலை மேலும் அதிகரித்தது.

அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட அந்த கெஸ்ட் ஹவுஸில் தங்கியிருந்ததால், ஸ்வாதி பயம் வெளிறிட வெளியே ஓடி வந்து பாதையில் உதவிக்கு யாராவது வருகிறார்களா என்று இரண்டு மூன்று முறை தேடத் தொடங்கினாள். யாரும் வரவில்லை.



''ஐயோ...'' என்று உள்ளம் கதறத் தொடங்கிய நேரத்தில் ரவீஷின் ஆட்கள் ஒரு வாரத்துக்கு மேலாகத் தேடி அலைந்து நில நடுக்கத்தால் கொஞ்சம் தேடுதல் தாமதப்பட்டு, அவர்களைக் கண்டு பிடிப்பதற்குள் அவனுக்கு மூச்சுத் திணறல் தொடங்கி விட்டது. முதல் உதவியாக நெபுலைசர், டாக்டர் என்று ட்ரீட்மெண்ட் அங்கேயே தொடங்கி, அடுத்த ப்ளைட்டிலேயே ஏறி விடியற் காலையில் குஜராத்தில் சேர்ந்து விட்டார்கள்.

ஸ்வாதிக்கு அந்த சில நிமிடங்களை இப்பொழுது நினைத்தாலும் முகத்தில் பயம் அப்பியது.

தங்கை சிலை போல் தன்னையே பார்ப்பதை உணர்ந்து சுமித்ரா அவளை மெல்ல உலுப்பினாள். நினைவுக்கு வந்த ஸ்வாதி,

''சுமி... எனக்கு இவருக்கு எப்படிப்பட்ட சுகக் கேடு இருக்குன்னு சத்தியமா தெரியாது. ஏதோ வீரியமான அலர்ஜி என்றுதான் நினைத்துக் கொண்டு இருந்தேன். அவர் அண்ணன் எங்களைப் பிரிக்க வேண்டும் என்றே பொய் சொல்லுகிறார் என்றுதான் நினைத்தேன்.''

''இதய பலவீனமானவன் என்று தெரிந்திருந்தால் அவரைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாய். அப்படித்தானே?'' வெப்பமான குரலில் சுமித்ரா பேச,

''நீ நினைப்பது போல் இல்லை சுமி. ஆனால் நிதானித்திருப்போம். அவசரப்பட்டிருக்க மாட்டோம். நான் யார் மேலயாவது இவ்வளவு பாசத்தையும், உயிரையும் வைப்பேன் என்று யாராவது சொல்லியிருந்தால் நான் சிரித்திருப்பேன். ஆனால் இப்பொழுது என் உயிரையே பார்க்கவிட மாட்டேன் என்கிறார்கள். நான் அவனுக்கு நஞ்சாம்!'' கண்கள் திரள ஸ்வாதி சொல்ல,

சுமித்ராவிற்குள் நெஞ்சு நெகிழ்ந்தது. சின்னத்துரை சட்டென்று எழும்பி விட்டார். ''ஸ்வாதி குடிக்க ஏதாவது வாங்கிக் கொண்டு வருகிறேன்,'' என்ற முணுமுணுப்புடன்.



''அந்த வில்லன்; அதான் சஞ்சயின் அண்ணன் ஏர்போர்ட்டிலேயே வைத்து என்னை அடிக்கக் கூட வந்தான். ரெடியாக ஏர்போர்ட் வந்திருந்த ஆம்புலன்சில் அவனை ஏற்றி நான் ஏறுவதற்குள் கதவை மூடி வண்டியை எடுக்கச் சொல்லி விட்டான் அந்த வில்லன். 'இனி உன் தேவை இருக்காது. உன் விளையாட்டு இங்கு செல்லுபடியாகாது. இனி அவனை நெருங்க நினைத்தால் நீ இருக்க மாட்டாய்!' என்று மிரட்டி நடு ரோட்டில் நிப்பாட்டி விட்டுப் போய் விட்டான்.''

செய்யக்கூடியவன்தான் என்று சுமித்ராவிற்குப் புரிந்தது.

''பெரிய இடத்துப் பொல்லாப்பெல்லாம் நமக்கெதுக்கு?'' என்றபடி மங்களம் மூக்கை உறிஞ்ச, ஸ்வாதி தொடர்ந்தாள்.

''எனக்கு அவன் பக்கத்திலேயே இருக்கணும். என்னைக் கொன்னு போட்டாலும் பரவாயில்லை. அவனைப் பார்க்காமல் ஒன்றுமே பிடிக்கவில்லை. எனக்கு அவன் வேண்டும். சஞ்சய் வேண்டும்!'' என்று ஸ்வாதி விம்மி விம்மி அழுத கோலம், மங்களத்தையும் சுமித்ராவையும் கலங்கடித்தது.

தாயின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்ட ஸ்வாதியும் அதன்பின் நிமிரவே இல்லை.

வீட்டில் ஸ்வாதிக்காக யாரேனும் ரவீஷை சந்தித்துப் பேசியாக வேண்டிய நிலை வந்ததும், சுமித்ராவிற்கு அது யார் என்று புரிந்து போயிற்று.

சின்னத்துரை தானுண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கும் ரகம். அந்த வட்டத்தை விட்டு விலகாதவர். ரவீஷைச் சந்தித்து எப்படிப் பேசுவது என்று அவர் பேச்சுக்களை மனப்பாடம் செய்யத் தொடங்க, சுமித்ரா தானாகவே அந்த வேலையை ஏற்றாள்.

## 18

இன்று காலையில் ரவீஷ் அவளை உடனே வரச் சொன்ன காரணம் 'ஸ்வாதி' என்று சுமித்ராவிற்கு ஸ்வாதியை ஆஸ்பத்திரியில் பார்த்தவுடனேயே புரிந்து விட்டது.

அவனிடம் எடுப்பாக வர முடியாது என்று சொல்லி விட்டு நாளைக் காலை அவன் முன்னால் நின்றால், மதிப்பாணா என்றிருந்தது. இரவு தூக்கமே வரவில்லை.

அம்மா, ஸ்வாதியுடன் ஆஸ்பத்திரி ரிசப்ஷனிலேயே தங்கி விட்டார். அப்பாவின் அறையில் இன்னும் லைட் எரிந்து கொண்டிருப்பதால் அவரும் தூக்கம் வராமல் தவிப்பது புரிந்தது.

பலதையும் சிந்தித்தபடி இருந்தவளுக்கு விடியற் காலையில்தான் தூக்கமே வந்தது.

மறுநாள் காலையில் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு, சுமித்ராவுடன் ரவீஷ்ஷைப் பார்க்கத் தானும் வருவதாகக் கிளம்பினார் சின்னத்துரை.

சுமித்ராவிற்கும் 'அப்பாடா' என்று துணை கிடைத்த சந்தோஷம் முகத்தில் தெரிந்தது. ரவீஷ்ஷைத் தனிமையில் சந்திக்க அவளும் மிகவும் பயமாக இருந்தது உண்மை. ஆனால் மங்களம் ஆஸ்பத்திரியில் இருந்து டெலிபோன் பண்ணினாள், ஸ்வாதி ஹிஸ்டரிகல் ஆக நடந்து கொள்வதாகவும், யார் சொன்னாலும் கேட்காமல், ஆஸ்பத்திரி ரூம்களுக்குள் எல்லாம் போய் சஞ்சயைத் தேடுவதாகவும் பயமாக இருப்பதால், உடனே சின்னத்துரையை ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னாள்.



கடைசியில் சுமித்ரா மீண்டும் அவனைத் தனிமையில் சந்தித்தாக வேண்டிய நிலை. அலுவலகக் கட்டடம் இடிந்து போனதினால் அவன் ஃபாக்டரியில் உள்ள அலுவலக அறையில் நிர்வாகம் செய்கிறான் என்பது சுமித்ராவிற்கு ஏற்கெனவே தெரிந்த விஷயம்.

சென்ற முறை போல் இல்லாமல், 'சுமித்ரா' என்று பெயர் சொன்னவுடன், ஐந்தே நிமிடத்தில் உள்ளேயிருந்து அழைப்பு வந்து விட்டது.

சுழல் நாற்காலியில் அமர்ந்து புருவ முடிச்சுடன் அவளைக் கண்கள் இடுங்கப் பார்த்த ரவீஷைக் கண்டதும், சுமித்ராவிற்கு நெஞ்சு படபடப்பானது. ஆனால் அவளின் பாதிப்பைச் சற்றும் வெளிக்காட்டாமல்,

''உங்களை மீண்டும் தொந்தரவு செய்வதற்கு ரொம்ப சாரி. ஆனால் எனக்கு வேறு வழி தெரியவில்லை!'' என்று முதலெடுப்பிலேயே செய்தியைச் சொல்ல ஆரம்பித்தாள் சுமித்ரா.

''ம்... ம்... ம்...'' என்று மேலே ஒன்றும் பேசாமல் அவளையே இமைக்காமல் பார்த்தான் அவன்.

''என் தங்கை...'' என்று சுமித்ரா தொடங்க,

''ஓ... தங்கையின் விஷயம் என்றால் மானமீனம் பார்க்காமல் உடனே உதவி நாடி ஓடி வந்து விடுவீர்களாக்கும்!'' உதட்டைச் சுழித்தபடி அவன் பேசிய பேச்சில் சுமித்ராவிற்கு வந்த வேலை மறந்து போயிற்று.

''இராத்திரி பகலாய் அத்தனை அப்பாயின்ட்மென்ட்களையும் சரிக்கட்டி அதன் பின் எனக்கும் நேரம் ஒதுக்கியதற்கு அடியேன் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்!'' என்று அவன் பேசிய பேச்சில் கோபமும், நக்கலும் கலந்திருந்தது.



இவன் ஏன் இவளிடம் காரணமின்றி வார்த்தைகளைப் பிரயோகிக்கிறான் என்று சுமித்ராவிற்குக் கோபம் வந்தது.

அப்படி என்ன தவறு செய்து விட்டாள் அவள்.

அவன் பேசிய பேச்சுக்கும் அவளுக்கும் சம்பந்தம் இல்லாதது போல் சுமித்ரா மீண்டும் ஸ்வாதியைப் பற்றிப் பேச்சைத் தொடங்கினாள்.

''சஞ்சய் இப்பொழுது என் தங்கையின் கணவன். அவளை நீங்கள் அவனிடமிருந்து பிரிப்பது என்ன விதத்தில் நியாயம்? அவள் முகத்தைப் பார்க்கக் கூட விடவில்லை என்றால் அது அநியாயம்!''

''நியாய அநியாயம் பற்றி எல்லாம் எனக்குக் கவலையில்லை. எனக்கு என் தம்பி உயிருடன் இருந்தாக வேண்டும். உன் தங்கை அவனைக் கசக்கிப் பிழிந்து விடுவாள். பார்த்தாயல்லவா? இந்தச் சில நாட்களில் அவனை எந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டாள் என்று?''

''வியாதியைப் பற்றி அந்த வியாதிக்காரருக்குக் கூடத் தெரியப் படுத்தாதது உங்களுடைய மிகப் பெரிய குற்றம். அதனால்தான் சஞ்சய் தெரியாமல் மலை அடிவாரத்திற்குப் போனதும், மூச்சுத் திணறல் வந்ததும். உண்மையைச் சொன்னால் உங்கள் தம்பியின் உயிருக்கு எமனாக இருந்தது நீங்கள். என் தங்கை அல்ல!'' என்று பழியை அவன் மேல் தூக்கிப் போட்டாள் சுமித்ரா.

''பரவாயில்லை. நன்றாகத்தான் பேசுகிறாய். ஆனால் இந்தப் பேச்சு இனி வேண்டாம். நீ போகலாம்,'' என்று முகம் கடினமாக ரவீஷ் சொல்ல, சுமித்ரா நிமிர்ந்தாள்.

''ஆமாம்... போகத்தான் போகிறேன், கோர்ட்டுக்கு. சட்டப்படி அவர்கள் கணவன் - மனைவி. உங்களால் அவர்களைப் பிரிக்க முடியாது.''



''அதேதான்... கோர்ட்டுக்குப் போனால் ஜீவனாம்சமாகப் பெரும் தொகையைச் சுருட்டிக் கொண்டு போய் விடலாம் என்பதுதானே உங்கள் நோக்கம். அங்கே இங்கே சுற்றிக் கடைசியில் சரியான பாயின்ட்டுக்கு வந்து விட்டாயே, சபாஷ்.''

''யாருக்கு வேண்டும் உங்கள் பணம். நீங்களே கட்டிக் கொண்டு அழுங்கள். ஆனால் உங்கள் தம்பி இப்பொழுது அவளின் சொந்தம், சொத்து. அதை அவள் விட்டுக் கொடுக்க முடியாது.''

''அதாவது சொத்தெல்லாம் எப்பொழுது கொடுக்கப் போகிறாய் என்று கேட்கிறாய்...?''

திரும்பத் திரும்பச் சுற்றிச் சுற்றிப் பணம் பற்றியே அவன் பேச சுமித்ராவிற்கும் சுறுசுறுவென்று கோபம் வந்தது.

தங்கையிடம் இருந்து சஞ்சையை மீட்டு அவனிடம் கொடுக்க வேண்டும் என்று தான் நினைத்ததை எண்ணி அவளுக்குக் கோபத்துடன் நைந்த சிரிப்பு தான் வந்தது.

''பணம் பணம் என்கிறீர்களே, உங்கள் பணம் ஒரு காசு வேண்டாம் என்று கையெழுத்துப் போட்டுக் கொடுக்கச் சொல்லவா?''

''அநாவசிய 'டிராமா' தேவையில்லை சுமித்ரா. உன் தங்கையைப் பற்றி உனக்குத் தெரியும். பணம் நிறைய வருகின்றது என்றுதானே மாடலிங் தொழிலுக்குப் போனாள்.''

சுமித்ரா அவன் பேச்சினால் விளைந்த கோபத்தைக் கடினப்பட்டு அடக்கினாள். அவனுடைய தயவு இப்பொழுது மிக முக்கியமான ஒன்று.

''என் தங்கை நீங்கள் நினைப்பது போல் தவறானவள் இல்லை. ஏதோ தெரியாமல் செய்த பிழை... தவிர இப்போது இருவரும் கணவன் மனைவி. இருவரும் ஒருவரின் அரு

காமையை மற்றொருவர் நாடுவது இயல்புதானே. அதுவும் சஞ்சய் நிலை வெகுவாக நார்மலுக்குத் திரும்பி விட்ட பிறகு...'' சுமித்ராவைப் பேசி முடிக்க விடவில்லை.

''இந்த மாதிரி விஷயம் எல்லாம் உனக்கு ரொம்ப அனுபவம் போலத் தெரிகிறது. அது என்ன ஒருவரின் அருகாமையை மற்றொருவர்...'' என்று சொல்லியபடி அவன் கடகடவென்று சிரிக்க,

''இது உலக நடப்பு. கண்களைத் திறந்து வைத்தால் தெரியும். புரியும் விஷயம். அதற்கு அனுபவப் பாடம் தேவையில்லை!'' பட்டென்று பதில் கொடுத்தாள் சுமித்ரா.

''உன்னைப் பார்த்தால் கண்களை மட்டும் திறந்து வைத்திருப்பவளைப் போலத் தெரியவில்லையே. மனசையும் சேர்த்தல்லவா திறந்து வைத்திருக்கிறாய்!'' என்று வார்த்தைகளை அவன் அழுத்தி அழுத்திச் சொன்ன விதம், அவன் தவறாக ஏதோ பேசப் போகிறான் என்று புரிந்தது. முறைத்தாள் சுமித்ரா.

''தற்செயலாக நான் உன்னைப் பார்த்த இரண்டு முறையும், நீ வெவ்வேறு ஆண்களுடன் கண்களை மயக்கியல்லவா பேசிக் கொண்டிருந்தாய். தங்கையை விட உன்னிடம்தான் அழகு கொட்டிக் கிடக்கிறதே. இன்னும் பணக்கார நிலையான இளிச்சவாயன் ஒருவரும் கிடைக்கவில்லையா?'' குற்றம் சாட்டும் விதமாக அவன் பேச,

சுமித்ரா வந்த கோபத்தில், ''நான் இன்னும் எத்தனை பேர்களுடன் சுற்றித் திரிந்தாலும் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இல்லை!'' என்றாள்.

''ஆஹா... என்ன ஜாலம்...'' என்று ஒரு நிமிடம் கண்களை மூடியவன், ''அதாவது தட்டிக் கேட்கும் உரிமையை உண்டாக்கிக் கொள்ளச் சொல்கிறாயா?'' என்றான் சுமித்ராவின் கண்களைத் தீர்க்கமாகச் சந்தித்தபடி.



அவன் வெறுப்புடன் கிண்டலாகச் சொன்னாலும், அதன் அர்த்தம் புரிந்து, சுமித்ராவின் இதயம் சில நொடிகள் வேலை செய்வதையே நிப்பாட்டி விட்டன. அப்படி உரிமை உண்டானால் என்று எண்ணுகையிலேயே... தன் பைத்தியக் காரத்தனத்தைச் சட்டென்று உதறி நடப்புக்கு வந்தாள். அவனுடைய போக்கிலேயே சுமித்ராவும் பேசத் தொடங்கினாள்.

''என்னுடைய தங்கையின் வாழ்வு மட்டும் உங்கள் கையில் இல்லை என்றால், உங்கள் நிழல் இருக்கும் இடத்துக்குக் கூட நான் ஒதுங்க மாட்டேன். என்னைப் பொறுத்த வரையில் மயக்குவதற்கும், மயங்குவதற்கும், வலை வீசுவதற்கும் பணத் தகுதி மட்டும் இருந்தால் போதாது மிஸ்டர் ரவீஷ். இன்னும் நிறைய நிறையத் தகுதிகள் வேண்டும்.

''பணம் உங்களிடம் நிறையக் கொட்டிக் கிடக்கலாம். அதற்காகப் பார்க்கும் பெண்களெல்லாம் உங்கள் காலடியில் விழுந்து விடுவார்கள் என்று யார் சொன்னது?'' என்று சுமித்ரா பேசப் பேச, அவன் கண்கள் இடுங்கின. வில்லாக வளைந்த புருவம் மேலேறியது.

''என்ன தகுதி என்னிடம் இல்லை என்கிறாய்?'' அமைதியாக அவனிடம் இருந்து கேள்வி பிறந்ததில், சுமித்ரா ஒரு விநாடி திகைத்தாள்.

''என்ன தகுதி உங்களிடம் இருக்கிறது என்கிறீர்கள்?'' குரலில் சலிப்பை ஏற்படுத்திக் கொண்டு சுமித்ரா, மிகவும் ஜாக்கிரதையாகப் பதில் சொல்ல,

''எங்கே, என் தகுதியில் என்ன குறை கண்டு பிடித்து விட்டாயாம்? என்னைப் பார்த்துச் சொல்!'' என்றவன் நின்ற தோரணையில் சுமித்ராவிற்கு மூச்சடைத்தது.



அப்படி இப்படி என்று பேச்சு வளர்ந்த பாதை அவளைக் கலவரப் படுத்தியது. தன்னை அவனிடம் காட்டிக் கொள்ளாமலிருக்கப் பிரம்மப் பிரயத்தனம் பட வேண்டியிருந்தது.

''என்ன தங்கை வழியில், அக்காவிற்கும் காதல் வலை வீசத் தகுதியான ஆளாய்த் தோன்றுகிறதா?'' என்று ரவீஷ் எதிர் பாராமல் கேட்ட கேள்வியில் ஒரு கணம் சுமித்ரா தடுமாறிப் போனாள். ஆனால் சமாளித்துக் கொண்டு,

''இனி கொஞ்சம் சோலையானாலும், நடுநிசியில் ஆந்தை அலறத்தான் செய்யும். எவ்வளவுதான் சமுதாயத்தில் பெரிய இடத்தில் இருந்தாலும் ஆண் புத்தி தங்கையின் விஷயமாகப் பேச வந்த பெண்ணிடம் இது என்ன விகல்பமான பேச்சு!'' என்று சுமித்ரா வேண்டுமென்றே பேச்சின் கோணத்தைத் திசை திருப்ப வேண்டும் என்ற நோக்கில், அவனைத் தாக்கிப் பேச,

''நாவில் அமிலம் தடவிய மாதிரி இவ்வளவு மோசமாகப் பேச அப்படி நான் என்ன செய்து விட்டேன்?'' நெற்றி நரம்புகள் கோபத்தில் விண்ணென்று தெறித்தன.

''கூடப் பேசும் ஆளுக்குத் தகுந்தபடிதானே பேச்சும் இருக்கும்!'' என்று சுமித்ரா மெல்ல முணுமுணுக்க,

சுமித்ராவின் நல்ல வேளை, தொலைபேசி சிணுங்கியது. அதற்குப் பதில் கொடுப்பதற்காக அவன் அவளை முறைத்தபடி நகர்ந்த வேளையில், அவன் பதிலுக்குக் காத்திராமல் காற்றைப் போல் வேகமாக வெளியே வந்தாள் சுமித்ரா.

தங்கையின் விஷயமாக ஒரு முன்னேற்றமும் தன் பேச்சி னால் நடக்கப் போவதில்லை. அவனிடம் பேசிய பேச்சுக்கு இன்னும் பாதகமாக எதுவும் செய்யாமல் இருந்தால் தேவலாம் போலிருந்தது.

இவனிடம் என்ன தைரியத்தில் பேச வந்தேன்?

எதைப் பேச வந்தேன்?



## 19

வீடு வந்து சேர்ந்த சுமித்ராவிற்கு நெஞ்சு பயத்தில் படபடத்தது. கொஞ்சம் நிதானமாகப் பேசியிருக்க வேண்டுமோ?

தங்கைக்காக என்று பேசப் போய், வார்த்தைகள் எங்கெங்கோ பறந்த விதம், சுமித்ராவிற்கு எரிச்சலைக் கிளப்பியது.

ஆஸ்பத்திரிக்குப் போய்த் தங்கையின் முகத்தில் முழிக்கும் தைரியமும் இல்லை. சின்னத்துரையும் அவளையல்லவா நம்பியிருந்தார்.

கல்லைக் கிள்ளினால் கைதான் வலிக்கும். இருந்திருந்து அவனிடம் போய் நியாயம் கேட்கப் போனாளே, நெஞ்சு வலி தான் மிச்சம்.

என்ன மனிதன் இவன். சதா சிடுசிடு என்று விழுந்து கொண்டு! ஆபத்தில் இருக்கும் போது மட்டும்தான் இவனது நல்ல குணங்கள் வெளிப்படும் போல.

கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு தங்கைக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்ற சுமித்ராவை மங்களத்தின் நிம்மதியான தெளிவடைந்த முகம் நம்பிக்கையூட்டியது.

''சுமித்ரா, ஸ்வாதியை அவள் புருஷனிடம் விட்டு விட்டார்கள். அம்...மா...டி இரண்டு நாட்களில் முழுப் பட்டினியுடன், குற்றுயிராய் அவள் புருஷ ஜபம் பண்ணிக் கொண்டிருந்ததை யார் பார்த்திருந்தாலும், அந்த அன்பின் உண்மையைக் கண்டு இளகித்தான் போயிருப்பார்கள்!'' என்றவள் தொடர்ந்து,

''இன்று இரவே சஞ்சையை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்களாம். கூடவே ஸ்வாதியையும் அழைத்துப் போகிறார்கள். ஸ்வாதி இரவு வரை நம்மையும் கூட இருக்கச் சொன்னான்!'' என்று மங்களம் சொல்ல, படிக்க ஏதோ புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்த சின்னத்துரையின் முகத்தில் நிம்மதியைப் பார்த்தவுடன் சுமித்ராவிற்குப் பெரும் சுமை இறங்கியது போல் இருந்தது. எல்லாம் சுபமாக முடிந்து விட்டதே.

கொஞ்ச நேரம் அப்பா, அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு, சஞ்சய் - ஸ்வாதியையும் உள்ளே போய்ப் பார்த்து விட்டு வந்த சுமித்ரா வெளியே வரவும், ரவீஷைக் கண்டாள். நீண்ட காரிடாரில் அவன் நடந்து வந்த வேகமும், தோரணையும் எப்பொழுதும் போல சுமித்ராவைக் கவர்ந்தது.

சுமித்ராவைக் கண்டதும் ரவீஷின் கண்கள் கூர்மையாயின. கண நேரம் இருவரின் கண்களும் சந்திக்க, அவன் கண்கள் எதையோ எதிர்பார்த்துக் காத்து இருந்தது போன்ற பிரமையை அவளுக்குக் கொடுத்தன.

அதன்பின் அவளிடம் ஒன்றும் பேசாமல் அவன் நகர்ந்தான்.

## 20

நாட்கள் சில உருண்டோடின. வீட்டிலும் பழையபடி நிம்மதி குடியேறியது. ஆனால் சுமித்ராவின் மனதில் நிம்மதியே கேள்விக்குறியானது.

அந்தக் காலம் முதல் மாறாமல் இருப்பது நீரின் ஓட்டமும் காதலின் போக்கும்தான். நெஞ்சு நிறைய ரவீஷின் நினைவு



களைச் சுமந்திருந்த சுமித்ராவிற்கு உணவும் பிடிக்கவில்லை. தூக்கமும் வரவில்லை. தன்னுடைய பைத்தியக்காரத் தனத்தை எண்ணி அழுகை வேறு அழையா விருந்தாளியாக அடிக்கடி வந்தது.

வருங்காலமே இல்லாத காதலில் தன்னை மூழ்க விடுவது பைத்தியக்காரத்தனம். இதனால் வாழ்க்கையே கேள்விக் குறியாகி விடும் என்று சுமித்ராவிற்குப் புரிந்தாலும், செய்வ தறியாது நினைவுகளை அதன் ஓட்டத்திலேயே விட்டாள்.

அன்று ஆஸ்பத்திரியில் ரவீஷைப் பார்த்ததுடன் சரி. அதன் பிறகு சுமித்ரா பார்க்கவும் இல்லை. பார்க்க முயற்சி செய்யவும் இல்லை.

இடையில் ஒரு நாள் அம்மாவும் அப்பாவும் ஸ்வாதியைப் பார்க்கச் சென்றனர். அவளின் திருமணத்திற்குச் சேர்த்து வைத்திருந்த இரண்டு லட்சம் எஃப்டியையும் நகைகளையும் அவளிடம் கொடுத்து விட்டு மகள் மிகவும் சந்தோஷமாக இருப்பதையும் கவனித்துவிட்டுத் திருப்தியுடன் வந்தார்கள்.

இளையவளுக்கே கல்யாணம் ஆயிற்றே, மூத்தவளை இன்னும் விட்டு வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை என்றபடி பெற்றோர் ரொம்ப ஆசையாய் அவளுக்கு வரன் பார்க்கத் தொடங்க, சுமித்ரா அதிர்ச்சியடைந்தாள்.

அவள் சம்மதம் இல்லாமல் ஒன்றும் நடக்காதுதான். ஆனால் கல்யாணம் என்ற ஒன்று இந்த ஜென்மத்தில் அவளுக்குக் கிடைக்கப் பெறாத பாக்யம் என்று எப்படிச் சொல்வது என்று திணறிப் போனாள்.

ஒரு வரன் ஜாதகம் பொருந்தியிருக்கிறது. படிப்பும் குடும்பமும் நன்றாக இருக்கிறது என்று சின்னத்துரை மாப்பிள்ளையின் போட்டோவைச் சுமித்ராவிடம் நீட்ட, சுமித்ரா மெல்ல அப்பாவின் கைகளை விலக்கினாள்.

"அப்பா! முதலில் ஐ.சி.டபிள்யூ. படிப்பை முடிக்கிறேன். அதன் பிறகு பார்க்கலாம்பா!" என்றாள்.

"கல்யாணம் பண்ணிட்டு படியேன், யார் வேண்டாங்கறா?"

"குடும்பப் பொறுப்புன்னு வந்து விட்டால் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது. நேரமும் கிடைக்காது. கல்யாணம் இப்ப வேண்டாமே... ப்ளீஸ்ப்பா."

"நானும் அப்படித்தான் முதல்ல யோசிச்சேன். ஆனா ஸ்வாதி முந்தி விட்டாளே. அதனால் மூத்தவளுக்குக் கல்யாணம் இன்னும் பண்ணலையான்னு கேள்விகள் எழும்பும் என்றுதான்.. சரி, நீ படிப்பை முடி. அப்புறம் பார்த்துக்கலாம்," என்று யோசனையுடன் நகர்ந்தார் அவர்.

சுமித்ராவிற்கும் அப்பாடா என்றிருந்தது.

ரவீஷின் நினைவுகளின் தாக்கம் அதிகமாகிக் கொண்டே வரவும், தன்னுடைய படிப்பில் தன் முழுக் கவனமும் செலுத்தினாள் சுமித்ரா.

அவளை நோக்கி அவன் காதல் பாலம் கட்டுவதற்கு முன் தனக்குள் சுவர் எழுப்பி அதை மறைப்பதையே புத்திசாலித் தனம் என்று எண்ணி விட்டாள் சுமித்ரா.

## 21

படிப்பில் தன்னை மூழ்கடித்துக் கொண்டிருந்த சுமித்ரா, இடையில் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டோர் நல நிதிக்காக அகமதாபாத்தில் இன்னிசைக் கச்சேரி சேரிட்டி ஷோ நடக்க, அவளுடைய சொந்த முயற்சியில் தெரிந்தோர், நண்பர்கள் என்று நூறு டிக்கெட்டுகளை விற்றுக் கொடுத்தாள்.



பல ஆயிரக்கணக்கானோர் உயிர் நீத்த அந்த நிலநடுக்கத்தில் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பிய ஜீவன்களில் அவளும் ஒருத்தி யல்லவா?

ரவீஷ்!!

அவனல்லவா காரணம்.

அவனுக்காக இவள் என்ன செய்திருக்கிறாள்? சஞ்சயைப் பத்திரமாக அவனிடம் சேர்க்க வேண்டும் என்று அவள் ஆசைப் பட்டதுடன் சரி. அதையும் அவள் முழுசாக நிறைவேற்ற வில்லை. அவனுடைய முயற்சியில் தானே சஞ்சயைக் காப் பாற்றினான். அவன் மட்டும் காலம் தாமதித்திருந்தால் சஞ்சயின் நிலை என்னவாகியிருக்கும். ஸ்வாதியின் மேல் கொலைப் பழியல்லவா விழுந்திருக்கும். நினைத்துப் பார்க்கவே உடம்பு நடுங்கிற்று.

அவன் அவளை உயிர் பிழைக்க உதவியதையும் மறக்க முடியாமல், அது காதலாகி உருவெடுத்ததையும் தடுக்க முடி யாமல், அதைச் சுமக்கவும் முடியாமல், சுமித்ராவிற்கு மூச்சு முட்டியது.

ஸ்வாதியின் பிறந்த நாள் என்று வீட்டில் காலையில் இருந்தே வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தன.

மங்களம், ஸ்வாதிக்குப் பிடித்த பாயசமும், இனிப்புப் பலகாரமும் செய்தபடி, கிச்சனில் படு பிசியாக இருந்தார்.

சின்னத்துரை மகளுக்குப் பிறந்த நாள் பரிசாக வாங்கியிருந்த பரிசுப் பொருட்களை எடுத்து வைத்தார்.

"அப்பா! நான் சாயுங்காலம் ஆபீஸ் முடிஞ்சு ஸ்வாதி வீட்டுக்கு வந்திடறேன். உங்க கூட இப்பவே கிளம்பி நான் என்ன பண்ணப் போறேன். சரியா?" என்று தந்தையிடம் அனுமதி கேட்டு நின்றாள் சுமித்ரா.

''அப்படியே செய்ம்மா!'' என்று அனுமதி வழங்கினார் அவர்.

''சுமி, இந்த ஏலக்காயைக் கொஞ்சம் பொடிச்சுத்தாம்மா!'' என்று கிச்சனில் இருந்து மங்களம் குரல் கொடுக்க,

''வரேம்மா!'' என்றபடி சுமித்ரா தாய்க்கு உதவச் சென்றாள்.

அன்று முழுவதும் சுமித்ராவிற்கு ஆபீஸில் வேலை ஓடவே யில்லை.

ரவீஷ்ஷைச் சந்திக்கப் போவது மனசுக்குள் இனிய உணர்வு களைத் தட்டி எழுப்பியது. நடக்க முடியாத பேராசைதான். ஆனால் அதைக் கட்டுப்படுத்தும் வலிமை அவளிடம் இல்லை.

கூட வேலை பார்க்கும் தோழியர் கேள்வி கேட்கும் அளவுக்கு அவளுடைய கவனம் சிதறிப் போயிற்று.

மாலை ரெஸ்ட் ரூமில் முகம் கழுவி, உடை திருத்தி லேசாக ஒப்பனை செய்து கொண்டு தங்கைக்குச் சின்னதாக ஒரு பரிசுப் பொருளையும் வாங்கிக் கொண்டு, சுமித்ரா தங்கையின் வீட்டை அடைந்தாள்.

கணவனுடன் ஹாலில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்த ஸ்வாதி சுமித்ராவைக் கண்டதும்,

''சுமி!'' என்று முகம் எல்லாம் ஜொலிக்க ஓடி வந்து கன்னத்தில் 'பச்' என்று முத்தமிட்டாள்.

''அம்மாவும் அப்பாவும் இப்பத்தான் கிளம்பினார்கள்!'' என்று செய்தியும் சொன்னாள்.

''நீ பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வெளியே போக வில்லையா ஸ்வாதி?'' என்று சுமித்ரா கேட்க,

''இல்லை சுமி, இன்னும் கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்தால் நல்லதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். பிறந்த நாள் எங்கே



ஓடிவிடவா போகிறது. பிறகு பார்த்துக் கொள்ளலாம். வா, என்னோட ரூம்க்குப் போகலாம்,'' என்று அவளைக் கைப் பிடித்திழுத்துப் போனாள்.

ஸ்வாதிக்கு ஒரே பேச்சுதான். முழுவதும் சஞ்சையைப் பற்றித்தான் இருந்தது.

சுமித்ராவுக்கு ரொம்ப நாட்களாய் நெஞ்சில் நமைத்துக் கொண்டிருந்த கேள்வியை ஸ்வாதியிடம் கேட்காமல் இருக்க முடியவில்லை.

''ஸ்வாதி, நிலநடுக்கம் நடந்தது குஜராத்தில். அம்மா, அப்பா, நான், ரவீஷ் என்று உங்கள் சொந்தங்கள் முழுவதும் அங்கே இருக்கும்போது, ஒரு போன் பண்ணிக்கூட நலம்தானா என்று விசாரிக்கவேயில்லையே நீ. எங்களை நினைத்துக் கூடப் பார்க்கவில்லையே?'' மிக மெல்லிய குரலில் கொஞ்சம் தாங்கலோடு சுமித்ரா கேட்க,

ஸ்வாதி அழுதே விட்டாள்.

''குஜராத்தில் நிலநடுக்கம் என்றதும், நாங்கள் பட்ட பாடு என்ன என்பது எங்களுக்குத்தான் தெரியும். தொடர்பு கொள்ள முடியாமல், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று தெரியாமல் உலகமே இருண்டு போனது போலத்தான் இருந்தது. சமயத்தில் அலோக் போன் பண்ணி விஷயம் சொல்லும் வரை எங்கள் உயிர் எங்களிடம் இல்லையே சுமி. அவ்வளவு சுயநலக்காரி என்றா என்னை நினைத்துக் கொண்டாய்?''

''ஸ்வாதி...'' என்ற சஞ்சையின் குரல் ஹாலில் இருந்து ஒலிக்க,

''வந்துட்டேன்!'' என்றபடி சுமித்ராவையும் உடன் அழைத்துக் கொண்டு மீண்டும் ஹாலுக்கு வந்தாள் ஸ்வாதி.

அங்கே ரவீஷும் சஞ்சய் பக்கத்தில் அமர்ந்திருந்ததைக் கண்டவுடன் சுமித்ராவுக்கு வயிற்றுக்குள் பல பட்டாம்பூச்சிகள் பறந்தன.

''அண்ணா... டயர்டா இருக்கு. நான் ரூமிற்குப் போகிறேன். நீயும் வா ஸ்வாதி,'' என்று குறும்புச் சிரிப்புடன் எழுந்த சஞ்சயைப் பார்த்து அழகிய பல் வரிசை தெரியப் 'பக்'கென்று சிரித்தான் ரவீஷ்.

''தனிமையாக இருக்க இது ஒரு சாக்கு இல்லையாடா?'' என்று தம்பியின் தோளில் தட்டியபடி தானும் எழுந்த ரவீஷ்,

''வா சுமித்ரா... உனக்கு வீடு சுற்றிக் காட்டுகிறேன்,'' என்று அவளை மிக சகஜமாக அழைத்தான்.

ஐந்து வருடங்களுக்கு முன் பெற்றோரைப் பறி கொடுத்த பின், அண்ணனும் தம்பியும் துணைக்குத் தூரத்து உறவான ஒரு சித்தியையும் கூட வைத்துக் கொண்டு வீட்டை நடத்தியிருக்கிறார்கள். வீடு சுத்தமாக இருந்தது.

கீழேயும் மேலேயும் கட்டட அமைப்பு ஒரே மாதிரி இருந்தது.

மொட்டை மாடியில் செயற்கை முறையில் இயற்கையை உண்டு பண்ணியிருந்தது நெஞ்சை அள்ளிக் கொண்டு போனது. செயற்கை நீர் வீழ்ச்சி உள்ள தண்ணீர் பாதையில் பருத்த அழகு மீன்கள், செடிகள் என்று பார்த்துப் பார்த்துச் செய்திருந்தது ரசிக்கத் தூண்டியது. கூடவே தண்ணீரின் சலசலப்பு சப்தம் சுமித்ராவின் இதய ஓட்டத்தையும் சீராக்கியது.

''மீன்களுக்கு ஏதாவது விசேஷ உணவு போடுவீர்களா? ரொம்ப அழகாக ஜொலிக்குது!'' சுமித்ரா ஆர்வமாகக் கேட்க,

''உணவே போடுவது கிடையாதே!'' என்று உதட்டைப் பிதுக்கினான் அவன்.

''பொய்.''

''நிஜம். கொசுக்கள் இங்கே இந்தச் செடிகொடிகளில் நிறைந்து இருக்கும். தண்ணீரின் மேல் அவையிடும் முட்டை அனைத்துமே மீன்களின் உணவு.''



''ஓ...'' என்றாள் சுமித்ரா.

மாலை மங்கியது. சூரியன் மறையத் தொடங்கினான்.

அந்த மாலை மயங்கும் வேளையில் தன் அருகில் இருந்த சுமித்ராவின் அழகு ரவீஷை நிலைகுலைய வைத்தது.

''இனி கீழே போகலாமா?'' என்று திரும்பிய சுமித்ராவின் காலில் புசுபுசுவென்று ஏதோ ஓட,

''கிறீச்'' என்று கத்தியபடி அருகில் இருந்தவனின் கைகளைப் பயத்துடன் பற்றிக் குதித்தாள்.

அவனோ மறு கையால் அவளை அணைத்துப் பிடித்தான். சுற்றுப்புறம் மறந்து தன்னை மறந்து அவளின் முகத்தை நோக்கிக் குனிந்தான்.

தன் பயத்தில் மூழ்கியிருந்தவள் அவனை உணராமல் மெதுவாக விலக்கி, ''ஸாரி காலில் ஏதோ இடறி... ஆ முயல் குட்டி... என்ன அழகு... இதைப் பார்த்தா பயந்தேன். உங்களிடம் எத்தனை குட்டி இருக்கிறது?'' என்று ஆசையாகக் கலகலவென்று சிரித்தபடி இவள் கேட்க,

ரவீஷ் பதிலொன்றும் பேசாமல் விறைத்து நின்றான். மறுக்கப்பட்ட கோபம் அவனுக்கு.

நிமிர்ந்து அவன் முகம் பார்த்த சுமித்ரா குழம்பிப் போனாள்.

என்ன செய்துவிட்டேன். எதற்காக இந்தக் கோபம் என்று யோசித்தவளுக்குப் புரிந்து விட்டது.

வேண்டும் என்றே அவனை மயக்கத் தந்திரம் செய்கிறேன் என்று நினைத்திருப்பானோ? உங்கள் வீட்டில் பணக்காரர்களை மயக்க எத்தனை பேர் இருக்கிறீர்கள் என்று கேட்டவன்தானே. அந்த நினைப்பு மறந்தா போயிருக்கும். மீண்டும் தவறான கணிப்பு. இவனுக்கு என்னைப் பற்றி ஒரு நாளும் நல்ல நினைப்பு வரப் போவதில்லை என்ற எண்ணம் சுமித்ராவைக் கலங்க வைத்தது.

வீட்டுக்கு வந்த பின்னும் ரவீஷின் பாராமுகம் அவளைப் பயங்கரமாக வாட்டி எடுத்தது. இவளின் நினைப்பு அவனுக்கு நல்லதல்ல என்று புரிந்தது. அது அவளின் நிம்மதியைக் குலைக்கப் போகிறது என்று தெரிந்தது. எல்லாம் தெரிந்தும் அதில் இருந்து மீள அவளுக்கு வழி தெரியவில்லை.

## 22

ஒரு மாதத்திற்குப் பிறகு இனி சஞ்சய்க்கு எந்தக் குழப்பமும் வராது என்றறிந்த பின் ஓர் நட்சத்திர ஹோட்டலில் எளிமையான வகையில் ஸ்வாதிக்கும் சஞ்சய்க்கும் ரிசப்ஷன் நடந்தது.

சென்னையிலிருந்து சுமித்ராவின் சித்தப்பா, சித்தியும், அத்தையின் குடும்பமும் முன் அழைப்பின் பேரிலேயே வந்திருந்தார்கள்.

ரிசப்ஷனுக்கு என்று சின்னத்துரை உறவினர் மூலமாக ஐந்தாறு பட்டுப் புடவைகளைச் சென்னையிலிருந்து வரவழைத்திருந்தார். சரிகைகள் பளபளத்த சேலைகளைத் தங்கைக்கு என்று எடுத்து வைத்த சுமித்ரா, கத்தரிப்பூ நிறத்தில் பச்சை பார்டரில் இருந்த புடவையைத் தனக்கு எடுத்து வைத்தாள்.

ரிசப்ஷனில் அவனைப் பார்க்கப் போகிறோம் என்று குதூகலிக்க மனசு சட்டென்று தொய்ந்தது. வெறுப்புடன், சதா தன் மேல் கண்களை ஓட்டும் ரவீஷ்க்கு தான் ஒரு பொருட்டே இல்லை என்பது மனதில் பெரிய வெற்றிடத்தை எழுப்பியது.

ரிசப்ஷன் அன்று அம்மாவின் உதவியுடன் அந்தக் கத்தரிப்பூ நிறப் பட்டுப் புடவையைக் கட்டினாள். கழுத்தில் கத்தரிப்பூ நிறக் கல் பதித்த சின்ன லாக்கெட்டுடன் கூடிய செயினும் காதில் அதே நிறத்தில் தொங்கட்டானும் அணிந்தாள். தலை முடியை 'ப்ரன்ஞ் நாட்' போட்டு ஒதுக்கினாள்.



கண்ணாடியில் அவள் உருவத்தைப் பார்க்க அவளுக்கே வித்தியாசமாக இருந்தது.

''என் கண்ணே பட்டுடும் போல. அவ்வளவு அழகு!'' என்று கண் திருஷ்டி எடுத்து விட்டு நடந்தாள் மங்களம்.

ரிசப்ஷனில் பார்க்கையில் ரவீஷ் மனம் நோக ஏதாவது சொல்லி விடுவானோ? வீணே மனக்கசப்பை வளர விடுவதில் சுமித்ராவிற்குப் பிரியமேயில்லை. பேசினால்தானே வாக்கு வாதம் வரும். அதனால் அவனிடம் தனிமையில் பேசும்படியான சந்தர்ப்பம் அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருந்தாள்.

வாசலிலேயே வரவேற்புக்காக நின்று கொண்டிருந்த ரவீஷ், உறவினர் புடைசூழ, மெல்லிய பூங்கொடி இடம் பெயர்வதைப் போல் நடந்து வந்த சுமித்ராவின் அழகில், அவளிடமிருந்து பார்வையை மீட்க வழி தெரியாமல் திகைத்தான்.

சின்னத்துரை ரவீஷின் கைகளைத் தன் இரு கரத்தாலும் பற்றி உணர்ச்சி வசப்பட, ரவீஷ் ஒரு புன்னகையால் அவரை ஏற்றான்.

ஸ்வாதியின் உண்மையான காதலைக் கடந்த மூன்று வார காலமாகக் கண் கூடாகக் கண்டவனுக்கு, மனம் மிகவும் லேசானது. தம்பியைப் பற்றிப் பிடித்திருந்த பெரும் கவலையும் நீங்கியது.

உதட்டை இழுத்துப் பிடித்து சுமித்ராவும் சம்பிரதாயமாக, ''ஹலோ'' என்று ரவீஷின் முகம் பார்த்துச் சொல்லி விட்டு நகர்ந்தாள்.

உலகத்தையே வென்று விட்டது போல் முகமெல்லாம் பிரகாசிக்க நின்று கொண்டிருந்த மணமக்கள் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தனர். சின்னத்துரையும், மங்களமும் மகளைக் கட்டிப் பிடித்து உச்சி முகர்ந்தனர்.

மகள் ஓடிப்போய், அவர்களுக்குக் கொடுத்த துன்பம் ஏதோ போன ஜென்மத்தில் நடந்தது போல அவர்கள் மறந்து போனார்கள். சுமித்ரா எதிர்ப்பட்ட குடும்ப நண்பர்களிடம் பேசிக் குசலம் விசாரித்த பின்பு மெதுவாகத் தங்கையிடம் செல்ல,

ஸ்வாதி அவனை இடுப்போடு வளைத்து இறுகக் கட்டிக் கொண்டான்.

"ஐய்.. விடு.. விடு ஸ்வாதி. நீ என்னை இறுக்குவதைப் பார்த்துச் சஞ்சய் பொறாமை கண்களில் வழிய நிற்பதைப் பார்!" என்று சுமித்ரா மெல்ல அவர்களைக் கிண்டலடிக்க, பதிலாக சஞ்சய் -

"பொறாமை இவ்விடத்தில் இல்லை. அவன் உங்களை அணைப்பதில் பொறாமைப்படும் ஆள் அங்கே..." என்று இழுத்தபடி வரவேற்பில் நின்றிருந்த ரவீஷ்ஷைச் சஞ்சய் கண்களில் குறும்புடன் பார்க்க, அவன் பார்வையைத் தொடர்ந்த சுமித்ரா ரவீஷின் கண்களைச் சந்திக்க, முகத்தில் ரத்தம் குப்பென்று பாய்ந்து முகம் சிவந்து போயிற்று.

ஒருவாறு புரிந்த ஸ்வாதி,

"என்னது...?" என்று ஆச்சர்யத்தால் விழி விரிக்க,

"ச்சு... ப்ளீஸ் இந்த மாதிரி விளையாட்டுப் பேச்செல்லாம் வேண்டாம். ஐ டோண்ட் லைக்!" என்று சுமித்ரா கண்களைச் சடாரென்று வேறு புறம் திருப்பி சற்று நிதானித்தபடி சொல்ல,

"ஹேய்... இது விளையாட்டென்று யார் சொன்னா? நிஜம்தான். வேண்டுமென்றால் அண்ணனையே கேட்கலாமா?" என்று சஞ்சய் மேலும் குறும்புடன் சொல்ல,

"இப்படிப் பேசினால், நான் போய்விடுவேன்!" என்று கண்டிப்பான குரலில் சுமித்ரா பேச, சஞ்சய் அழகாகச் சிரிக்க, பேச்சு அத்துடன் முடிந்தது.

மற்றொரு மேடையில் இனிமையான வீணைக் கச்சேரி நடந்து கொண்டிருக்க, சுமித்ரா கொஞ்ச நேரம் வீணைக் கச்சேரியை ரசிக்கும் வகையில் உட்கார்ந்து விட்டாள்.

சஞ்சயின் பேச்சுக்கள் சுமித்ராவின் இதயத்தைப் பலமாகத் தாக்கின. இல்லாத ஒன்றை இருக்குமா என்று ஏங்க வைத்தன. சஞ்சய் ஏன் இப்படிப் பேசினான் என்று யோசித்தாள். ஆனால் அவளைத் தனிமையில் இருக்க யார் விட்டார்கள்?



ஒரு குஜராத்தி சினேகிதரின் மனைவி சுமித்ராவிடம், அவள் அணிந்திருந்த புடவையைப் போன்ற ஒன்றைச் சென்னையிலிருந்து வருவித்துத் தர முடியுமா என்று கேட்டார். அதற்குள் ஸ்வாதியின் நெருங்கிய தோழர் தோழியர் நாலைந்து பேர் வந்துவிட, சுமித்ரா அவர்களை வரவேற்று, அவர்களுடன் பேச்சுக் கொடுத்தாள்.

"ஸ்வாதி ரொம்ப லக்கி. மேட் ஃபார் ஈச் அதர் காண்டெஸ்டுக்கு இரண்டு பேரும் போனால் முதல் பரிசு அவர்களுக்கு நிச்சயம். பயங்கரப் பொருத்தம்!" என்று பல கதைகளையும் பேசி அரட்டை அடித்தனர்.

அவர்கள் சாப்பிட்டு விட்டுக் கிளம்பவும், மங்களம் மேடையின் ஒரு பக்கத்திலிருந்து சாடையாக அழைக்க, வழக்கத்துக்கு விரோதமாக அணிந்திருந்த சேலையின் சரிகை நாற்காலியின் வளைவில் சிக்கி இழுக்க, அந்த தடுமாற்றத்தில் கூடவே வழுவழுப்பான கிரானைட் தரையும் அவளை வழுக்கிவிட, இடப்புறமாக சுமித்ராவை நோக்கி வந்து கொண்டிருந்த ரவீஷ், இரண்டெட்டில் தாவி, தன் இரு வலிய கரங்களால் தாங்கிப் பிடித்தான்.

சமாளித்துக் கொண்டு விலகி, உதவியவனுக்கு "தாங்க்ஸ்" என்று சொல்லி நிமிர்ந்து பார்த்த சுமித்ராவின் நெஞ்சு தடதடத்தது.

அவனோ சுமித்ராவின் மேல் வைத்த கண்களை அசைக்கவே இல்லை.

"எதற்காகத் தாங்க்ஸ் சுமித்ரா?" அவன் கேட்டது மெதுவாக என்றாலும், அந்தக் கேள்வியில் ஏதோ விஷயம் இருந்தது.

அவள் நெஞ்சு தடதடக்கும் ஓசை அவனுக்குக் கேட்டு விடுமோ என்ற அச்சத்துடன் அவன் கேள்வியும் புரியாமல், சுமித்ரா குழம்ப,

"நில நடுக்கத்தின் போது என் உயிரைக் காட்டிலும் உன்னைக் காப்பதில் முனைந்தேனே... அதற்காகவா? நீ வந்து சொன்னாய் என்று உன் தங்கையை நம்பி, என் உயிரான

தம்பியையே ஒப்படைத்தேனே அதற்காகவா...? சொல்!'' என்று அழுத்தம் திருத்தமாக ஒற்றைப் புருவத்தை வில்லாக வளைத்தபடி கேட்டு, அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

சொற்களைப் போன்ற ஆற்றல் வாய்ந்த கருவி வேறெதுவும் இல்லை. படைக்கவும், காக்கவும் வல்லமை கொண்ட அவன் பேசிய சொற்களின் உள்ளிருந்த அர்த்தம், சுமித்ராவின் இதயத்தைப் பல குட்டிக்கரணங்கள் போட வைத்தது.

''ந... நா... ணா... என் வார்த்தைக்கா... கா... வா... நான்... என்ன செய்தேன்?'' என்ற சுமித்ராவின் வார்த்தைகள் மட்டும் தடுமாறவில்லை. அவளே தடுமாறிப் போனாள்.

''நீயேதான் உன் வார்த்தைக்காகவேதான்!'' என்று அவளைப் போலவே மெல்ல வார்த்தைகளை முணுமுணுப்பாகக் கொட்டியபடி அங்கிருந்து அவன் மெல்ல நகர, சுமித்ரா சிலை போல் நின்று விட்டாள். சிலையேதான்.

அதன் பிறகு அருகில் வந்த மங்களம் சுமித்ராவிடம் ஏதோ கேட்க, வாய்தான் பேசியதே தவிர, அது என்ன பேசியது என்று சுமித்ராவிற்குச் சத்தியமாகத் தெரியாது.

விழா முடிந்து சஞ்சயும் ஸ்வாதியும் ஒரு காரில் ஏற, மறு காரில் மங்களமும், சின்னத்துரையும் சென்னையிலிருந்து வந்த உறவினர்களுடன் ஏற, சுமித்ரா அடுத்த காரில் வருவதாகச் சொல்லிப் பின் தங்கினாள்.

கடைசியில் எஞ்சி நின்றவர்கள் சுமித்ராவும் ரவீஷும்.

அவ்வளவு தூரம் பூடகமாக வார்த்தைகளைச் செருகி ரவீஷ் பேசிய பேச்சுக்குத் தனிமையில் ரவீஷிடம் இரு வார்த்தைகளாவது பேசிவிட மனம் தவித்தது.

ரவீஷ் ஒன்றும் பேசாமல் தன் காரைக் கிளப்பி, முன் கதவையும் அவளுக்காகத் திறந்துவிட ஏறி அமர்ந்தாள் சுமித்ரா.

சில கேள்விகளுக்கும், சில செய்கைகளுக்கும் சில சமயங்களில் கேள்வியும் தேவையில்லை. பதிலும் தேவையில்லை.

அங்கே மௌனம் உரத்த குரலில் பேசியது.



# 23

தயங்கித் தயங்கிப் பேச நினைத்த சுமித்ராவிற்குக் குரலே எழும்பவில்லை.

எப்படிப் பேசுவது?

''தங்கையின் விஷயம் என்றால் மட்டும் பேச்சுக்கு வேகம் வரும் போல!'' ஏளனம் போல அவன் பேசினாலும், அந்தக் குரலில் வருத்தம் நிறைய இருந்தது.

சுமித்ரா உதட்டைக் கடித்தாள்.

காரை ஓட்டியபடி மெதுவாக அவள் புறம் திரும்பிய ரவீஷ், ''ஒரு நன்றிக்கு இவ்வளவு பஞ்சமா? ஏன் இவ்வளவு கஷ்டம் சுமித்ரா? ஒரு வேளை நான் நன்றிக்கு உகந்தவன் இல்லையோ!'' என்று கேட்க, சட்டென்று உடைந்தாள் சுமித்ரா.

நிலநடுக்கம் தொடங்கி, நடந்த சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கை கோர்த்து வர, அதன் மேல் அவன் காதலும் படர்ந்து வர, ஒரு வித இயலாமையும், ஏக்கமும் சுமித்ராவின் கண்களில் கண்ணீராக மடமடவென்று இறங்கியது. முகத்தைத் திருப்பித் தன் கண்ணீரை மறைக்க முயல, அது முடியாமல் போனது. கண்ணீரைக் கண்டுவிட்ட ரவீஷ் காரை ஒதுக்கி ஓரமாகச் சட்டென்று நிறுத்தினான்.

சற்று நேரம் இருவரிடமும் சப்தம் இல்லை. ஸ்டீயரிங் வீலை அழுத்திப் பிடித்திருந்த ரவீஷின் கைகள் இறுகியிருந்தன. சுமித்ராவை எந்த வகையில் நெருங்கினாலும் விடை கிடைக்காமல் போனதில் அவன் மனம் வெதும்பிப் போனது.

''நீரின் ஆழத்தை அளந்தாலும் ஒரு பெண்ணின் நெஞ்சின் ஆழத்தை அளக்கவே முடியாது என்பது என் அனுபவத்தில் நான் கண்ட உண்மை!'' என்று ரவீஷின் குரல் கணீர் என்று கேட்க,

சுமித்ரா தன்னை நிதானப்படுத்தினாள். அதற்குள் அவன் தொடர்ந்தான்.

"நான் உன்னிடம் என்னை இழந்து தவிப்பது இன்னுமா உனக்குப் புரியவில்லை சுமித்ரா. ஐ ஆம் இன் லவ்!" என்று சொல்கையில் அவன் முகம் சிவந்து போனதைக் கண்டு, சுமித்ராவிற்கு மூச்சு நின்று பின் நெஞ்சு வேக வேகமாகத் தன் வேலையைச் செய்தது. மேனி சிலிர்த்துப் போனது.

காண்பது கனவா?

அச்சு அசலாக அவன் அருகில் அமர்ந்திருக்கையில் கனவில்லை.

அந்த நிசப்தமான சில நொடிகள் கடந்த பின், சுமித்ரா "நா... னும்தான்!" என்று நாணத்தில் செக்கச் சிவந்த கன்னத்துடன் கண்களைத் தாழ்த்தியபடி சொல்ல, அவளையே நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்த ரவீஷ், சட்டென்று அவளைத் தன்னுடன் அணைத்தான். அந்த அணைப்பில் இருந்த நெருக்கத்தில் இவ்வளவு நாள் கண்ணாம்பூச்சி ஆட்டம் போட்ட நில நடுக்கத்தில் தொடங்கி, தொடர்ந்த காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் இருவரும் இருக்கும் சூழ்நிலையை உணர்ந்தனர்.

சுமித்ராவிற்குக் கேட்கவும் கேள்விகள் இருந்தன.

"பணக்கார ஆட்களைப் பிடிக்க அலைபவள் என்று என்னை வெறுத்து வெறுத்துப் பேசினவருக்கு என் மேல் காதல் என்றால் இன்னும் என்னால் நம்ப முடியவில்லை. நம்பவே முடியவில்லை!" என்று சிலிர்ப்புடன் சுமித்ரா யோசித்து யோசித்துப் பேச,

"உனக்கு மூளைக்குப் பதில் தலையில் களிமண் ஏதும் இருக்கிறதா என்று செக்கப் செய்ய வேண்டும்!" என்றபடி கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தான்.

சிரிப்பில் அவன் முகம் மாறிய அசாத்தியமான அழகைக் கண்டு ஒரு கணம் திடுக்கிட்டாலும் அவளுடைய கிண்டலில் கோபமும் வந்தது.



எதற்கு இந்தப் பரிகாசம்?

"களிமண்ணா? நான் டிஸ்டிங்ஷன் ஸ்டூடண்ட் ஆக்கும். காலேஜ் ஃபர்ஸ்ட். என்னைப் போய்..." என்று மூக்கு நுனி சிவக்கப் பேசிய சுமித்ராவை அவன் மேலே பேச விடாமல் ஒற்றை விரலால் அவள் உதட்டை மூடினான்.

அவன் ஸ்பரிசத்தில் அவளுக்குப் பேச்சே எழவில்லை. சுவாசம் துரிதமானது.

அவனுக்கும் விரலை எடுக்க மனமில்லை போலும். மென்மையான ரோஜா இதழைத் தொட்டதும் முகம் சிவந்து போயிற்று. கூச்சத்துடன் மெல்ல நடுங்கும் விரல்களால் அவன் கையை விலக்கினாள்.

நொடியில் அவள் முகத்தில் தெரிந்த மாற்றங்களையும், கன்னங்களில் ஏறிய செம்மையையும் கண்டு, அவளை விழுங்கி விடுவது போல அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யூ ஆர் பியூட்டி ஃபுல் சுமித்ரா!" என்றபோது அவன் குரல் கரகரத்துப் போயிருந்தது.

சிறிது நேரம் அந்தக் காரில் மௌனம் ஆக்ரமித்தது. இருவரும் அந்த மௌனத்தில் தங்களைக் கரைத்துக் கொள்ளத் தயாராக இருந்தனர்.

ஒரு லாரி பெரிய ஹாரன் சத்தத்துடன் அவர்களின் மௌனத்தைக் கலைக்க, ரவீஷ், ஒரு நீண்டதொரு மூச்சை விட்டு, காரை மீண்டும் இயக்கினான்.

"களிமண் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது, நில நடுக்கத்தின் போது நான் என்னைப் பற்றிக் கூட நினைக்காமல், உன்னிடம்தானே சுற்றிச் சுற்றி வந்தேன். என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி மறைந்தவளை நான் என்னவென்று நினைப்பது. அன்று என் காரில் அடிபட இருந்தாயே, அன்றே நீ கவனித்திருப்பாய் என்று நினைத்தேன். அன்று நான் உபயோகப்படுத்திய வார்த்தைகள் என்னையுமறியாமல்

வெளிவந்தவை. அப்பொழுதும் உனக்குப் புரியவில்லை என்றால் நான் வேறு என்னவென்று சொல்வது. உன்னை மற்ற ஆண்களுடன் பார்க்கையில் நான் பொறாமையில் கொதித்தது புரியவில்லை என்றால் நம்ப வேண்டியதுதான்...'' என்று சலிப்புடன் சொன்னவன் மீண்டும்,

''சஞ்சய் உன்னை நோட்டம் பார்த்துவிட்டு, என்னிடம் சொன்னதால்தான் அவன் கொடுத்த நம்பிக்கையில் தான் நான் உன்னிடம் இன்று தைரியமாக என் காதலைக் கூறினேன். ஒரு நாள் ஆஸ்பத்திரியில் நம்முடைய பார்வைப் பரிமாற்றத்திலேயே அவன் நம்மை உணர்ந்திருக்கிறான் தெரியுமா?

''என் மேல் அன்பு இருக்கையில் என்னை நிறைய முறை தவிர்த்து இருக்கிறாயே சுமித்ரா. ஏன்? உன் அன்பை நீ ஒரு முறை கூடக் கோடிட்டுக் காட்டவில்லையே?''

''சும்மா சும்மா கோபப்பட்டு, திட்டியவரை நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று சொன்னால் அது கேலிக் கூத்தாகி விடாதா?'' என்று சுமித்ரா சொல்ல,

''நான் எங்கே கோபப்பட்டேன். நீயல்லவா கோபப்பட வைத்தாய்!'' என்று சொல்ல,

''நில நடுக்கம் நடந்த ஒரே இரவில், எனக்கு உங்களுடன் ஏதோ யுகம் யுகமாகச் சேர்ந்து வாழ்ந்த உணர்வை எனக்குத் தந்தது. உங்களை விட்டுப் பிரியப் போகிறோம் என்றதும், வாய் திறந்து விடை பெறக் கூட முடியாமல் கண்களில் கண்ணீர் வெள்ளமாகப் பாய, அதில் தோன்றிய அதிர்ச்சியில் நான் உங்களை நிமிர்ந்து கூடப் பார்க்கத் திராணியற்று ஓடி விட்டேன்!'' என்று சுமித்ரா தன் காதலைச் சின்ன இதழ் வளைவுடன் சொல்ல, ஸ்டீயரிங் வீலிலிருந்து ஒரு கையை எடுத்து, அவளின் கரங்களை அழுத்தினான் அவன்.

இருவரின் வாழ்க்கையும் ஆனந்தமாக அப்பொழுதே தொடங்கி விட்டது.

★